எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்கள் மேம்பாட்டு இதழ்

பன்மொழி மின்னிதழ்

மலர்-00000 இதழ்-0000 நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | மார்ச், ஏப்ரல் 2025



கட்டுரை

திருவாசகத்தில் பாவை விளையாட்டு
- ச. பர்வத கிருஷ்ணம்மாள்

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்
- மேனகா நரேஷ்

உரம் அருளும் குப்பை நாச்சியார்
- செ. ராஜேஸ்வரி

சீன சிந்தாமணி பெருந்தெரு
- எஸ். சாந்தினி பீ

நேர்காணல்

திருமதி. கலைச்செல்வி கோபால்
- மேனகா நரேஷ்

சிறுகதை

தனம்மா பாட்டி
- வி.கலாவதி

மலரே மௌனமா
- ராஜஸ்ரீ முரளி

கவிதை

என் கைகளை அன்போடு பற்றிக்கொள்
- செ. ராஜேஸ்வரி

அன்பு
- இரம்யாநடராஜன்

இது எந்த நிலை? !
- மஞ்சு

மேலும் பல....

மலர்-1 இதழ்-7,8 மார்ச், ஏப்ரல் 2025

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்(சிட்னி)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

1. என் கைகளை அன்போடு பற்றிக்கொள் 2
2. திருவாசகத்தில் பாவை விளையாட்டு 3
3. இது எந்த நிலை?! 7
4. தனம்மா பாட்டி 8
5. கதைகளின் வஞ்சம் 11
6. காமம் உருட்டும் சகுனியின் சொக்கட்டான்கள் 17
7. உருவத்தைத் தாண்டி 18
8. காதலியின் கனவுகளில் காகிதக் கப்பல்கள் 28
9. கேள்வியும் பதிலும் 29
10. இந்த நதிக்கரையில் 31
11. சுமையாகிப் போன குடும்பப் பொறுப்பு! 32
12. அமெரிக்கத் தமிழப் பெண் ஆளுமைகள்–7 35
13. மலரே மௌனமா 41
14. அன்பு 42
15. அந்தக் கால மனிதர்கள் 43
16. இந்தியப் பெண் விஞ்ஞானிகள் – 3 45
17. ஆனந்தி 49
18. ARANYANI 51
19. உரம் அருளும் குப்பை நாச்சியார் – தவ்வை 59
20. தன்னை அறிந்து தலைசிறந்து வாழ்க! 67
21. சீன சிந்தாமணி பெருந்தெரு 74

என் கைகளை அன்போடு பற்றிக்கொள்

மொழிபெயர்ப்புக் கவிதை

என் கைகளை கொஞ்சம் பற்றிக் கொள்வாயா
என்னை நீ காப்பாற்ற வேண்டாம் எனக்கென்று எதுவும் நீ செய்ய வேண்டாம்
என் வேதனைகளை நீ சுமக்க வேண்டாம்
என் கைகளை மட்டும் பற்றிக் கொள்
உன் வார்த்தைகளோ
உன் சிந்தனைகளோ
எனக்குத் தேவையில்லை
உன் தோள்களில் என்னை சுமக்கவும் வேண்டாம்
என் அருகில் சற்று உட்கார்ந்து இருப்பாயா

என் கண்ணீர் ஆறாகப் பெருகும் போது
என் இதயம் படபடக்கும் போது
என் மனம் ஏமாற்றும் போது
எனக்குள் நான் சுற்றித் திரியும்போது
நான் தனியாக இல்லை என்பதை
உன்னுடைய இருப்பினால்
நீ உணர்த்துவாயா?

என் இருட்டை
நான்தான் சந்திக்க வேண்டும்
என் வேதனையை
நான் தான் உணர வேண்டும்
என் காயத்துக்கு
நான் தான் மருந்திட வேண்டும் ஆனால் என் அன்பே!
நீ கொஞ்சம் என் அருகில் உட்கார்ந்திரு
அதை நான் எல்லோருக்கும் கம்பீரமாக காட்டிக் கொள்கிறேன்!

நான் என்னுடைய இருட்டின் காரணமாகவே பளிச்சென்று தெரிகிறேன்.
நான் உடைந்து போனாலும்
அழகாய்த் தோன்றுகிறேன்
எனக்கு இதயம் மென்மையாக
இருந்தும்
நான் வலிமையானவளாகத் தெரிகின்றேன்
நான் இருட்டில் பயணிக்கும் போது என் கைகளை அன்போடு பற்றிக்கொள்

என் இருட்டை நீக்கிவிடு என்று
நான் உன்னை கேட்கவில்லை
எனது நாட்களைப் பிரகாசமாக்க வேண்டும் என்று
நான் உன்னிடம் எதிர்பார்க்கவில்லை
என் துன்பங்களை நீ களைவாய் என்று
நான் நம்பவில்லை
நிழல் பூமியிலிருந்து நான் வெளியேறும் வரை
என் கைகளைப் பற்றிக் கொண்டு என் அருகில் உட்கார்ந்திரு
அதை மட்டுமே நான் விரும்புகிறேன் செய்வாய்தானே என் கண்ணே
நான் திரும்பி வரும் வரை
என் கைகளைப் பற்றிக் கொண்டிரு

- ஆங்கிலத்தில் ஜோ ஜோஹான்சன்
- தமிழில் செ. ராஜேஸ்வரி



திருவாசகத்தில் பாவை விளையாட்டு

பேரா. முனைவர்(திருமதி). ச. பரிவத கிருஷ்ணம்மாள்,
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி,
திருநெல்வேலி –627011.

தமிழ் இலக்கிய வகைமைகளுள் சமய இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நமது இந்து சமய இலக்கியங்களுள் சைவ அடியார்கள் அருளிச்செய்த பன்னிரண்டு சைவ சமய நூல்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. அவை பன்னிரு திருமுறைகள் எனப் போற்றப்படுகின்றன. அவற்றுள் எட்டாம் திருமுறையாகப் போற்றப்படுவது மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப்பட்ட திருவாசகம் ஆகும். மாணிக்கவாசகர் தாம் பெற்ற இறை அனுபவத்தைத் தம் திருவாசகப் பாடல்களில் உளமுருகப் பாடியுள்ளார். இதன் காரணமாகவே திருவாசகம் தோன்றிய காலந்தொட்டு இன்று வரை மனம் கரைத்து மலம் கெடுக்கும் வாசகமாகக் கருதப்படுகின்றது.

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் தனது விளையாட்டாகக் கொண்டவன். கம்பரும் கூட "அலகிலா விளையாட்டு உடையான்" என்றே இறைவனைப் போற்றுகின்றார். மாணிக்கவாசகரும் "காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி" மகிழும் இறைவனைப் போற்றுகின்றார். அத்தகு இறைவனால் படைக்கப்பட்ட உலக உயிர்களின் அன்றாட வாழ்விலும் விளையாட்டு இன்றியமையா இடம் பெற்றுவிட்டது.

விளையாட்டுகள்

விளையாட்டு என்பது ஒரு கலையாகும். மனிதனின் நல்வாழ்விற்கும், தெளிந்த சிந்தனைத் திறனுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் விளையாட்டு மிகமிக இன்றியமையாதது. விளையாட்டுகள் அவற்றில் பங்கு கொள்பவர்களது உடலையும் மனதையும் வளப்படுத்துகின்றன. பங்கு கொள்பவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் புத்துணர்ச்சியை அளிக்கின்றன. கட்டுப்பாட்டையும், ஒற்றுமை உணர்வையும், கூட்டுறவு மனப்பான்மையையும் அளிக்கின்றன. பொழுது போக்கிற்காக விளையாடப்படும் இவ்விளையாட்டுகள் மன அழுத்தம் குறைக்கும் மாமருந்தாகச் செயல்பட்டு, மனதை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்வதோடு, உடல்நலம் காக்கும் உடற்பயிற்சியாகவும் அமைகின்றன. பொதுவாக விளையாட்டுகளை ஆடவர் விளையாட்டுகள், மகளிர் விளையாட்டுகள், இருபாலர் விளையாட்டுகள் என வகைப்படுத்தலாம். பொழுது போக்காகவும், மகிழ்ச்சியளிப்பதாகவும் மட்டுமின்றி கலையாகவும் திகழ்கின்ற

இவ்விளையாட்டுகளை அகவிளையாட்டுகள் என்றும், புறவிளையாட்டுகள் என்றும் பிரிக்கலாம். இவ்வகையில் மகளிர் ஆடுவன முதல் வகையிலும், ஆடவர் விளையாட்டுகள் இரண்டாம் வகையிலும் அடங்கும்.

மகளிர் விளையாட்டுகள்

மகளிர் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தமையைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். விளையாடித் திரிந்த மகளிர 'ஓரை மகளிர்' என்றே சங்க இலக்கியங்கள் கூறும். மகளிர் தமது மென்மைக்கும், உள்ள இயல்புக்கும் ஏற்றவாறு விளையாடல்களை அமைத்து விளையாடினர். அவர்களது விளையாடல்கள் மிகுதியும் நீர்க் கரைகளில், மணல் திட்டுகளில் என இயற்கைச் சூழ்நிலைகளைத் தழுவியே அமைந்திருந்தன எனத் தெரிகிறது. ஓடி விளையாடுதல், ஆடி விளையாடுதல், உருட்டி விளையாடுதல், அழைத்து விளையாடுதல், வள்ளை அகவுதல், ஊசல், தூங்கல் என்று விளையாட்டு நெறிகள் பல்வேறுபட்டு விளங்கின. மகளிர் விளையாடல்களாகக் கண்புதைத்து ஒளிந்தாடல், கழங்காடல், குரவையாடுதல், சிறுசோறு சமைத்தல், சிற்றில் கட்டி விளையாடல், பாவை விளையாட்டு, மலர் கொய்தல் முதலியன சங்க இலக்கியங்களில் கூறப்படுகின்றன.

திருவாசகத்தில் மகளிர் விளையாட்டுகள்

பாவையாடல், அம்மானைஆடல், சுண்ணமிடித்தல், தும்பியைப் பிடித்தல், தெள்ளேணம் கொட்டுதல், சாழல், பூப்பறித்தல், உந்தி பறத்தல், தோள் நோக்கம், ஊசல் ஆகிய பத்து வகையான மகளிர் விளையாட்டுகள் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன. இவ்விளையாட்டுகள் பாடலுடன் இணைந்து அமைந்துள்ளன. பாவையாடல் என்னும் விளையாட்டு குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

பாவையாடல்

'பாவை' என்பதற்கு 'உருவம்' என்று பொருள். பாவை என்ற சொல் ஆண் – பெண் என்ற இருபால் உருவங்களையும் குறிக்கும். பாவை புனைந்து பெண்கள் விளையாடியுள்ளனர்.

இயற்கையில் கிடைத்த குரவமலர் கொண்டு பாவை செய்து விளையாடியதைக் 'குரவம்பாவை' என்ற சங்க இலக்கியத் தொடர் தெரிவிக்கின்றது. மணல், மலர், பவழம், முத்து, சிப்பி, பொன் முதலியன பாவை செய்வதற்குப் பயன்பட்டுள்ளன. ஆண், பெண் என இருவகை உருவங்களும் செய்து, சிற்றில் அமைத்து, அதனுள் உருவங்களை வைத்து மகிழ்ந்துள்ளனர். மேலும் பாவையைக் குழந்தையாகக் கற்பித்துக் கொண்டு, தாலாட்டிக் கதைகள் கூறியுள்ளனர். நாள் முழுவதும் நேரம் போவது தெரியாமல் மிக மகிழ்ச்சியாகக் குழந்தைகளால் விளையாடப்பட்ட இதனை ஓர் அறிவு சார்ந்த விளையாட்டு எனச் சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

"வாலிழைமட மங்கையர்
வரிமணல்புனை பாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து"

ஏன்று புறநானூற்றின் 11-ஆவது பாடல் பாவை விளையாட்டு பற்றிக் கூறுகிறது.

பாவை புனைந்து விளையாடிய சிறுமியர் கன்னிப் பருவம் எய்தியதும், பாவை நோன்பு நோற்கத் தொடங்கினர். நீர்த்துறைகளின் மணற்பரப்பில் மண்ணைக் குவித்தோ அல்லது இல்லத்திலிருந்து கொண்டு வந்த தேங்காயைக் கும்பத்தில் வைத்தோ அதைப் பாவையாகப் பாவித்து, தங்களுக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் எனவும் நாடு முழுவதும் மழை பெய்து செழிக்க வேண்டும் எனவும் நோன்பு நோற்றனர். இத்தகைய நோன்பு 'தைந்நீராடல்' என்ற பெயரால் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. பரிபாடல் பாவை நோன்பை 'அம்பா ஆடல்' என்ற பெயரால் சுட்டுகிறது. திருவாசகத்தில் அமைந்துள்ள திருவெம்பாவைப் பதிகம் இந்நோன்பை 'மார்கழி நீராடல்' என்று குறிப்பிடுகின்றது.

திருவெம்பாவைப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'ஏலோர் எம்பாவாய்' என முடிகின்றது. 'ஏல்' என்பதற்கு 'எழுதல்' என்று பொருள். 'ஓர்' என்பதற்கு 'உணர்' 'நினை' என்பது பொருள். மார்கழி மாதத்தின் அதிகாலைப் பொழுதில் துயிலெழுந்த இளம்பெண்கள்தம் தோழியரோடு ஒன்றுகூடி, வீதியில் செல்லும்போதே, விளையாட்டாக, இறைவன் புகழைப் பாடிக்கொண்டு சென்று, இந்நோன்பு நோற்க வருமாறு தங்கள் தோழியரை எழுப்புவர். அதன் பின்னர் இறைவனைப் பாடும் வகை கூறி, இருஞ்சுனை நீராடி, இறைவனை வேண்டித் தங்கள் நோன்பை நிறைவு செய்வதாகப் பாடல் அமைந்துள்ளது. இங்ஙனம் சுனை நீராடி, வாழ்வு வளமாக அமைய இறைவனை வேண்டும் பாவையர் மேற்கொள்ளும் நீராடலே பாவையாடலாகத் திருவாசகத்தில் அமைந்துள்ளது.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடலின் செய்திகள் வருமாறு:-

1. தோழியரை எழுப்புதல் - முதல் 8 பாடல்கள்
2. இறைவனை வேண்டுதல் - 9,11,19 ஆகிய 3 பாடல்கள்
3. இறைவனை எவ்வாறு பாடுவது எனல் - 10 –ஆவது பாடல்
4. இறைவனை ஏத்தி இருஞ்சுனை நீராடல் - 12 முதல் 18 வரையுள்ள 7 பாடல்கள்
5. இவற்றினிடையே மழையே பொழிக எனல் - 16 –ஆவது பாடல்
6. போற்றிப் பாடுதல் - 20 –ஆவது பாடல்

திருவெம்பாவைப் பாடல்களுள் முதல் எட்டுப் பாடல்களில் 'மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்' என்றும், 'நேரிழையீர் சீசீ இவையும் சிலவோ விளையாடி ஏசும் இடம் ஈதோ' என்றும், 'ஒண்ணித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ' 'நீயே வந்து எண்ணிக் குறையில் துயில்' என்றும், 'இன்னம் புலர்ந்தின்றோ', 'என்னே துயிலின் பரிசு' என்றும் தோழியர் ஒருவரை ஒருவர் விளையாட்டாக எள்ளி நகையாடித் துயிலெழுப்புகின்றனர். இப்பகுதியில் அமைந்துள்ள பொழுது புலரும் காட்சியும், பள்ளி கொள்ளும் பாவையரின் இயல்பும், அவர்தம் பதிலும் இயல்பாக அமைந்து திருவெம்பாவை எனும் இப்பகுதியை விளையாட்டுப் பாடலாகக் காட்டி நிற்கின்றது. இங்கு பாவை என்னும் சொல் பாவையரைக் குறித்து நின்ற சொல்லாகவே உள்ளது. நல்ல பண்புள்ள ஆடவரைத் திருமணம் செய்து கொள வேண்டும் என்ற நோக்கத்துடனும் மழை பெய்து நாடு வளத்துடன் திகழ வேண்டும் என்ற மனப்பாங்குடனும் பாவையர் பாடி நீராடுவதாக அமையும் இப்பாடல்கள் இன்றும் மகளிரால் மார்கழி மாதத்தில் பாடப்படுவது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

ஒரு நாடு முன்னேற்றம் பெறவேண்டுமானால் அந்நாட்டிலுள்ள மகளிர் முன்னேற்றம் பெறவேண்டும் என்பது சமூகவியலாளர் கூறும் கருத்தாகும். மகளிர் முன்னேறாத நாடு, முழு முன்னேற்றம் அடைய முடியாது என்பதை அன்றே அறிந்திருந்த மாணிக்கவாசகர் இளம் மகளிருக்கு இறையுணர்வை ஊட்டுவதே அவர்கள் முன்னேற்றத்திற்கு வழி எனக் கண்டார். அதனை அறிவுரையாக்க் கூறாமல் அவர்கள் விளையாடும் விளையாட்டுப் பாடல்களிலேயே இந்த அருங்கருத்தைப் புகுத்தினார். அவ்வகையில் பாவையாடல் என்னும் இவ்விளையாட்டு இறையுணர்வையும், நாட்டுப்பற்றையும் ஊட்டுவதோடு, குழுவாகக் கூடிப் பாடும்போது உள்ளத்தை மகிழ்ச்சியுறச் செய்கின்றது. மேலும் பெண்கள் தம் தோழியரை எழுப்ப நடந்து செல்வது நடைப்பயிற்சியாக அமைந்து அவர்களின் உடலுக்கு உரமூட்டுகின்றது.. உறங்குகின்ற பெண்களை எழுப்பும் நிலையில் அவர்தம் மதிவன்மை வெளிப்படுகின்றது.

"இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் "

விளையாடுபவன் இறைவன் என்று இறைவனின் விளையாட்டு குறித்துக் கூறும் அடிகளார்,

"ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்"

என்று அவ்விளையாட்டின் பயன் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். விளையாட்டில் ஏற்படும் இன்பம் விளையாடுபவனுக்கே நிகழ்வதாகும். ஆனால் இறைவனின் விளையாட்டு அவனுக்கு எவ்வித இன்பத்தையும் தருவதில்லை. மாறாக உலக உயிர்களை அவ்விளையாட்டு ஆட்கொண்டு அருள்கின்றது. எனவே தான், பெண்கள் "உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம் . இனிப் பிறப்பெடுத்து அடைய வேண்டியது ஒன்றுமில்லை. மறுபடியும் பிறப்பெடுத்து, இளைத்து விடாமல் எம்மைக் காப்பாயாக"

என்று வேண்டுகின்றனர். உலகைப் படைத்து விளையாடும் தலைவன் ஒருவனால் தாம் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் தாம் அடைந்த அதே அனுபவத்தைப் பெண்களும் அடைவதாகச் சித்தரித்துள்ளார் மாணிக்கவாசகர். இங்ஙனம் வயதில் இளைய மகளிரையும் தம் விளையாட்டுப் பாடல்களின் மூலம் அடிகளார் இறையுணர்வு பெறச் செய்துள்ளார்.

இது எந்த நிலை? !

எப்போதும்
இலைமறை காயாகவே இருக்கும்
உன் காதலும்
முந்திரிப் பழத்தையும்
முந்திப் பார்க்கும்
கொட்டையின் நிகர்
என் காதலும்
ஒத்துப் போவது எப்படி?

ஸ்பரிசங்களாலும்
அணைப்புகளாலும் மட்டுமே
காட்டத் தெரிந்த
உன் அன்பும்
சத்தமான முத்தங்களாலும்
வாய்மொழி வர்ணனைகளாலும்
வெளிப்படும்
என் அன்பும்
ஒன்றி நிற்பது எங்ஙனம்?

உறக்கப் பேசினாலும்
உள்வாங்கிக் கொள்கிறாயா
என எண்ணவைக்கும்
அசைவுகளற்ற உன் முகமும்

ஒன்றுமில்லாமைக்கும்
உன் ஒரு சிறு "உச்" சிற்கும்
ஊர்க் கிணறு
நிறையும் வரை
விழிநீரை வீணாய்க் கொட்டும்
என் அகமும்
இணைந்து கொள்வது எவ்வாறு?

நான் வாரித் தூவிக்
குவித்து வைக்கும்
வசை மலையை
ஒற்றைப் பார்வையாலும்
நமுட்டுச் சிரிப்பாலும்
சுக்குநூறாக்கும்
சூட்சமம் தெரிந்து வைத்திருக்கும்
நீயும் நானும்
பிணைந்திருப்பது எந்த நிலை?
அன்புடன்
- மஞ்சு

தனம்மா பாட்டி

முனைவர் வி.கலாவதி,
தமிழ்த்துறைத் தலைவர்.
உதவிப்பேராசிரியர்
இராஜபாளையம் இராஜ கீகள் கல்லூரி,
இராஜபாளையம்

தனம்மா பாட்டி எண்பத்தி நான்கு வயதானாலும் தள்ளாடி தள்ளாடி அம்மியில் சாந்து அரைத்து மணக்க மணக்க குழம்பு வைத்து தாத்தாவிற்கு மதிய உணவு பரிமாறும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். தாத்தா கரடு முரடான குரலில் பாட்டியிடம் பேசினாலும் இருவருக்குமான அன்பை பார்ப்பவர் புரிந்து கொள்ள முடியும். ரேஷன் வாங்க போன தாத்தா வராவிட்டால், வீட்டுக்கும் வாசலுக்கும் குட்டிப்போட்ட பூனை மாதிரி பாட்டி எட்டி எட்டி பார்த்து முணு முணுத்துக் கொண்டிருப்பாள். இந்த மனுசன் இன்னும் வரலையே... எங்க போயி தொலைஞ்சாரோ... என்று முணங்கிக் கொண்டு ரேஷன் கடைக்குச் சென்றவர்கள் யாரேனும் திரும்பி வந்தால் இந்த மனுசன பாத்தீங்களா? என்று விசாரித்துக் கொண்டே இருப்பாள்.

தாத்தா சர்வோதயாவில் வேலை பார்த்தவர். அவருக்கு வரும் பென்சன் பணத்தில் சிக்கனமாகக் குடும்பம் நடத்தும் தனம்மா பாட்டி இரண்டு தெரு அளவிற்கு வீட்டைக் கட்டி வாடகைக்கு விட்டு வரும் வருமானத்தை சேமித்து வைத்திருக்கிறாள். இந்த தம்பதிக்கு ஒரு மகள். பெயர்கல்யாணி. தனம்மாதனது அண்ணன் மகனுக்கு கல்யாணியைத் திருமணம் செய்து வைத்திருந்தாள். அன்னியத்தில் கட்டிக் கொடுத்தால், நாளை பின்ன நம்மை கண்டு கொள்ள ஆளில்லையே என எண்ணினாளோ எண்ணவோ தெரியாது. ஆனால் எப்பொழுதும் யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது என்பதில் தெளிவாக இருப்பாள். எது கடையில் வாங்க வேண்டும் என்றாலும் தானே சென்று வாங்கி வருவாள். மாடியில் குடியிருக்கும் மகளை எதிர் பார்க்க மாட்டாள். காலையில் எழுந்தவுடன் இருபக்க வாசலையும் தாத்தா கூட்டித் தெளித்து விடுவார். கோலம் போட வரும் தனம்மா பாட்டி படியில் தண்ணீர் தேங்கியிருந்தால் தாத்தாவை வைது தீர்த்து விடுவாள். காலை சிற்றுண்டி முதல் இரவு உறக்கம் வரை விறகடுப்பைப் பயன்படுத்தி பழக்கப்பட்டவள் தனம்மா பாட்டி. எத்தனை வசதி இருந்தாலும் ரேஷன் அரிசியில் தான் மதிய உணவும் சிற்றுண்டியும் செய்வாள். இவர்கள் இருவரும் சத்தமாகப் பேசிக்கொண்டாலே போதும் மாடியில் இருக்கும் மகளும் மருமகனும் கேட்டால், சம்பந்தமில்லாமல் தனம்மா பாட்டியையும் தாத்தாவையும் ஊருக்கே கேட்கும் மைக்செட் போல திட்டி தீர்த்து

விடுவார்கள். இவர்கள் சத்தம் கேட்டால் பாட்டியும் தாத்தாவும் அமைதி ஆகி கதவைச் சார்த்திக் கொண்டு வெளியே மாலை வரை வர மாட்டார்கள்.

கல்யாணி தம்பதிக்கு குழந்தை இல்லாததால் கல்யாணியின் கணவன் லெட்சுமணனின் தம்பிக்குப் பிறந்த மூன்றாவது பெண் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தனர். அவளைப் படிக்க வைத்து மென்பொருள் நிறுவனத்தில் பணியமர்த்தி அழகு பார்த்தனர். அவளுக்கான மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்த கல்யாணி தம்பதியினர் எப்படிப்பட்ட மாப்பிள்ளையைத் தேர்வு செய்தனர் என்பதை எல்லோருக்கும் கேட்கும் படியாகவே பேசிக் கொண்டதுதான் ஆச்சரியம்.

எல்லா வசதியும் நம்மகிட்ட இருக்கு, வர்ற பையன் கூட பிறந்தவங்க யாரும் இல்லாம, அப்பா அம்மா மட்டும் இருக்கிற வீடா, வசதி குறைவா இருந்தா தான் நம்ம பொண்ணு பின்னாடி குட்டி போட்ட பூனை மாதிரி சுத்தி சுத்தி வருவான்னு தேடி தேடி அப்படியே ஒரு நல்ல பையனா பார்த்து கல்யாணம் பண்ணி வெச்சுட்டாங்க. சரி நம்ம கதாநாயகன் தாத்தா, பாட்டி கதைக்கு வருவோம்.

தனம்மா பாட்டி தள்ளாத வயதிலும் தன் உறவுக்காரர்களைப் பார்த்து வீடுகளில் யார் வீட்டு விசேசமாக இருந்தாலும் தவறாமல் கலந்து கொள்வார்கள். அதிலும் பாட்டி கருப்பாக, குட்டையாக (பூ விழுந்த கண்கள்) தலை நிற்காமல் ஆடிக் கொண்டே பேசும் இயல்புடையவள் அப்படி விசேச வீடுகள் என்ன நடந்தது யாரெல்லாம் வந்தார்கள் வரவில்லை யென்று புறம் பேசுவதில் கெட்டிக்காரி. தாத்தாவுக்கு காது கேட்காது பேசினாலும் போட்டிருக்கும் கண்ணாடிக்கு மேலே விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டே பேசாமல் போய் விடுவார்.

ஒருநாள் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் வாங்கி கட்டிக் கொண்டது தான் மிச்சம். வீட்ல சும்மா இருக்க முடியாம.... சமஞ்ச பொண்ணு மாதிரி தலைய வெளியில நீட்டி வேவு பார்க்குறது தான் வேலையா, என்று ஏசித் தள்ளிவிட்டாள். அன்றிலிருந்து பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் பாட்டி பேசாமல் தானே இருக்க வேண்டும் என்று நினைப்போம். ஆனால் மறுநாள் காலையில என்ன? இன்னும் வாசல் தெளிக்க வில்லையா என்று பாட்டி கேட்டாள். பேசாமல் இருக்க முடியுமா? பக்கத்து வீட்டுப் பெண் "தெளிக்க போறேன்னு" பதில் பேசிவிட்டாள்.

இந்த பாட்டிக்கு என்ன சொன்னாலும் புரியாது என்று, முணுமுணுத்துக் கொள்ள மட்டுமே அவளால் முடிந்தது. மழைக்காலம் என்றால் பாட்டிக்கு ஆஸ்துமா வியாதி அதிகமாகி விடும். அந்த சமயத்தில் மட்டும் வெளியே வரமாட்டாள். தாத்தா வெளியே வந்தால் பாட்டி எங்கே என்று எல்லோரும் விசாரிப்பது வழக்கம். ஆனால் நாம் கேட்கும் கேள்விக்கு தாத்தா சரியாக பதில் சொல்லவே மாட்டார். பாவம் அவர் என்ன செய்வார் காது கேட்காதே. இதனால் தான் என்னவோ மகள், மனைவி, மருமகனிடம் திட்டு வாங்கிக் கொண்டே இருக்கிறார். பாட்டி தான் ஆஸ்துமா வியாதி நேரங்களில் வெளியே வரமாட்டாள். தாத்தா காலைக்கடன் கழிக்க கையில் தடியுடன் கம்மாய் பக்கம் போய்

விடுவார். சொன்னாலும் வீட்டில் இருக்கும் கழிவறையைப் பயன்படுத்த மாட்டார். தண்ணீர் அதிகம் செலவாகுமாம். காந்தியவாதி கொள்கை பின்பற்றக் கூடியவர். அதனால் தான் அவரின் பக்கத்து வீட்டுப்பெண் தன் பிள்ளைகளுக்கு அவரை காந்தி தாத்தா என்றே அறிமுகம் செய்து அவ்வாறு அழைக்கவும் பழக்கப்படுத்தி இருந்தாள்.

கருப்பாக இருக்கும் தனம்மா பாட்டியை சிவப்பாக இருக்கும் அழகான காந்தி தாத்தா அந்த காலத்தில் விரும்பி தான் திருமணம் செய்தாராம். இந்த அழகான முதியோருக்குள் இருக்கும் புரிதல் இன்றைய தலைமுறைக்கு இருந்தால் விவகாரத்து கேட்டு நீதிமன்றம் செல்ல மாட்டார்கள். அவர்களைப்பார்த்தால் வாழ வேண்டும் என்று ஆசை வரும். அப்படிப்பட்ட முதிய தம்பதிகள்.

ஒருநாள் தன் உறவினருக்கு உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்ட பாட்டி பார்த்து விட்டு மகளுடன் திரும்பி வரும்போது சாலையில் தடுமாறி விழுந்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மகள் மருத்துவரிடம் காட்டி விட்டு வீட்டிற்கு வந்தவுடன் 3000 ரூபாய் செலவு என்று புலம்பி தள்ளிவிட்டாள். இன்னும் 3 முறை வந்து கட்டு மாற்றிப் போட வேண்டும் என்று மருத்துவர் சொல்லி இருந்தார். தன் வேலையைத் தானே செய்து பழக்கப்பட்டவள் பாட்டி. ஒரு நாள் கூட கடை உணவு என்றாலும் பிடிக்காது. தன் ஆடைகளை யாரையும் தொடக் கூட விடமாட்டாள். எந்த வேலைக்கும் யாரையும் எதிர்பார்க்காமல் வாழ்ந்தவள். இன்று மகள் திட்டிக் கொண்டே எல்லா பணிகளையும் செய்வது அவளுக்கு பிடிக்கவில்லை. படுத்தே கிடப்பது, எந்த வேலையும் செய்யாமல் சாப்பிடுவது, எவ்வித உறுத்தலை அவளுக்கு தந்திருக்கும் என்று உழைத்து சாப்பிடும் வர்க்கத்துக்கு மட்டுமே புரியும். கையில் அடிப்பட்ட வலியைக் கூட 84 வயதிலும் பொருத்துக் கொண்டாள். ஆனால் மனம் படும் வலி தாத்தாவுடன் பகிர்ந்து கொள்ளாமல் பற்களை இறுகக் கட்டிக் கொண்டாள். உடல், நரம்புகளை அடக்கிக் கொண்டாள் எனவும் சாப்பிடாமல் கண்களை மூடிவிட்டாள் என்பதை தாத்தாவிடம் யாரும் சொல்லாமலே புரிந்து கொண்ட தாத்தா தனம்மா பாட்டியின் கைகளை பிடித்துக் கொண்டு எல்லாம் என்னிடம் சொல்வாய். போகிறேன்னு மட்டும் ஏன் சொல்லவில்லை என்று ஒரு வார்த்தையுடன் அவளின் இறப்பை ஏற்றுக்கொண்டார். எப்படி அவரால் ஜீரணிக்க முடிந்ததோ அவரே அறிவார்.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:
சம்சுல் ஹுதா பானு
99403 35306

கதைகளின் வஞ்சம்

முனைவர் மெய் சித்ரா,
தலைவர்,
தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஆங்காங் .

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (குறள் 676)

செயலை முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்த போது கிடைக்கும் பெரும்பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

(மு வரதராசன்)

ஒரு காலத்தில் கதைகளை விரும்பும் ஒரு பையன் இருந்தான். அவனது பெயர் டோங் சின். ஒவ்வொரு இரவும் உறங்கும் போது அவனுக்குப் பிடித்த குடும்ப ஊழியரான பாக் என்பவரிடம் கதைகளைக் கேட்டான்.

டோங் சின் ஒரு நல்ல பையன். ஆனால் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அவன் கேட்ட கதைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. அவற்றைத் தன்னிடமே வைத்துக் கொள்ள விரும்பினான். அதனால் ஒவ்வொரு இரவும் கேட்டுவிட்டு, ''பாக், எனக்கு ஒரு வாக்குறுதி கொடுங்கள்,'' என்பான்.

"அது என்ன, சின்ன முதலாளி?" என்று பாக் கேட்டான்.

''என்னைத் தவிர வேறு யாரிடமும் இந்தக் கதைகளைச் சொல்லமாட்டாய் என்று வாக்கு கொடு. அவை இந்த அறையிலேயே தங்கும் என்று உறுதி கொடு.''

"சரி, சின்ன முதலாளி," பாக் ஒரு பெருமூச்சுடன் கூறினான். "நான் வாக்கு கொடுக்கிறேன்."

ஆண்டுகள் சென்றன, டோங் சின் வளர்ந்தான். அவனுக்கு 15 வயதாய் இருந்தபோது, அடுத்த பள்ளத்தாக்கில் உள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அதே வயதுடைய மணப்பெண்ணை அவனுக்குத் தேர்ந்தெடுத்தார் அவனது தந்தை. வரவிருக்கும் திருமணத்தால், வீட்டில் உள்ள அனைவரும் உற்சாகமாய் இருந்தனர்.

கொரியாவில் அனைத்து மகன்களும் மகள்களும் திருமணம் ஆகும் வரை முடியைப் பின்னலிட்டுக் கொள்வர். மணமான பிறகு உச்சிக்கொண்டைப் போட்டுக் கொள்வர்.

அதனால், திருமணத்திற்கு முந்தைய இரவில், டோங் சினின் தந்தை தனது மகனின் நீண்ட பின்னலைக் கழற்றினார். பின்னர் அவர் தனது தலைமுடியைப் போலவே இறுக்கமான உச்சிக்கொண்டையைப் போட்டார். அவரது மகனின் தலையில் மேல் முடிச்சு, குத்துவதற்காய் ஒரு துளையுடன் கூடிய மண்டை ஓட்டுத் தொப்பி ஒன்றை வைத்தார். அதற்கு மேலாய், மிகவும் லேசான, குதிரை முடி கண்ணி தொப்பியை வைத்தார்.

டோங் சின் மிகவும் பெருமைப்பட்டான். பல வருடங்களாய் அவன் இந்தத் தருணத்திற்காய் காத்திருந்தான். இப்போது அவன் ஒரு வாலிபனாய் ஆவதால்!

கடைசியில் திருமண நாளும் வந்தது. அதிகாலையில், டோங் சின் மற்றும் அவனது தந்தை மணமகள் வீட்டு விழாவிற்குச் செல்ல ஆயத்தமாயினர். மணமகள் வீட்டிற்கு அழைத்து வரப்படும் அடுத்த நாள் கொண்டாட்டத்திற்கு உதவுவதிலும் ஆயத்தமாவதிலும் அனைவரும் மும்முரமாய் இருந்தனர்.

எல்லோரையும் போல பாக் பணிகளைச் செய்த வண்ணம் இருந்தான். ஆனால் அவன் விரைந்து சென்றபோது, அவர் டோங் சின் அறையைக் கடக்க வேண்டியிருந்தது. அவன் திகைக்கும் வகையில், அறைக்குள், பல குரல்களின் முணுமுணுப்பு கேட்டது.

"இது என்ன? விசித்திரமாயுள்ளது," என்று அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டான். "சின்ன முதலாளி இப்போது அங்கு இல்லை, வேறு யாரும் இருப்பதற்கும் சாத்தியமில்லை."

அவன் காகித ஜன்னல் வரை சென்று, கவனமாய் ஒரு சிறிய துளையைச் செய்து, எட்டிப்பார்த்தான். அவன் அரண்டு போனான்.

காற்றில் ஆவிகள் நிரம்பி வழிந்தன—நூற்றுக்கணக்கில்! ஒன்றுடன் ஒன்று மேலும் கீழும் சுற்றி வந்தன. அறையில் பறப்பதற்கும் இடம் இல்லாத வகையில் பல ஆவிகள் திரண்டிருந்தன. அவை சிறிதும் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை!

"மௌனம்!" ஆவிகளில் ஒன்று அழைத்தது. "ஒரே நேரத்தில் பேசுவதை நிறுத்துங்கள், இல்லையெனில் நாம் எதையும் செய்ய முடியாது."

முணுமுணுப்பு மறைந்தது. "அதுவும் சரி தான்," மற்றொரு ஆவி கூறியது. "இன்று பையனின் திருமணம், என்ன செய்வது என்று நாம் தீர்மானிக்க வேண்டும்."

"நாம் பழிவாங்க வேண்டும்!" என்றது இன்னொரு ஆவி. "கதைகளாகிய நம்மையெல்லாம் இந்த அறைக்குள் கட்டிப் போட்டதற்கு அவன் தண்டிக்கப்பட வேண்டும்."

பாக் மீண்டும் அரண்டு போனான். "இவை கதைகள்!" அவன் திகைப்புடன் கூறிக் கொண்டான். "அறையில் தங்கி இருப்பவை!"

"ஆம், அவன் தண்டிக்கப்பட வேண்டும்" என்று மற்றொரு ஆவி கூறியது. "ஆனால் எப்படி?"

"எனக்கு ஒரு யோசனை இருக்கிறது," மற்றொரு ஆவி கூறியது. ''நான் ஒரு விஷக் கிணறு இருக்கும் கதை. நான் ஏன் என் கிணற்றைச் சாலையோரம் வைக்கக் கூடாது? அவன் தண்ணீரைக் குடித்தால், மரணமடைவான்."

"அற்புதம்!" என்றது இன்னொரு ஆவி. ''நான் விஷம் கலந்த செம்புற்றுப் பழங்களைக் கொண்ட கதை. அவன் குடிக்கவில்லை என்றால், நான் அவற்றைச் சிறிது தொலைவில் சாலையோரமாய் வைக்கிறேன்.''

"நல்ல சிந்தனை!" என்றது இன்னொரு ஆவி. "நான் ஒரு சிவந்த எரியும் கங்கைக் கொண்ட கதை. வழியில் அவன் சாப்பிடாமலும் குடிக்காமலும் இருந்தால், மணமகள் வீட்டில் அவன் அடியெடுத்து வைக்கும் மிதியடியில் அதை வைப்பேன். அது அவனைப் பயங்கரமாய் எரித்துவிடும்!''

"இவற்றைச்செய்யலாம்,"மற்றொருஆவி."ஆனால்அவன்உங்கள்அனைவரிடமிருந்தும் தப்பித்துவிட்டால், நான்ஆயத்தமாய் இருக்கிறேன். நான்ஒரு கொடிய பாம்பைக் கொண்ட கதை. நான் அதை மணமகள் தூங்கும் பாயின் கீழ் மறைப்பேன். அவர்கள் படுக்கைக்குச் செல்லும்போது, அது இருவரையும் கடித்துக் கொன்றுவிடும்!

"இல்லை!" பாக் கத்தினான். கதவை நோக்கிப் பாய்ந்து திறந்தான். ஆனால் அங்கு இருந்தது. . . ஏதுமில்லை.

"நான் அதைக் கற்பனைச் செய்து பார்க்க முடியாது," என்று அவன் கூறினான். "அவை இன்னும் இங்கே இருக்க வேண்டும், என்னால் அவற்றைப் பார்க்க முடியவில்லை. ஆனால் - சின்ன முதலாளி? சின்ன முதலாளியை நான் காக்க வேண்டும்!''

திருமண ஊர்வலம் ஏற்கனவே கூடியிருந்த சாலைக்கு அவன் விரைந்தான். மணமகள் மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்வதற்காய், நான்கு வேலைக்காரர்கள் தூக்கும் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு - இரண்டு நீண்ட தூண்களுக்கிடையே வைக்கப்பட்டு இருந்தது. டோங் சின்னும் அவனது தந்தையும் சிறிய வெள்ளைக் குதிரைகளின் மீது அமர்ந்திருந்தனர். அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, ஒரு வேலைக்காரன் முன்னால் நின்று கொண்டிருந்தான்.

பாக், டோங் சின் குதிரையின் கடிவாளத்தை வாங்கிக் கொண்டு, "இன்று உங்கள் குதிரையை நான் வழிநடத்துவேன், சின்ன முதலாளி!" என்று கூறி அந்த வேலைக்காரனை வெளியேற்றினான்.

"பாக்!'' என்றார் தந்தை. "உள்ளே போ! நாளைக்கு ஆயத்தமாக நீ இங்கே தேவை!"

"தயவுசெய்து, முதலாளி!" என்று பாக் கெஞ்சினான். " சின்ன முதலாளியின் குதிரையை அவரது திருமண நாளில் வழிநடத்த வேண்டும் என்பது என் அன்பான விருப்பம்!"

"பரவாயில்லை அப்பா?" என்று டோங் சின் கூறினான். "பாக் எங்களுடன் வருவதை நான் விரும்புகிறேன்."

"ஓ, சரி," என்று அவனது தந்தை முணுமுணுத்தார். பின்னர் டோங் சின் முன்னால் மற்றும் அவரது தந்தை பின்னால் செல்ல. அவர்கள் வரிசையாய் நின்று வெளியேறத் தொடங்கினர்.

அது வசந்த காலம். மலைகளின் மீது சாலை இளஞ்சிவப்பு, சிவப்பு மற்றும் வெள்ளை அசேலியாக்களுடன் வண்ணமயமாய் இருந்தது. சூழல் சூடாய் இருந்தது. டோங் சின் சாலையில் ஒரு கிணற்றைக் கண்டதும் நிம்மதியடைந்தான்.

"பாக், எனக்குத் தாகமாய் இருக்கிறது. அந்தக் கிணற்றிலிருந்து எனக்குக் குடிக்கக் நீர் கொண்டு வாருங்கள். அங்கே நீருக்காய் ஒரு சுரைக் கரண்டி இருக்கிறது பாருங்கள்."

"சுரைக் கரண்டி!" என்றான் பாக் திகில் நிறைந்த குரலில். "இல்லை, சின்ன முதலாளி! உங்கள் திருமண நாளில் நீங்கள் ஒரு பொதுவான சுரைக் கரண்டியிலிருந்து குடிக்க கூடாது! நாம் மணமகளின் வீட்டை அடையும் வரை காத்திருங்கள். அங்கு நீங்கள் பீங்கான் குடுவையில் குடிக்கலாம். அவன் வேகமாய் குதிரையுடன் கிணற்றைக் கடந்தான்.

டோங் சின் ஆச்சரியப்பட்டான். கட்டளைகளை அலட்சியம் செய்யும் வேலைக்காரனின் துணிவை! ஆனால் அவன் எதுவும் பேசவில்லை.

சிறிது நேரம் கழித்து, அவர்கள் ஒரு செம்புற்றுப் பழம் கொண்ட வயலுக்கு வந்தனர். "பாக், எனக்குத் தாகமாகவும் பசியாகவும் இருக்கிறது. இந்தச் செம்புற்றுப் பழங்களில் சிலவற்றை எனக்குத் தேர்ந்தெடுங்கள்."

"இவை?" என்றான் பாக் அவநம்பிக்கை தொனியில். "சின்ன முதலாளி, அவை மிகவும் சிறியவை! உங்கள் திருமண நாளில் நீங்கள் மிகப்பெரிய, சாறு நிறைந்த செம்புற்றுப் பழங்களை மட்டுமே உண்ண வேண்டும். உங்கள் மணமகள் வீட்டில் உங்களுக்குச் சிறந்தது கிடைக்கும்," என்று பதட்டத்துடன் கூறி விட்டு, அவன் அங்கிருந்து விரைந்து சென்றான்.

டோங் சின் திகைத்துப் போனான். பின்பக்கத்திலிருந்து அப்பா அழைப்பதைக் கேட்டான், "என்ன நடக்கிறது அங்கே?"

"ஒன்றுமில்லை, தந்தையே," டோங் சின் திரும்பக் கூறினான். அவன் பாக்கின் பக்கம் திரும்பி, "என்ன செய்கிறாய்? நீ கீழ்ப்படியவில்லை என்பதை என் தந்தை உணர்ந்தால், உன்னை அடித்து விடுவார்!"

"என்னை நம்புங்கள், சின்ன முதலாளி," பாக் மெதுவாய்க் கெஞ்சினான். "தயவுசெய்து என்னை நம்புங்கள்!"

இறுதியாய் அவர்கள் மணமகளின் வீட்டை அடைந்தனர். அங்கு அவரது தந்தை அவர்களை வாயிலில் சந்தித்தார். வழக்கம் போல், இரண்டு வேலைக்காரர்கள் டோங் சின் கீழே இறங்குவதற்கு ஒரு மிதியடியை வெளியே கொண்டு வந்தனர். ஆனால் கால்கள் படும் முன்னரே, பாக் ஒரு மூலையைப் பிடித்து இழுத்தான். டோங் சின் மண்ணில் விழுந்ததால் மணமகளின் தந்தை திகைத்தார்.

"இந்த மிதியடி அழுக்கு!" பாக் கத்தினான். அதை வேலையாட்களுக்கு முன் பிடித்துக் காட்டி, தூக்கி எறிந்தான். " சின்ன முதலாளியின் திருமண நாளில் மிதியடியைக் கொண்டு வர உங்களுக்கு என்ன துணிச்சல்!"

வேலையாட்கள் மணமகனைத் தூக்கி நிறுத்தி, அவனது கால்களைச் சுத்தம் செய்யத் துவங்கினர். டோங் சின் அதிர்ச்சியில் இருந்தான். மேலும் அவனால் தனது தந்தையின் முகத்தில் புயல் மேகங்களைக் காண முடிந்தது. ஆனால் அவர்களால் மற்றவர்கள் முன் எதுவும் பேச முடியவில்லை.

அவர்கள் தோட்டத்திற்குள் சென்றனர். அழகான நெய்த துணியால் மூடப்பட்ட ஒரு மேடைஅமைக்கப்பட்டிருந்தது. அதன்மையத்தில்ஒருசிறியமேசையில், மெருகிடப்பட்ட மர வாத்து, விசுவாசத்தின் சின்னமாய் வைக்கப்பட்டு இருந்தது.

தருணம் வந்ததும், டோங் சின் மேடையில் தனது இடத்தில் அமர்ந்தான். மை ஹீ என்ற மணமகள், பச்சை நிற மணப்பெண் உடையில் தோட்டத்திற்குள் அழைத்து வரப்பட்டாள்.

டோங் சின் தனது வருங்கால மனைவியைப் பற்றிய முதல் பார்வை அது! அவளது சாந்து பூசப்பட்ட முகம் தந்தம் போல வெளிறியிருந்தது. மெல்லிய கோடிட்ட புருவங்கள் பட்டாம்பூச்சி இறக்கைகள் போல வளைந்திருந்தன. அவளது கருங் கூந்தல், எண்ணெய் தடவிப் பளபளப்பாய் காணப்பட்டது. கூந்தல் சுழல்கள், பட்டைகள், அலைகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகைகள் மற்றும் பிரகாசமான வண்ண நாடாக்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு தலைக்கவசம் இருந்தது.

மை ஹீ மேடையில் ஏறி டோங் சினை எதிர்கொண்டாள். அவள் மிகவும் அழகாய் இருப்பதாய் அவன் நினைத்தான். ஆனால் அவன் சிரிக்க பயந்து, பதட்டமாய் இருந்தான். சிறிது நேரம் கழித்து, அவள் அமைதியாய் நான்கு முறை அவனை வணங்கினாள். பிறகு அவன் நான்கு முறை வணங்கினான்.

விழா நிறைவுற்றது. டோங் சின் திருமணம் செய்து கொண்டார்!

நாள் முழுவதும், டோங் சின் விருந்து மற்றும் பொழுதுபோக்குகளை அனுபவித்தான். ஆனால், பெண்கள் விடுதியில் தனி விருந்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட மை ஹீயை இன்னும் அதிகமாய்ப் பார்க்க அவன் ஆர்வமாய் இருந்தான்.

அன்று இரவு வெகுநேரம், விருந்தினர்கள் சென்றதும், அந்த இளைஞன் கடைசியாய் மணமகளின் அறைக்கு அழைத்து வரப்பட்டான். உள்ளே நுழைந்து மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் வெட்கத்துடன் நின்றான்.

மை ஹீ, இன்னும் தனது திருமண உடையில், வழக்கப்படி ஒரு மூலையில் அமைதியாய் மண்டியிட்டாள். டோங் சின் அருகில் வந்து வணங்கியபோது அவள் பதட்டத்துடன் சிரித்தாள்.

"உங்களைச் சந்திப்பதில் நான் பெருமைப்படுகிறேன்," என்று அவன் கூறினான். "உங்கள் உதவியுடன், நான் ஒரு தகுதியான கணவனாய் இருக்க முயல்வேன்."

அப்போது, கதவு பரந்து திறந்தது. ஒரு நீண்ட சமையலறைக் கத்தியுடன் பாக் நுழைந்தான். "சின்ன முதலாளி கவனமாய் இருங்கள்!"

மை ஹீ அலறி துள்ளிக் குதித்தாள். டோங் சின் அருகில் இருந்தான். "பாக்! பாக்! உடனே கிளம்பு!''

ஆனால் பாக் கேட்கவில்லை. உறங்கும் பாயில் விரைந்து சென்று எடுத்தான். அங்கே ஒரு பாம்பு கிடந்தது. முறுக்கிக் கொண்டு, சீண்டியது. பாக் அது இறக்கும் வரை, அதை மீண்டும் மீண்டும் குத்தினான்.

பின்னர் பாக், திரும்பி வாயடைத்து நின்ற டோங் சின் முன் மண்டியிட்டு, "சின்ன முதலாளி, இந்தப் பயனற்ற வேலைக்காரனின் துடுக்குத்தனத்தை மன்னியுங்கள்."

அதற்குள் சத்தம் கேட்டு மற்றவர்கள் உள்ளே ஓடி வந்தனர். "பாக்!'' டோங் சின் தந்தை கத்தினார். "இந்தக் கோபத்தின் அர்த்தம் என்ன?"

"அப்பா," டோங் சின், பாம்பைக் காட்டி, "பாக் எங்கள் உயிரைக் காப்பாற்றியுள்ளார்!''

பின்னர் பாக் கதை ஆவிகள் மற்றும் அவர்களின் பழிவாங்கும் திட்டங்கள் அனைத்தையும் கூறினான். "ஒரு வயதான வேலைக்காரன் சொல்வதை யாரும் கேட்க மாட்டார்கள். எனவே சின்ன முதலாளியை நானே பாதுகாக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்" என்று அவன் கூறினான்.

"இது எல்லாம் என் தவறு," டோங் சின் கூறினான். ‘‘கதைகளை எனக்குள்ளேயே வைத்துக் கொள்ள விரும்பியவன் நான். ஆனால் இனி இல்லை. இந்த இரவிலிருந்து,

என்னால் முடிந்த போதெல்லாம், யார் கேட்பார்களோ அவர்களுக்குச் சொல்வேன். பாக், நீங்களும் சொல்வதாய் உறுதியளிக்கிறீர்களா?''

"சரி, சின்ன முதலாளி," பாக் புன்னகையுடன் கூறினான். "நான் வாக்கு கொடுக்கிறேன்."

**

அத்துடன் கதை ஆவிகளின் கதை முடிகிறது. ஆனால் இப்போது நீங்கள் அதை அறிந்திருக்கிறீர்கள், அதை வேறு ஒருவரிடம் சொல்லுங்கள் - அல்லது கதை உங்கள் மீது கோபப்படலாம்!

திருக்குறள் வழி குறிப்பு

டோங் சின்னின் ஊழியரான பாக் செயலை முடிக்கும் வகை, வரக்கூடிய இடையூறு, முடிந்த போது கிடைக்கும் பெரும்பயன் ஆகியவற்றை ஆராய்ந்து செயல்பட்டதை இக்கதையில் நாம் காணலாம்

காமம் உருட்டும் சகுனியின் சொக்கட்டான்கள்

நீண்ட இரவில்
கத்திக் கொண்டே இருக்கும்
சுவர்க் கோழி
காதில் மெல்ல உன் மூச்சுக் காற்றுப்
படரும்போது என் மெல்லிய அதிர்வுகளால்
மௌனமாகிப் போகிறது
சாளரம் வழியே படரும் நிலவொளி
பிணைந்திருக்கும் நம்மைக் கண்டு
அதன் நிழலால் போர்வை நெய்து
மேகத்திற்குள் நாணத்தால் ஒளிந்து கொள்கிறது
சில நேரம் எதைக் கொடுத்தால்
எதைத் திருடலாம் என நீ
நினைப்பதை என் மனப்பார்வை
காட்டிக் கொடுக்கிறது
காமம் உருட்டும்
சகுனியின் சொக்கட்டான்கள்
உன் விரல்கள்

– ம.வீ. கனிமொழி
குறிஞ்சி கவிதை குழுவில் பரிசு பெற்ற கவிதை

உருவத்தைத் தாண்டி

ஆர்.சூடாமணி

த'க்ளிக்!'

கறுப்புத் துணிக்குள்ளிருந்து தலையை வெளியே இழுத்த மாணிக்கம் நீண்டதொரு பெரு மூச்சு விட்டான். எதிரே பெரியவர்களும் குழந்தைகளுமாய் உட்கார்ந்திருந்த கூட்டம் எவ்வளவு தூரம் அவன் பொறுமையைச் சோதித்துவிட்ட தென்று வனுக்கல்லவா தெரியும்!

ஒரு நிமிஷம் அமைதியாய் உட்கார்ந்த கூட்டம் இப்போது சலசலத்துக் கலைந்தது.

"படம் சரியாய் வந்திருக்குமில்லே?" என்றார் ஒரு நடுத்தர வயதினர்

"அதைப் பத்திக் கவலையை விடுங்க!"

"எப்போ கொடுப்பீங்க படத்தை?" இது ஒரு பெண் மணி. வேறு யார் இவ்வளவு அவசரப்படுவார்கள்!

"நாளை சாயங்காலம் கொடுத்திடறேன்."

"அவ்வளவு நாழி ஆகுமா?" ஓர் இளைஞனின் மிடுக் கான குரல்.

"ஆகும் ஸார்."

"கொஞ்சம் டச் பண்ணிக் கொடுங்க" என்றார் ஒரு கிழவர், தம் முகத்துக் கோடுகளைத் தடவிக்கொண்டே கோடுகள் அதிகமாய்ப் புகைப்படத்தில் தெரிந்துவிடப் போகிறதே என்ற கவலை. வயதுக்கும் சபலத்துக்கும் சம்பந்தமே கிடையாதோ?

"அப்படியே செய்யறேன் ஸார்"

"என் சட்டையிலிருக்கிற நீலப் பூ போட்டோவில் தெரியுமோ?" என்று கவலையோடு விசாரித்தாள் ஒரு ஐந்து வயதுப் பெண்.

மாணிக்கம் பதில் சொல்வதற்குள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன், "வெள்ளையிலிருக்கிற பூ எங்கேயாவது படத்தில் தெரியுமா? மக்கு!" என்றான்.

"ஏன் தெரியாதாம்? தடியா ! அப்போ உன் புஷ் கோட்டு மட்டும் தெரியுமோ?"

"வாயாடினாயானால் தலையில் குட்டுவேன்."

"நான் உன் காதைத் திருகுவேன்."

"ஏய், ஏய், இரையாதீங்க."

இவர்கள் வெளியே போய்த் தொலைய மாட்டார்களா? மாணிக்கம் உள்ளேயே புலம்பினான். சரியாக உட்காருவ தற்குள் இந்த மனிதப் படை செய்த தொந்தரவு! அப்பப்பா! படம் பிடிப்பவனென்று ஸ்டூடியோவில் வந்து நின்று விட்டால் மனிதனாய் இருக்கக் கூடாது. இயந்திரமாகத் தான் மாறிவிட வேண்டும்.

"அப்போ நாளை சாயங்காலம் வரேன், படத்தை வாங்கிக்க."

"சரி ஸார்."

இரைச்சல், வாத விவாதங்கள், குழந்தைகளின் சண்டைகள். ஒரு வழியாய்க் கூட்டம் கடைசியில் வெளியில் சென்றது.

மாணிக்கம் ஆயாசத்துடன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். வெளியே தூங்கி வழிந்து கொண்டிருந்த வேலைக்காரச் சிறுவனை எழுப்பி உட்கார்த்திவிட்டு பக்கத்தி லிருந்த இருட்டறைக்குச் சென்றான்.

பத்து நிமிடத்தில் வெளி வராந்தாவில் பேச்சுக்குரல். படம் எடுத்துக் கொள்ள வந்தவர்கள்தான்.

மாணிக்கம் களைப்பைக் களைந்துவிட்டுப் புன்னகையை எடுத்துத் தரித்தவனாய் வெளியில் வந்தான்.

"வாங்க ஸார்".

ஒரு பெரியவர். உயரமாக, சற்று மாநிறமாய் இருந்தார் பஞ்சகச்ச வேஷ்டி, பனியன் தெரியும்படியாய் மஸ்லின் ஜிப்பா , மேலே அங்கவஸ்திரம், நெற்றியில் விபூதி; அதன் கீழ் சிறிதாய் ஒரு சந்தனப் பொட்டு. அவர் ஏதோ ஒரு பொது நல ஊழியராம். அடுத்த வாரம் அவர் படத்தை ஒரு பிரபல பத்திரிகை வெளியிட விரும்பியது. அதற்குத்தான் வந்திருந்தார்.

"நல்லாப் பார்த்து எடுங்க" என்றார் கவலையோடு .

"அதுக்கென்ன. இதோ பாருங்க, இந்த ஸ்கிரீனைப் பின்னாலே வைக்கலாமா?"

மாணிக்கம், சரியும் மரத்திரை ஒன்றைக் காட்டினான். சில பட்சிகள் பறக்கும் ஓவியத்தைப் பார்த்ததும் அம்மனிதர், "இது வேணாம். ஏதாவது பட்சி நூலா படிச்சிருக்கேன் நான்?" என்றார்.

"அப்போ இதைப் பாருங்க."

மரத்திரை சரிந்து இன்னொரு காட்சியைக் காட்டியது. நீர்த் துறையும் சில மரங்களும். இயற்கையை வரைகிற ஓவியனா நான்? என்று கேட்பாரோ? மாணிக்கத்துக்குச் சந்தேகம்தான். ஆனால் ஏனோ அவருக்கு அக்காட்சி பிடித்து விட்டது.

"இது நல்லாயிருக்குது. உம், இங்கே கண்ணாடி ஒண்ணுமில்லையா?"

"அதோ அந்தச் சின்ன அறையில் இருக்குதே."

அவன் குறிப்பிட்ட அறையில் ஒரு மேஜை. அதன் மேல் சீப்பு, முகப்பௌடர் முதலியவை. சுவரில் நிலைக் கண்ணாடி, கோட்ஸ்டாண்ட் ஒன்றில் சில கோட்டுகள் – இவை இருந்தன. பெரியவர் அங்குச் சென்று கண்ணாடியின் முன் தம் அழகைச் சிறிது செவ்வைப் படுத்திக் கொண்டு திருப்தியுடன் வெளியே வந்தார்.

"நான் ரெடி."

"உட்காருங்க."

அன்றாட நாடகமேதான். 'இப்படித் திரும்புங்க' 'கொஞ்சம் மேலே பாருங்க ரொம்ப சாயாதீங்க கொஞ்சம் சிரிக்கணும்.'

"சிரிப்பு அதிகம் வேணாங்க. பொது நல ஊழியனுக்குச் சிரிக்க ஏதுங்க நேரம்?" என்றார் அவர்.

"இருந்தாலும் போட்டோவுக்கு ....."

"அதிகப்படி நமக்கு இஷ்டமில்லை."

மாணிக்கம் பொறுமையாய் மேலே வேலையைக் கவனித்தான். படம் எடுக்கப்போகும் சமயம், "இருங்க இருங்க" என்றார் வந்தவர்.

"என்ன ஸார்?"

"பக்கத்திலே ஒரு மேஜைமேலே சில புஸ்தகம் வைத்தால் நல்லாயிருக்காது?"

'பொது நல ஊழியருக்குப் படிக்க நேரமுண்டா?" என்று மாணிக்கம் கேட்கவில்லை; நினைத்துக் கொண்டான்.

"இதெல்லாம் என்ன புஸ்தகம்?"

"நீங்களே பாருங்களேன்" என்றான் மாணிக்கம்.

"இங்கிலீஷிலே இருக்குது. நமக்குத் தமிழ்தாங்க தெரியும். பரவாயில்லே. படத்துக்குத்தானே! என்ன புஸ்தகமானா என்ன?"

எல்லாம் பகட்டு, ஆடம்பரம். வெளித் தோற்றம். படம் பிடிக்கும் கலையே வாழ்வின் ஓர் இதயமற்ற, வெளிப் பூச்சான அம்சத்தைச் சித்திரிப்பதுதான்.

"படம் நாளை சாயங்காலம் கிடைக்கும். என்ன அளவிலே வேணும்?"

"காபினட்ஸைஸிலே கொடுங்க."

தினம் இதே மாதிரிதான். மனிதர்கள் வருவதும் படம் எடுத்துக் கொள்வதும் வெளிப்புறத் தன்மைக்கு இலக் கணம் கூறும் ஒரு கலையாகவே அமைந்து விட்டது. மாணிக் கத்துக்கு அதுதான் சோறு போட்டது என்றாலும் மனித சமுதாயத்திலேயே ஒருவித இளக்காரம் – அதிகமாய்ப் போனால் பொறுமையுடன் பார்த்துச் சிரிக்கும் ஒரு மேல் நோக்கு – ஏற்பட்டது அவனுக்கு.

"வாங்க ஸார்."

ஓர் இளம் ஜோடி. புதுமணத் தம்பதி என்று சொல்லித் தானா தெரியவேண்டும்? இருவர் முகத்திலும் சிரிப்புப் பொங்கி வழிந்தது.

"நீ உக்காரு புஷ்பா. நான் பக்கத்திலே நிக்கறேன். அப்படித்தான் போட்டோ ..."

"ஊஹூம்" அழகு கொஞ்ச பெண் சிணுங்கினாள். "நல்லாயிருக்குது ! நான்தான் நிப்பேன்."

"கூடாது. அப்புறம் கால் நோவு வந்தால் நானில்லே பிடிக்கணும்?"

சூழ்நிலையை மறந்த உற்சாகம் ஆண் மகனுக்கு. ஆனால் பெண் மறக்கவில்லை. "சும்மா இருங்க" என்று கோபித்தாள். குரல் பொய்த்தது.

"அது போகட்டும், கையைப் பிடிச்சுக்கிட்டு நிக்கலாமா?"

"ஐயையோ, வேணாங்க!" நாணம் அழகிட்டது. "படத்தை வீட்டிலே எல்லாரும் பார்ப்பாங்களே! முதல்லே சண்பகம் என்ன சொல்லும்?"

சண்பகம் யாரோ, என்ன சொல்லக்கூடியவளோ, தெரியாது. ஆனால் அந்த நினைவினால் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"கொஞ்சம் தலை சீவிக்க முடியுங்களா?"

"அந்த ரூமுக்குப் போங்க."

கேட்டவள் பெண்தான். ஆனால் கூடவே அவனும் சென்றான். இது சீக்கிரத்தில் முடியாதென்று மாணிக்கத் துக்குத் தெரியும். நிதானமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

அலங்கார அறையிலிருந்து பேச்சும் சிரிப்பும் கேட்டன. சிறிது நேரத்தில் தம்பதி வெளியில் வந்தார்கள். மாணிக்கத் துக்கு அவர்கள் தோற்றத்தில் எந்த முன்னேற்றமும் தெரிய வில்லை. அவர்கள் கண்களுக்குத்தான் தெரியும் போலும்.

கணவனின் அருகில் ஒரு சிறு பலகையை வேலைக்காரப் பையன் கொண்டு வந்து போட்டான். மனைவி அதன்மேல் ஏறி நிற்கவும் உயரம் சமமாகியது.

முதலில் அப்படியே படம் எடுத்துக் கொண்டார்கள். பிறகு "இன்னும் ஒரு போஸ் ஸார்!" என்றவாறு அந்த வாலிபன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"ஸார், அந்த முதல் போட்டோவை நான் கொடுத்த வீட்டு விலாசத்துக்கே அனுப்பிச்சிடுங்க. அப்புறம்... வந்து..... அந்த ரெண்டாவது 'போஸை'... இந்த விலாசத்துக்கு அனுப்பறீங்களா?"

தயங்கித் தயங்கி வெட்கத்துடன் வாலிபன் இன்னொரு விலாசம் கொடுத்தான். அது அவனது காரியாலய விலாசம். கையைப் பிடித்துக் கொண்டிருக்கும் காட்சி வீட்டிலுள்ளவர்களுக்கல்ல, அவர்கள் இருவருக்கு மட்டும் தான்.

"ஆகட்டும் ஸார். அப்படியே அனுப்பறேன்."

அவர்கள் போனார்கள். வேறு பலர் வந்தார்கள். ஒரே இயந்திர ஒழுக்கம். அவனும் அதில் ஒரு விசை, மாணிக்கத்துக்கு அலுப்பாயிருந்தது. இந்த மேல் ஓட்ட நிலையைத் தவிர அவன் தொழிலில் ஆழத்துக்கு ஒரு நிமிஷம்கூட இட மிருக்காதா?

பெரிய கும்பல் வந்து அறையை ஆக்ரமித்தது. மாணிக்கம் ஒரு கணம் திகைத்துப் போய்விட்டான்.

"குழந்தையைப் படம் எடுக்கணுங்க. நல்லா எடுப்பீங்களா?"

ஆண்களும் பெண்களுமாய்ச் சூழ்ந்திருந்த அந்தக் கூட்டத்துக்கு நடுவே மாணிக்கம் ஒரு சின்ன குழந்தையைச் சிரமப்பட்டுக் கண்டு பிடித்தான்.

"எடுக்கறேனுங்க. பையா, அந்த மேஜையைக் காமிரா வுக்கு எதிரே இழுத்துப்போடு. குழந்தையை மேஜை மேலே விடுங்க."

"மூணு மாசத்துப் பிள்ளை இது. குழந்தை மிரண்டு போகாமே பிடிக்கணும்."

மாணிக்கம் கோபத்தை அடக்கிக்கொண்டு மேஜை மேல் ஒரு விரிப்பைப் போட்டான். "ம், குழந்தையை விடுங்க."

குழந்தை மேஜைமேல் விடப்பட்டது. "கண்ணுக் குட்டி, எங்கே சிரி" யாரோ கொஞ்சினார்கள்.

"பட்டுச் சொக்காய் போட்டிருக்குதே, அது படத்திலே நல்லா விழுங்களா?"

"உம் , விழும், விழும்."

"அதிலே இருக்கிற பூவேலை கையாலே செய்தது. அது நல்லாத் தெரியணும்."

சொன்னவளின் குரலிலிருந்து பூ வேலை செய்தவள் அவள் தானென்பது வெட்ட வெளிச்சமாயிருந்தது.

"பாபு, சிரிடா கண்ணு! அதோ காமிராவைப் பாரு!"

"படம் பிடிச்சு குழந்தையின் தகப்பனாருக்கு அனுப்பணும். நல்லாப் பிடியுங்க."

மாணிக்கத்துக்குத் தாங்கவில்லை.

"குழந்தையின் பாட்டனாரே பார்க்கணும்னாக்கூட நல்லாயிருக்கும்படி பிடிக்கிறேன். கொஞ்சம் எல்லாரும் விலகிப் போங்க."

"அப்புறம் குழந்தை அழுமே!"

"அப்போ அதை வெச்சுக்கிட்டு எல்லாருமா உக்காந்துக்குங்க."

"ஐயய்ய, வேணாம்."

எல்லோரும் விலகினார்கள். ஆனால் பேசுவதை நிறுத்த வில்லை. "கண்ணு , இதோ பாரு!"

"சிரிடா ராஜு?"

"காமிராவைப் பார்த்துப் பயப்படுது அது!"

"சிச்சிச்சிச்சிச்சி....." சப்தமிட்டார் ஒருவர். *"இதோ பாரு? ஊஹூ....."*

குழந்தை சிரிப்பதற்காக முகத்தைக் கோணிக் கொண்டாள் ஒருத்தி.

"டக்கு டக்கு டக்கு!"

"த்ஸொ த்ஸொ த்ஸொ!"

இந்த இரைச்சலிலும் பட்டுச் சொக்காயின் புழுக்கத் திலும் குழத்தை மிரள விழித்து அழ ஆரம்பித்தது. சிரிப்பு வந்தது. மாணிக்கத்துக்குத்தான். குழந்தை கிடக்கட்டும், அதைச் சிரிக்க வைக்க முயலும் பெரியவர்கள் செய்து கொள்ளும் முக விகாரங்களை யெல்லாம் படம் பிடித்தால் எவ்வளவு நன்றா யிருக்கும் என்று எண்ணினான் அவன்.

"ஐயோ, அளுவுதே பிள்ளை!"

"நான் அப்பவே சொன்னேன், பழரசம் கொடுத்து எடுத்து வாங்கன்னு, யாரு கேக்கறாங்க என் பேச்சை."

"அது ஒண்ணுமில்லே. தூக்க சமயம் அதுக்கு விடியற்காலயே வேறு முழிச்சிக்கிட்டுதா?"

"அதுதான் நேத்து சாயந்திரம் பூரா தூங்கிச்சே?"

"அதுக்காகக் காலையிலே சீக்கிரம் முழிச்சிக்கிடுமா? தெரிஞ்சவ மாதிரிப் பேசறியே!"

"நான் நாலு குழந்தை பெத்தவ. எனக்குச் சொல்லித் தரியா நீ?"

எல்லோருக்கும் வீடு என்றே நினைப்பு. மாணிக்கம் கடைசியில் ஸ்டூடியோவிலிருந்த சில விளையாட்டுச் சாமான் களைக் காட்டி ஒருவிதமாய்க் குழந்தையின் அழுகையை நிறுத்திப் படம் எடுத்து முடித்தான்.

"அழகா வருமில்லே குழந்தை?"

அழகு அழகு! எப்போதும் அதுதான் லட்சியம். இந்த உலகத்தில் வெளித் தோற்றத்தைத் தவிர வேறொன்றுமே இல்லையா? அந்த வெளி உருவத்துக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கும் புகைப்படத் தொழில் இதயமற்றதுதான்.

"வரும் வரும். கவலைப்படாதீங்க!"

இப்படி எவ்வளவு நாள்! குடும்பப் படம், வியாபாரத் துக்காகப் படம், கல்யாணத்துக்காகப் படம், குழந்தையின் படம், பெரியவர்களின் படம்.....

"எங்கே தலை சீவிக்கலாம்? அழகாய் வருமில்லே ?", இதேதான் கேள்விகள்.

''என்னாங்க போட்டோகிராபர் ஐயா! நல்லா விழணும் என் மகள் படத்திலே. பார்த்துப் பிடியுங்க.''

வேறொரு நாளில் ஒரு தாயின் கரிசனம் இது. அவள் மகளின் அலங்காரத்திலிருந்தே கல்யாண நோக்கத்தோடு படம் பிடித்துப் பிள்ளை வீட்டாருக்கு அனுப்புகிறார்கள் ளென்பது தெரிந்தது.

''இதுவரை நாலு இடம் தட்டிப் போச்சுங்க. பெண் கறுப்புன்னு எல்லாரும் வேணாங்கறாங்க. எங்க சரஸா முகத்து அழகு யாருக்கு வரும்? அதான் இனிமேல் படத்தையே அனுப்பறதுன்னு தீர்மானிச்சிட்டேன்.''

கவலை மிகுதியில் தாய் தன்பாட்டில் சொல்லிக்கொண்டிருந்தாள். ஓர் அன்னியனிடம் சொல்கிறோமென்ற நினைப்பே இல்லை.

மீண்டும் படமெடுக்கும் வேதனை. ''கொஞ்சம் திரும்புங்க. இன்னும் சிரியுங்க.'' மகளின் சேலையைத் தாய் அக்கறையோடு தடவி, ஒவ்வொரு இடத்திலும் ஜரிகைக் கரை முழுவதும் தெரியும் படியாய் விரித்து விட்டாள். கழுத்து ஆபரணத்தைச் சேலைக்கு வெளியே இழுத்துப் பொருத்தினாள். அது மட்டு மல்ல. தாயின் கரமல்லவா? படத்தில் விழாத பாகம் என்ற உணர்வு இன்றிப் பின்னால் சென்று மகளின் தலையிலிருந்த

பூவைக் கூடக் குவித்துச் சரிப்படுத்தினாள்.

''படம் நல்லா வருமில்லே? சரஸா அழகா விழணும். கொஞ்சம் பார்த்துச் சரி செய்யணும்னாலும் செய்யுங்க.''

இப்படி ஒருவகை.

அடுத்த நாள் வேறொருத்தி வந்தாள். சேலைக்குமேல் கறுப்பு அங்கி: கையில் சதுரமான கறுப்புத் தொப்பி; ஒரு காகிதச் சுருள்; பரீட்சை தேறியவள், 'கான்வகேஷன்' உடையில் தன் வித்தைப் பெருமிதத்தை விளக்கிட்டு

வைத்துக்கொள்ள வந்திருந்தாள்.

''பின்னால் ஸ்க்ரீன்' அம்மா?''

''சித்திர ஸ்க்ரீன் ஒண்ணும் வேண்டாம். 'ஸிம்பிளாக ஒரு துணி போடுங்க, போதும் ''

கையில் தேர்வுப் பத்திரத்தைப் பிடித்துக்கொண்டு, பூக்கிண்ணம் ஏந்திய மேஜைமேல் முழங்கையைப் பதித்த வளாய்ச் சற்று மேல் நோக்கிய பார்வையுடன் நின்றாள் அவள். அதுதான் 'படிப்புப் பார்வை' என்ற எண்ணம். கறுப்புக் குல்லாய் அவள் தலைமேல் கோமாளித் தனமாய்க் காட்சியளித்தது. ஆனால் அவள் பெருமையாய்த்தான் நின்றாள்.

இனி அந்தப் பத்திரத்தைத் தொலைத்தாலும் இந்தப் படத்தைத் தொலைக்க மாட்டாள். தன் வித்தையைப் பறைசாற்றும் ஓர் ஆடம்பரச் சாதனமல்லவா அது? நல்ல வித்தை! அடுத்த வருஷம் எவனுக்கோ கழுத்தை நீட்டி, வீடு எங்கே வம்பு எங்கே என்று அழப்போவதற்கு இது ஒரு படியா? என்ன படிப்பு ! எல்லாம் வெளி ஜம்பத் துக்காக .

அடுத்ததாக வந்த ஆளும் மாணிக்கத்தின் எரிச்சலைக் குறைக்க உதவவில்லை. 'பாலிஷ்' ஜோடுகள் அணிந்த பாதங்களிலிருந்து, க்ரீம்' சுடர் விடும் கலையாத கேசம் வரை நாகரிகத்தில் திளைக்கும் அலங்காரத்துடன் ஓர் இளைஞன். படம் என்னவோ மார்புவரைதான் எடுத்துக் கொள்ளப் போகிறான். பெரிய சுங்க அதிகாரியின் மகனாம். பூ பரா மரிப்புத் துறையில் மேற்படிப்புப் பெற அமெரிக்கா செல்கிறா னாம். இந்த விஷயம் எல்லாப் பத்திரிகைகளிலும் அவனது புகைப்படத்தோடு விளம்பரம் ஆகப்போகிறதாம்.

இவன் அப்பாவை முதலில் யார் கண்டார்கள்? இவன் என்ன பயிற்சிக்காக எங்கே போனாலென்ன, போகாவிட்டால் என்ன? என்னவோ பொதுஜனங்கள் இதே சிந்தனையில் தூக்கமின்றிக் கவலைப்படுவதாக ஒரு பிரமை.

"படம் நல்லா வரணுங்க , டிப்டாப்பா இருக்கணும். லைட் பத்திரிகையில் கூட வெளியாகப் போவுது. பாஸ்போர்ட் அளவு"

"சரி ஸார்"

ஒருவாறு அந்த ஆளும் வெளியேறிய பிறகு, மாணிக்கம் தன் கைக் குட்டையால் முகத்திலிருந்த வியர்வையையும் புன்னகையையும் வழித்தெறிந்தான்.

உஸ்! என்ன போலி வாழ்க்கை ! ஆடம்பரம், அழகு உருவம், சீ!

கடிகாரத்தில் மணி ஆறடித்தது. ஸ்டூடியோவை மூடிச் சற்று நிம்மதி அடைவதென்பது உண்டா? சின்ன ஸ்டூடியோ. அவனே முதலாளி, அவனே படம் பிடிப்பவன். ஆனாலும் இன்று மனம் மிகவும் அயர்ந்து போயிருந்தது. வாயில் ஒரு சிகரெட்டுடன் வாசலுக்கு வந்தான்.

ஸார்! அட துரதிருஷ்டமே ! இன்னுமா ஆட்கள் ? ஒரு ஆண் ஒரு பெண், பெண்ணின் கையில் ஒரு குழந்தை. குடும்பப் படமா?

"நாளைக்கு வாங்க. நான் வெளியே போறேன். வேறே ஆளு இல்லை."

அந்த மனிதன் ஏமாற்றத்துடன் மனைவியைப் பார்த்தான்.

"ரொம்ப தூரத்திலேருந்து வரோமுங்க. பஸ் கிடைக்க நேரமாயிடுத்து. இன்னிக்கு இல்லேன்னா திரும்பியும் குழந்தையைச் சிரமப்படுத்திக்கிட்டுத் தூக்கி வரணும்."

அப்பெண் பரிதாபமாகப் பேசினாள். "சரி சரி, வாங்க உள்ளே!" என்று முனகியவனாய் மறுபடியும் அறைக்குள் சென்றான் மாணிக்கம்.

"பையா, ஸ்டூலைக் கொண்டு வந்து போடு. ரெண்டு பேரும் நிக்கத்தானே போறீங்க ஸார்? உட்கார்ந்து குழந்தையை மடியில் வைச்சுக்கறீங்களா?"

"கொஞ்சம் தலை சீவிக்க முடியுங்களா?" என்றாள் அப்பெண்.

"அந்த ரூமில் சீவிக்குங்க."

அவள் குழந்தையுடன் உள்ளே சென்றாள். கணவன் போகவில்லை.

"நீங்களும் போறதானால் போங்களேன் ஸார். கோட்டு கூட மாத்திக்கலாம். இப்போ நீங்க போட்டிருக்கிற கோட்டைவிட அங்கேயிருக்கிறது படத்தில் நல்லா விழும்" என்றான் மாணிக்கம், ஒரு சின்னஞ் சிறு ஏளனச் சிரிப்புடன்.

"வேண்டாம். நான் படத்துக்கு நிக்கப் போறதில்லை."

"அம்மாவும் குழந்தையும் தானா? பையா, அந்த ஸ்டூலை எடுத்திட்டு நாற்காலி மட்டும் வை. பின்னாலே என்ன மாதிரி ஸ்கிரீன் வேணும் ஸார்? அழகான படம் வரணுமில்லே"

எத்தனையோ நாளாக இருந்த எரிச்சலெல்லாம் இன்று பேச்சில் வெடித்துச் சிதறியது.

"குழந்தையை மட்டும் தான் படம் எடுக்கணும்."

"அப்படிங்களா? அப்போ மேஜை மட்டும் போதும். பையா, மேஜையை இழு."

இதற்குள் தாயார் வெளியே வந்துவிட்டாள். கைகளில் அணைத்துப் பிடித்திருந்த குழந்தைக்குத்தான் தலை வாரிச் சீர் செய்திருந்தாள், தனக்கல்ல.

"குழந்தையை மேஜைமேலே விடுங்கம்மா. உட்காருகிற குழந்தையா? ரைட்! கையிலே ஏதாவது சாமான் கொடுக்கலாமா? அப்போ குழந்தை இன்னும் அழகா விழும் படத்திலே."

"எப்படி விழுந்தாலும் சரி"

அம்மனிதன் மெதுவாகப் பேசினான்.

"எங்க குழந்தைக்கு வைத்தியம் இல்லாத ஒரு அபூர்வ ரத்த வியாதி. இன்னும் ரெண்டு மாசம் தான் தாங்குமாம். அதுக்காகத்தான் .... ஒரு படம் எடுத்து வச்சிட்டா எப்பவும் பார்த்துக்கிட்டே இருக்க முடியுமில்லே ....."

மாணிக்கத்தின் வாயிலிருந்து சிகரெட் தானே நழுவி விழுந்தது. தான் திடீரென்று தெய்வ சன்னிதானத்தில் நிற்பதாக உணர்ந்தான் அவன், அந்த மகத்தான துயரத்தின் முன்னே.

உலகத்தில் இதயமில்லாத இடமே இல்லை ! ஆடம்பரத்துக்கெல்லாம் நடுவே ஓர் ஆழமான உணர்ச்சியா! செயற்கைகளுக்கெல்லாம் இடையில் இந்த இடத்திலும் ஓர் உண்மைத் தாபமா! இதயமற்ற விளம்பரமாய் இருந்த தொழில் இப்போது இரண்டு உள்ளங்களின் கரைகாணாச் சோகத்தைத் தாங்கித் தடவிக் கொடுக்கும் ஒரு புனிதத் தாயகமா!

அவன் பணிவாகி, பக்தியாகி, உறைந்து விட்டான்.

விம்மலோடு குழந்தையை மேஜைமேல் இருத்தி விட்டுத் தாய் விலகிய போது அவன் வெறும் விசையாய் இல்லை. மனிதனாய் மாறிக் காமிராவை நோக்கிச் சென்றான்.

– சிறுகதைக் கோவை (பதின்மூன்று சிறந்த எழுத்தாளர்களின் உயர்ந்த ஓவியங்கள்), முதற்பதிப்பு: மே 1961, எஸ்.ஆர்.சுப்பிரமணிய பிள்ளை பதிப்பகம், திருநெல்வேலி.

காதலியின் கனவுகளில் காகிதக் கப்பல்கள்

ஈர மொழியின் இரு வரியில்
இருண்டு போய் கிடந்த
நினைவுகளின் குளிர் போர்த்திய காதலுக்கு
நெஞ்சில் சொற்கள் ஊறுகிறது.

விவரிக்கத் தவறிய
உலர்ந்து போன உணர்வுகளை
மனங்களின் மூச்சில்
முடித்து வைத்திருக்கிறேன்.

பொய்யைத் தேடிச் சீண்டிய கனாவில்
பூத்த அமைதியை முத்தமிட்டதில்
கவிப்பாடல் ஒன்று கவிழ்ந்து கிடக்கிறது.

உன்னைக் காண பழுத்துக்கிடக்கும் கண்களைக்
கவலையுதறி நதியோரம் கழுவி
காயம் பயின்ற காகிதமொன்றை
கசக்கிக் கப்பலாக்கினேன்.

ஒருவேளை காற்றுக்கும்
நடுஜாமத்தில் நான் நனைந்து நடந்த
மௌனத்தின் அர்த்தம் தெரிந்திருக்கக் கூடும்.
உன் விருப்பம்போலவே நீ அதிலேறி
கரைகடந்து சென்றுவிடு என்னைவிட்டு.

-ஜோ, கன்னியாகுமரி

கேள்வியும் பதிலும்

சசிகலா விஸ்வநாதன்,

தமிழ் இலக்கிய வகைமைகளுள் சமய இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நபாண்டியன் எக்ஸ்பிரஸ் மாம்பலம் தாண்டும் போதே மாலினி விழித்துக் கொண்டாள். மதுரை போகும் போது இருக்கும் உற்சாகமும், மலர்வும் திரும்பி சென்னை திரும்பி வரும்போது சுத்தமாக இல்லை. இங்குதான், அவளுடைய அரசு பணி இருக்கிறது. அவள் சென்னைக்குத்தான் திரும்ப வேண்டியுள்ளது. இல்லத்தில், அவளை எவர் எதிர்பார்க்கிறார்கள்;அவள் கணவரைத் தவிர.

அவளை எதிர்பார்க்கின்றன; அலுவலக கோப்புகளும்; இன்றைய பகுப்பாய்வுகளும். அவளும்,மாத இறுதி ஊதியத்தை... அவளையும் விட அவள் குடும்பம்! மாலினியை உயிர்ப்போடு வைத்திருக்கும் ஒரே விஷயம்; அவளது அலுவல். அதிலும் அவளுக்கு பல பிரச்சனைகள் உண்டு. அவைகள் எவர்க்கும் நிகழ்வதே. அவைகளை அவள் எதிர் கொள்ளுவாள் ; அவள் போக்கிலும்; அதன் போக்கிலும். இப்படி யோசித்துக் கொண்டு இருக்கையிலேயே, ரயில் எக்மோர் ஸ்டேஷனில் நின்றது. அவசரமில்லாமல் நிதானமாக இறங்கினாள். மதுரைக்கு பாண்டியன் ரயிலில் போகும் போதெல்லாம்; அப்பா 'மதுரை சந்திப்பு' எனும் ஃபோர்டு அருகிலேயே நின்றிருக்கும் காட்சி நினைவில் வந்து போயிற்று. ஒரு நாளும் வாசு அவளைக் கூட்டிப் போக ஸ்டேஷனுக்கு வந்ததே இல்லை. மதுரை போகும் போது ரயிலடிக்கு வந்து வழியனுப்பியதும் இல்லை. காலையில் அலுவலகம் கிளம்பும் போதே பயணம் சொல்லிக் கொள்வதுதான் வழக்கம். இந்த முறை மட்டும், அவர் வர வேண்டியிருந்தது, அலுவலக வேலையின் நிர்ப்பந்தத்தினால். காலை ஆறு மணிக்கே அவள் அலுவலகம் வரவேண்டிய கட்டாயத்தில் இருந்தாள்,மாலினி. அதனால் வாசு, மாலினியின் பயண பைகளை எடுத்து வந்து எக்மோர் ஸ்டேஷனில் சந்தித்து கொடுப்பதற்காக, வந்திருந்தார். கூடவே ஒரு "க்ராண்ட் ஸ்வீட்ஸ்" இனிப்புகள் அடங்கிய சிறு டப்பா.ரயில் கிளம்பிக் கொண்டிருந்த சமயம்; ஓட்டமும் நடையுமாய் மாலினி வண்டியில் ஏறும் கணம்; ஒரு நன்னீர் பாட்டிலையும் கையில் கொடுத்தார்.

மாலினி,புறநகர் ரயில் பிடித்து இல்லம் சேர,மணி ஏழு. அலுவலகம் போகும் அவசரத்தில்; அவள். அலுவலகத்திற்கு தயாராகி வெளியே வந்தவளுக்கு, அதிர்ச்சி காத்திருந்தது.

மாலினியின் அத்தை," நீ கேட்கப் போகிறாயா? நான் கேட்கட்டுமா?" என்று அலுவலகத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்த வாசுவைப் பார்த்து கேட்க; வாசு இந்த தாக்குதலை எதிர்பார்க்கவில்லை; என்பது அவர் கலவர முகமே காட்டிக் கொடுத்தது." "அம்மா! ஆஃபீஸ் போகிற நேரத்தில், என்ன பேச்சு? சாயங்காலம் பார்த்துக் கொள்ளலாமே; என்று சற்றுக் கடுப்பாகச் சொன்னார். மாலினிக்கு இந்த

விவகாரத்தை இப்போதே முடித்துவிட ஒரு பிடிவாதம் வந்தது. நாள் முழுவதும் இதையே யோசித்துக் கொண்டு ஆஃபீஸ் அலுவலில் ஈடுபட முடியாது." யாராவது ஒருத்தர் கேளுங்கள்; இப்போதே கேட்டுவிடுங்கள்." என்று மாலினி சொல்லவும், " விடு, மாலினி! வா கிளம்பலாம்" என்று விஷயத்தை எளிதாக்க முயன்றார். கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் கொழுந்தன், மது " நீயே கேளும்மா! அவன் கேட்கவே மாட்டான்" என்று தூண்டுதல் போடவும், கையை இடுப்பில் வைத்து முன்னே வந்த அத்தை கண்ணை உருட்டி விழித்து மாலினியை நேரிடையாகப் பார்த்து, கேட்ட கேள்வி இதுதான்" நீ போன வெள்ளிக்கிழமை எவனோட ஒட்டி ஒரசிண்டு ஸ்கூட்டரில் போயிட்டு இருந்தே; வாசுவுக்கு இந்த மானக்கேடு தெரியுமா?" என்பதே ஆகும்.

ஒரு கணம், அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிறகு புரிந்தது. வெள்ளியன்று அலுவலகத்தில் வேலை முடிய மிகவும் தாமதமான படியால், அலுவலகத்தில் வேலை செய்யும் சின்னையன்

ஸ்கூட்டரில் மாலினியை எக்மோர் ஸ்டேஷனில் கொண்டுவந்து விட்டார். அதை மது பார்க்க நேர்ந்துள்ளது. அதுதான் இப்போது பூதாகரமாக வெடித்துள்ளது. வெறும் வாயை மெல்லுபவர்க்கு, சுவைக்க அவல் கிடைத்தது போல், ரயில் கிளம்பும் சமயம் அதை வாசுவிடம் மாலினி சொல்ல இயலவில்லை. இன்று காலை இந்த விஷயம் வெடிக்கும் வரை, அது அவளுக்கு நினைவிலேயே இல்லை.

மாலினிக்கு எங்கிருந்தோ வந்தது; அந்த கோபமும், தைரியமும். சற்றுக் குரலை உயர்த்தி எதிர் கேள்வி கேட்டாள். " இந்த கேள்வி யாரிடமிருந்து எனக்கு வருகிறது; . உங்களிடமிருந்தா; அத்தை? இல்லை மது ! உன்னிடமிருந்தா? வாசு! நீங்கள்தான் கேட்கிறீர்களா? ஒவ்வொருவருக்கும் தனியான பதில் இருக்கிறது என்னிடம்; யார் கேட்கிறீர்கள் என்பதைப் பொருத்து" என்று கேட்கவும் மூவரும் நிலை குலைந்து போனார்கள். ஒரு பேச்சும் இல்லாமல் வாசு, மாலினி பின்தொடர, அலுவலகத்திற்கு கிளம்பினான். அலுவலகத்திலிருந்து அன்று மாலை மாலினி சின்னையனுடன் ஸ்கூட்டியில் வீட்டு வாசலில் வந்து இறங்கியது அவள் புக்ககத்தாருக்கு வியப்பை அளித்தாலும், அவள் மேல் ஒரு அச்சத்தையும் உருவாக்கியது. அதற்குப் பிறகு அதைப்பற்றி பேச எவரும் துணியவில்லை.

இந்த நதிக்கரையில்

இந்த பள்ளத்தாக்கின் இருளில்
எங்கோ ஒரு கீதம் கிடக்கிறது இந்த நதிக்கரையில்
எங்கோ இருக்கிறது ரத்தப்போக்கெடுத்த சூரியனின்
எங்கோ இணைந்து போகின்றன துண்டுகள் உடைந்த படகின்
நீ ஆலிங்கனத்தில் திரும்பி தீபம் எரியவிட்டு ஒளிரச் செய்கிறாய்
நினைவு வந்த மொத்த தெருக்கள்
நான் அறிந்து கொண்டிருக்கிறேன்
சாலை ஓரத்தின் எல்லா மரங்கள்,
இங்கு வரை என ஆகாயத்தின் எல்லா நட்சத்திரங்கள்,
உன்னுடைய திரும்பி வருவதின் காலத்தில்
அழகுபடுத்துகிறது இந்த பிரபஞ்சம் முழுவதும்
கேட்டுக் கொண்டிருக்கிறேன் நான்
உன்னுடைய குரல்
கற்பனையால் நிரம்பிய
கணக்கற்ற வார்த்தைகளின் அருவியில்,
மீண்டும் இணைந்து போய் இருக்கின்றனர்
என்னுடைய வாழ்வின் துண்டுகள் மற்றும்
உன்னுடைய உயிர் மூச்சில்
இருக்கிறேன் சஞ்சரித்து நான்
தேடுகிறேன் இந்த நதியின் கரையில்
அநேக மரணங்களால் ஒரு கடந்த காலம்,
தூக்கியது பறவைகளின் குரலில்
உனது தலைமறைவாயிருக்கிற எதிர்காலம்.
உன்னிடமுள்ள எதுவும் இல்லை
ஆகாயம் முடிந்து இருக்கிறது உன்னில்
உன்னுடைய நாபி மண்டலத்தின் அருகே
விட்டு விட்டு மின்னுகின்றன நிலா _ சூரியன்
நீ என்னுடையவளாக இருக்கிறாய்
பேசுவதில் வெட்கப்படுகிறாய்
எதுவும் இல்லாமல் இருக்கிறது ஆனால்
உன்னைத் தவிர
என் வரை இல்லை
உன்னுடைய கண்களின் இசைவு நிரம்பி.
என்ன நீ இருக்கிறாய் எங்கேயாவது இந்த நதிக்கரைகள்?
தொலைந்து போய் இருக்கிறது
இந்த மலைச்சாரலின் இருளில் எங்கேயா வது?
விரும்புகிறதால் வண்ணத்துப்பூச்சிகள்
வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன
உன்னுடைய ஸ்தனங்களின் நாலாபுறம்.
நீ விரும்புகிறாய் எந்த ஆன்மாவை
நான் இருக்கிறேன் அவனுடைய குழந்தைப் பருவம் ,
யௌவனமாகவும் இருக்கிறேன் நான்,
அவளின் மட்டமான ஆசையாக
இருக்கிறேன் ,
அவளுடைய தாகமும் நானாக இருக்கிறேன்
நீ வராவிட்டால்
சாலை _ கரைகளில் குவியலாய் பூக்கள் உதிர்ந்து போகும்,
ஆகையால் நீ அவசியம் வா.
நான் உன்னைத் தொடுவேன்,
மேகம் வெடித்து மழையாகிறது
அப்போது வருவது நீ என்னருகே,
நான் உன்னுடைய காதுகளில்
எனது துக்கத்தின் நூற்றாண்டுகளின்
செய்திகளை சொல்வேன்
தேவிகளுக்கு புரியும் மொழியில்.

ஹிந்தியில் : ரமாகாந்த் ரத்
(ஒரியா கவிஞர்)
தமிழில் : வசந்ததீபன்

சுமையாகிப் போன குடும்பப் பொறுப்பு!

முனைவர் ஜ. ஜான்சிராணி,
ஆய்வு வளமையர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

ஆண், பெண் இருவருக்குமான குடும்பத்திற்குள்ளான வேலைப் பகுப்பு என்பது சமூகத்தில் பாலினத்தின் அடிப்படையில் வேறுபட்டதாகவே அன்று முதல் இன்று வரை உள்ளது. ஆணின் கடமை பொருளீட்டுவது என்றால், பெண்ணின் கடமை கணவனின் வருவாயை அறிந்து, அதனை வகுத்து அதற்குள் குடும்பம் நடத்துவது என்பதனைத் திருவள்ளுவர்,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வழத்தக்காள் வாழ்க்கைத் துணை"
– (குறள்.எண்.51)

என்கிறார். இதன் மூலம் ஆண், பெண் மேற்கொள்ளும் தொழிலிலும் உள்ளிருக்கும் பாலினப் பாகுபாட்டை அறிந்து கொள்ள முடிகிறது.

வீட்டிற்குள் இருந்த பெண்கள் சமூகவளர்ச்சியினால் கல்வி கற்று, பல்வேறு பணிகளில் தற்காலத்தில் பணியாற்றுகின்றனர். ஆனால், வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து கொள்வதில் பாகுபாடு இன்னும் மாறவில்லை. பெண்ணிற்கே சமைத்தல், சுத்தப்படுத்துதல், குழந்தைகளைப் பேணுதல் என அனைத்துப் பணிகளும் பெண்ணிற்கான பொறுப்பாகவே இருந்து வருகிறது.

"ஆணுக்கும் பெண்ணுக்குமான கல்வியும் பணிகளும் இன்றுவரை வேறுபடுத்தப்படுகின்றன. பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களில் ஆண் – பெண் இரண்டு குழந்தைகளுக்கும் கல்வியளிக்க முடியாத நிலை ஏற்பட்டால் முதலில் பள்ளியிலிருந்து நிறுத்தப்படுவது பெண்குழந்தைதான். வீட்டு வேலைகளைச் செய்தல், விறகு பொறுக்கி வருதல், தண்ணீர் எடுத்தல், தனக்கு இளைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல் போன்றவற்றைச் செய்வதற்குப் பெண் குழந்தைகளைச் சிறுவயது முதலே பழக்கப்படுத்துகின்றனர்.

குழந்தைமைப் பருவத்தில் தொடங்கும் இந்த வேலைப் பகுப்பு, ஆண் – பெண் என்று வளர்ந்த நிலையிலும் அப்படியே தொடருகின்றது. ஆண் செய்யும் வேலைகள்

மதிப்பார்ந்தவையாகவும் பணப்பயன் மிகுந்தவையாகவும் நிருணயிக்கப்பட்டுள்ளன. பெண்ணுக்கு அதிகமான, கடினமான வேலைகள் நிருணயிக்கப்பட்டிருந்தாலும் அவற்றிற்கு மதிப்பு நிலை குறைவாகவே கணிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைப் பகுப்பு பாலினக் கட்டமைப்பிற்கான நெறிப்படுத்தல்களுள் ஒன்று ஆகும்" (பெண்ணியச் சிந்தனையும் இலக்கியப் பதிவுகளும், ப.78)

ஆண் – பெண் வேலைப் பகுப்பு பாகுபாடு என்பது தமிழகத்தில் மட்டுமல்ல மலேசியாவிலும் இருப்பதை மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் ஊடாக அறிய முடிகிறது. இன்றைய காலத்தில் பெண்கள் தாங்கள் பணிக்குச்செல்லவும் தங்களின் குழந்தைகளைப் பள்ளிக்குக் கூட்டிச்செல்லுதல், அழைத்துவருதல், கூடுதல் வகுப்புகளுக்கு அழைத்துச் செல்லுதல் எனத் தங்களின் பணிகளைச் செய்ய ஏதுவாக இருசக்கர வாகனங்களில் பயணிப்பதை அதிகமாகக் காண முடிகின்றது. அதே மலேசியத் தமிழ்ப்பெண்கள் மகிழுந்தில் பயணிப்பதைச் சிறுகதைகள் அடையாளப்படுத்துகின்றன.

சரசுவின் 'சுதந்திரம் கேட்டேன்... இயந்திரமானேன்...' என்ற சிறுகதையில், தன் கணவனையே சார்ந்திருக்காமல் தன் பணிகளைத் தானே மேற்கொள்ள ஏதுவாக தனக்கென மகிழுந்து கேட்கிறாள் தமிழினி. பல அழுத்தங்களுக்குப் பின்பாக மகிழுந்து வாங்கித் தருகிறான் கணவன். ஆனால், அதுவே அவளுக்கு வினையாகிப் போனது.

தன் மனைவிக்கு மகிழுந்து வாங்கிக் கொடுத்தவுடன் வீட்டுப் பொறுப்புகளிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்ட செழியன் மொத்தமாக அனைத்துப் பொறுப்புகளையும் தமிழினி மீது சுமத்தினான். இதனை இந்தச் சிறுகதையில், "கணவன் வசமிருந்த வேலைகளும் பொறுப்புகளும் மெல்ல மெல்ல தமிழினியின் கைகளுக்கு மாற்றம் கண்டன. வருடம் ஆவதற்குள் கணவன் செய்த அனைத்து வேலைகளும் தமிழினியின் தலையில் விழுந்தன என்று தான் சொல்ல வேண்டும். அதன் பிறகு அவன் எதையும் கண்டுகொள்வதில்லை.

வீட்டில் பிள்ளைகளுக்குச் செய்தவற்குச் சில வேலைகள் இருப்பதால் அலுவலகம் முடிந்து சீக்கிரமாக வீடு திரும்பும் பழக்கம் கொண்டிருந்தவன், தமிழினிக்கு மகிழுந்து வந்த பிறகு சுத்தமாய் மாறிப்போனான். தன் வேலை மட்டுமே அவனது கண்களுக்குத் தெரிந்தது. வீட்டுப் பொறுப்புகளைப் பார்க்கத்தான் வசதியாக வாகனம் வந்துவிட்டதே! அதை ஓட்டவும் சம்பளம் இல்லாத மனைவி இருக்கிறாளே! அதனால் எதையும் கண்டும் காணாதவன் போல் இருந்தான். நயமாக வேலைகளைத் தட்டிக் கழித்தான்...

கணவன் செய்யவேண்டிய அனைத்து வேலைகளையும் சேர்த்து, தமிழினியே செய்தாள். பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவது, பள்ளி முடிந்து வீட்டிற்கு அழைத்துவருவது, வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்குவது, அவசர

வேலையில் கடைக்குச் செல்வது மட்டுமல்ல, ஒவ்வொரு மாத இறுதியிலும் அவனுக்காக வங்கி சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்யும் போது அவளது பொறுமை எல்லைக் கடந்து போனது" (அம்மாவுக்கு. பக்.74 -75)

அவளால் அதிக நேரம் அமர்ந்து வேலை செய்யவோ நீண்ட நேரம் நிற்கவோ கூட முடியாத அளவிற்கு முதுகு வலி கொடுக்கத் தொடங்கியது.

கணவனிடம் சொன்னால்... "என்னமோ நீ மட்டும் தான் மகிழுந்து ஓட்டுற மாதிரி அதிசயமா பேசுற... எல்லா பெண்களும் உன்னை மாதிரி தான்... உன்னைவிட இன்னும் அதிகமா காரை ஓட்டுறவங்களும் இருக்காங்க... ரொம்ப அலட்டிக்காத..." (அம்மாவுக்கு. ப.76) இப்படித் தங்கள் வேலைகளைத் தாங்களே சுதந்திரமாகச் செய்து கொள்ள எண்ணி வாகனங்களை வாங்கும் பெண்களின் நிலை இப்படித்தான் ஆகிப் போகின்றது.

"யானை தன் தலைமேல் தானே மண்ணைவாரி போட்டுக் கொண்டது போல நானே என் மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொண்டேன். மகிழுந்து வந்தால் சுதந்திரம் கிடைக்கும் என நினைத்தது என்ன ஒரு முட்டாள்தனம். ஒரு சின்ன சுதந்திரத்தை எதிர்பார்த்தேன். இப்போது இயந்திரமாக அல்லவா ஆகிவிட்டேன்? அழுதாள்... குமுறிக் குமுறி அழுதாள். இவளைப் போல் எத்தனைப் பெண்கள் உள்ளனரோ? வேலைகளும் பொறுப்புகளும் பெண்களுக்கே விதிக்கப்பட்டதா அல்லது பெண்களே பெற்றுக் கொண்டனரா?" (அம்மாவுக்கு. ப.78)

இன்று பெண்கள் ஆண்களுக்கு நிகராகப் பல துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். குடும்பச் சூழலில் பொருளாதாரப் பங்களிப்பைப் பெண்களும் அளித்து வருகின்றனர். ஆனால், அப்போதும்கூட குடும்பப் பொறுப்புகள், வீட்டு வேலைகள் இவை பெண்களுக்கானதாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. நவீன வீட்டு உபயோகச் சாதனங்கள், வாகனங்கள் இவையெல்லாம் வந்தாலும் அவற்றையும் பெண்களே கையாள்கின்ற சூழலே தொடர்கின்றன.

இந்தக் குடும்பப் பொறுப்புகள் சமமாகப் பகிரப்படும் காலம் என்று என்பதே பெண்களின் மனதில் உயர்ந்து எழுந்து நிற்கும் கேள்வி...!

நூல் விவரம்:
நூல் பெயர் : அம்மாவுக்கு... (சிறுகதைத் தொகுப்பு)
நூலாசிரியர் : உ. சரசு
வெளிவந்த ஆண்டு : 2015
வெளியீடு : உ. சரசு வெளியீடு, பினாங்கு, மலேசியா

அமெரிக்கத் தமிழப் பெண் ஆளுமைகள்-7

திருமதி. கலைச்செல்வி கோபால் , இந்தியானா

ஒரு காலத்தில் கதைகளை விரும்பும் ஒரு பையன் இருந்தான். அவனது பெயர் டோங் சின்வடஅமெரிக்காவின் இந்தியானா (Indiana) மாகாணத்தில் மன்சுடர் (Munster) என்ற ஊரில் வசித்து வரும் திருமதி. கலைச்செல்வி கோபால் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்னார்வத் தமிழ் ஆசிரியப்பணி புரிந்து வருகிறார். எழுத்தாளர், சமூக நலனில் அக்கறை கொண்டவர், மன இறுக்க விழிப்புணர்வுத் தொண்டுகளில் ஈடுபட்டு வருபவர் என்றப் பெருமைகளைக் கொண்டவர். இவரை சக்தி இதழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யவிருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

1.வணக்கம் கலைச்செல்வி அம்மா ! உங்கள் இளமைக்காலத்தைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் கூறுங்கள்

நான் கோவை மாவட்டத்தின் முத்திபாளையத்தில் பிறந்தேன். பட்டம் பெற்ற பின், பவானி, குனியமுத்தூர் மற்றும் சொக்கம்பாளையம் ஆகிய ஊர்களில் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கணித ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தேன். பாசத்தைப் பொழிந்த மாணவர்கள் மனத்தில் இடம் பெற்றது நான்பெற்ற பேறு. என் கணவர் திரு. கோபால் குளத்துப்பாளையத்தில் பிறந்தவர். அவர் ஐ.ஐ.டி., கான்பூரில் ஆராய்ச்சிப் பொறியாளராகஇருந்த போது, 1977இல் எங்களுக்குத் திருமணம் ஆனது. அவர் அமெரிக்காவில் முனைவர் பட்டம் பெற்ற பின், இந்தியானாவில் உள்ள "பர்டியூ" (Purdue) பல்கலைக்கழகத்தில் பணி புரிந்து வந்தார். நான் 1980இல் அமெரிக்காவிற்குக் குடியேறினேன்.

எங்களுக்கு இரண்டு மகன்கள். மூத்தவர் இளங்கோ, மருமகள் அமி, பேத்தி சோனியா ஆசா குறிஞ்சி. இளையவர் எழில் செந்தூரன், மனஇறுக்கத் தாக்கம் (autism) உடையவர்.

2. அமெரிக்காவில் இளம் குழந்தைப் பருவக் கல்விக்கான பயிற்சி (Early Childhood Education) எடுக்கத் தூண்டியது எது?

இங்கு மழலையர் காப்பகம் ஒன்றில் தன்னார்வப் பணி புரிந்து வந்தேன். அப்போதுதான் என் இளையமகன் எழில் மன இறுக்கத்தால் தாக்கப்பட்டது தெரியவந்து மனமுடைந்தேன். குழந்தைகளின் மன வளர்ச்சி பற்றி அறியும் நோக்கில் "பர்டியூ" பல்கலைக் கழகத்தில் இளம் குழந்தைப் பருவக் கல்விக்கான பட்டப்படிப்பில் சேர்ந்தேன். நான் அங்குக் கற்றுக் கொண்ட குழந்தை உளவியல் *(Infant Psychology)* பாடங்கள், தமிழ் கற்பித்தலிலும், மனஇறுக்கம் உடைய குழந்தைகள் வளர்ப்பில் ஆலோசனைகள் கூறவும்பெரிதும் உதவி வருகின்றன.

3. உங்களுக்கு 2020 இல் தமிழ் கற்பித்தலுக்கான "ஈரோடு தமிழன்பன் 80 விருது" கிடைத்ததை அறிந்தேன். பாராட்டுகள்! தன்னார்வத் தமிழ் ஆசிரியராக இருக்கும் உங்களுக்குத் தமிழ் கற்பித்தலில் ஆர்வம் ஏற்பட என்ன காரணம்?

நன்றி! இவ்விருது வழங்கிய மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கும், புதுச்சேரி ஒருதுளிக்கவிதைக்கும் முதற்கண் என் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சிறு வயது முதலே தமிழை விரும்பிப் படிப்பேன். சென்னையில் 1968ஆம் ஆண்டு இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அதை நடத்தும் முக்கியப் பொறுப்பில் இருந்தவர் என் மாமா, செயலாளர் திரு. மு. ரா. பெருமாள். அவர் மூலம் எனக்கு இவ்விழாவினைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு கிட்டியது. இதில் "அமிழ்து அமிழ்து என்று சொல்லிப் பாருங்கள். அது 'தமிழ்' என்று முடியும்" என்று நாமக்கல் கவிஞர் கூறியதைக் கேட்டும், அறிஞர்கள் பலரின் சொற்பொழிவுகளைக்கேட்டும் தமிழின் அருமை பெருமைகளை அறிந்தேன். தமிழ் மீதுள்ளஆர்வம் மேலும் வளர்ந்தது .

1987ஆம் ஆண்டு வடமேற்குப் பல்கலைக்கழகத்தில் முனைவர்அழகப்பா ராம்மோகன், "தமிழுக்கென ஓர் அந்திப் பொழுது" என்றத் தலைப்பில் தமிழ் வகுப்பைத் தொடங்கினார். முதன் முதலில் அங்கு ஆசிரியராகச் சேர்ந்தேன். "தமிழ் கற்பதால் என்ன பயன்?" என்று வினவும்பெற்றோர்களிடம், "தமிழ்மொழி நம் இனத்தின் அடையாளம். தமிழின்றி நம் இனம் அழிந்துவிடும்" என்று கூறுவேன். குழந்தைகள் தமிழ் கற்கும்போது என் இணையர் கோபால் பெற்றோர்களுக்குத் திருக்குறளில் ஒரு அதிகாரத்திற்கு விளக்கம் கூறுவார். அடுத்த ஆண்டு சிகாகோ புறநகர்ப்பகுதியில் மரு.சோம இளங்கோவன் மற்றும் திரு.வ. ச. பாபு அவர்கள் தொடங்கியத் தமிழ்ப்பள்ளியில் பல வருடங்கள் பணி புரிந்தேன். கடந்த 15 ஆண்டுகளாக இந்தியானாவில் உள்ள மன்ஸ்டரில் வகுப்புகள் நடத்திவருகிறேன்.

4.புதுச்சேரி ஒருதுளிக்கவிதை மூலம் "தமிழ் எழுத்துகள் ஒலிக்கும் முறையும் எழுதும் முறையும்" என்ற நூலை வெளியிட்டு உள்ளீர்கள். இந்நூல் உருவான விதம் பற்றிக் கூறுங்கள்.

சிகாகோ பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர்கள் முனைவர் லிண்டுகோம், முனைவர் பரமசிவம் பிள்ளை இருவரும், உயிர்மெய் எழுத்துகள் உருவாகும் போது மெய்யெழுத்துகளில் ஏற்படும் உருமாற்றத்திற்கு *Diacritic* என்ற குறியீடுகளை உருவாக்கினர். அவர்களின் இசைவோடு முனைவர் ராம்மோகன் அக்குறியீடுகளைத் தமிழ்ப்பள்ளியில் அறிமுகப்படுத்தினார். அவற்றைப் பயன்படுத்தி உயிர்மெய் எழுத்துப் பட்டியல் உருவாக்கி, கடந்த *32* வருடங்களாக என் வகுப்புகளில் பயன்படுத்தி வருகிறேன். இது குழந்தைகள் ஐயமின்றிஎழுத்துகளை எளிதாகக் கற்றுக் கொள்ள உதவி வருகிறது.

முனைவர் அகன் உருவாக்கிய "அமெரிக்காவில் அகரத் தமிழன் ராம்மோகன்" என்ற நூலுக்கு, "நான் அறிந்த அருமை நண்பர் ராம்மோகன்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதினேன். இதில், இப்பட்டியல் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். இதைப் பார்த்த அகன் ஐயா, விளக்கமாகப் பட்டியலைப் பற்றி எழுதிக் கொடுத்தால் அதைச் சிறுநூலாக வெளியிடலாம் என்று கூறினார். அதுவே இந்நூல் தோன்றக் காரணமாய் அமைந்தது !

குறியீடுகளை அறிமுகப்படுத்திய பேராசிரியர்கள், முனைவர் ராம்மோகன், எங்கள் அமெரிக்கத் தமிழ்ப் பள்ளியின் பொறுப்பாளர் திரு.வ. ச. பாபு, மரு. சோம இளங்கோவன், முனைவர் அகன் மற்றும் தட்டச்சு செய்து கொடுத்த ராஜி ராமச்சந்திரன் ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி!

5.உங்கள் வகுப்பில் குழந்தைகள் தமிழை விரும்பிக் கற்க என்னென்ன உத்திகளைப் பின்பற்றுகிறீர்கள்?

சொல் விளையாட்டுகள், தமிழ்ச் சொற்களை ஆங்கிலச் சொற்களோடு பொருத்துதல், சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுதல், பாடல்களைச் சைகைகளோடு கற்றுக் கொடுத்தல் போன்றவற்றை மாணவர்கள் மிகவும் விரும்புகிறார்கள். திருக்குறள் கற்றுத் தரும்போது இவ்வூர்ச் சூழ்நிலையை ஒட்டிய சிறிய கதையையோ செய்தியையோ சொல்வேன். எனவே மாணவர்களுக்குக் கற்பதில் ஆர்வம் பெருகிவிடும். எடுத்துக்காட்டாக, "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற குறளில் "என்பும் உரியர் பிறர்க்கு" என்பதைச் சொல்லும்போது எலும்பு மஜ்ஜை மாற்று *(bone marrow transplant)*, இரத்தக் கொடை *(blood donation)*, உறுப்புக் கொடை*(organ donation)* போன்றவற்றை ஒப்பிட்டுப் பேசுவேன். வகுப்பில் கரும்பலகையில் எழுதிக் கற்றுக்கொடுப்பதைப் புகைப்படம் எடுத்துப் பெற்றோர்களுக்கு அனுப்புவேன். பாடக் குறிப்புகளையும் அனுப்புவேன். இவை அவர்களுக்குத் தம் குழந்தைகளுக்கு வீட்டில் மீள்பார்வை அளிக்க உதவும்.

6.தமிழ் மொழி கற்பித்தலில் நீங்கள் எடுத்துக் கொண்ட புத்தொளிப் பயிற்சி பற்றிக் கூறுங்கள்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், எட்யுரைட் அறக்கட்டளை*(EduRight Foundation)* அமெரிக்கா , *2020*இல் இணைந்து நடத்திய வடஅமெரிக்கத் தமிழ்ப்பள்ளி

ஆசிரியர்களுக்கான எட்டு வாரப் புத்தொளிப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்தேன். "தமிழ் எழுத்துகளின் ஒலிப்பு(உச்சரிப்பு) முறையை மாணவர்களுக்குக் கற்பிப்பதில் ஏற்படும் சிக்கல்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதினேன். சான்றிதழ் வழங்கும் விழாவில், சிறப்புப் பேச்சாளர்களுள் ஒருவராக என்னைத் தேர்ந்தெடுத்தப் பயிற்சி ஏற்பாட்டாளர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7.சிகாகோ மாகாணத்தில் தமிழ் கற்பித்தல் மட்டுமன்றி மனித நேயம் மிக்க சமூகப் பணிகளுக்குப் பெயர் போனவர் நீங்கள். உங்களுக்கு மதுப் பழக்கத்திலிருந்து விடுபட உதவும் "அல்கஹாலிக்ஸ் அனானிமஸ்"(Alcoholics Anonymous) என்ற அமைப்பில் ஈடுபாடு எப்படி ஏற்பட்டது? இதில் உங்கள் பங்களிப்பு என்ன?

என்னுடன் படித்த நான்கு நண்பர்கள் மதுப்பழக்கத்துக்கு அடிமையாகி, குடும்பத்தைத் தவிக்கவிட்டு, இளம் வயதிலேயே மறைந்துவிட்டார்கள். இது என் மனத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. இயந்திர மனிதன் போலல்லாது, ஒரு தவம் என 366 பக்கங்கள் கொண்ட *"Courage to Change"* என்ற மதுப் பழக்கத்தை கைவிட ஆலோசனைகள் வழங்கும் ஆங்கிலப் புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தேன். இதை முடிக்க இரண்டு வருடங்கள் ஆயின. நான் எழுதும் போது, இதைப் படித்து ஊரில் ஒரு குடும்பமாவது குடிப்பழக்கத்தாக்கத்திலிருந்து மீண்டால் போதும் என்ற நினைப்புதான் அடிமனதில் ஓடிக் கொண்டிருந்தது. இப்போது கன்னியாகுமரியில் உள்ள பாதிரியார் நண்பர் ஒருவர் சில குடும்பங்களுக்கு இப்புத்தகத்தைப் பற்றிச்சொல்லி, சிலர் பழக்கத்திலிருந்து மீண்டு வந்திருக்கிறார்கள் என்பது மன நிறைவு தரும் செய்தியாகும்.

8.மன இறுக்க விழிப்புணர்வுத் தொண்டின் தொடக்கம் பற்றிச் சொல்லுங்கள்.

என் மகன் எழிலுக்கு மூன்று வயதாக இருக்கும் போது அவருக்கு மன இறுக்கம் இருப்பதாகச் சொன்னார்கள், எங்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலாயிற்று. அன்புத்தோழி திருமதி. ராணிரோசு, மன இறுக்கத் தாக்கம் உள்ளக் குழந்தையைக் காணவும், அவரது பெற்றோர்களிடம் பேசவும் ஏற்பாடு செய்தார். நண்பர் அழகப்பா ராம்மோகன் *"Cracking the Shell"* என்ற மன இறுக்கத் தாக்கம் பற்றியக் கட்டுரையை அனுப்பினார். அவரது மருமகன் மரு. குமார் வெங்கட் சிறந்த நரம்பு மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். இத்தாக்கத்தால் ஏற்பட்ட துன்பங்களின் வலியை உணர்ந்தவள்என்றமுறையில்,இதேபோல்நாமும்தாக்கத்துக்குஉள்ளானகுடும்பங்களுக்கு உதவ வேண்டும் என்பதுதான் இத்தொண்டின் தொடக்கம்.

9.நீங்கள் மன இறுக்கம் தொடர்பாகச் செய்து வரும் தொண்டுகள் பற்றி விவரமாகக் கூறுங்கள்.

மன இறுக்க மையங்கள் மற்றும் பெற்றோர்களுக்கான ஆதரவுக்குழுக்களில் உறுப்பினராக உள்ளேன். இக்குழுக்களிலிருந்து நான்தெரிந்து கொள்ளும் செய்திகள் ஏராளம். நான் பல வருடங்களாகப் புத்தகங்கள் படித்துத் தெரிந்து வைத்திருக்கும்

செய்திகளையும் பெற்றோர் குழுக்களில் பகிர்ந்து கொள்வேன். அமெரிக்கத் தமிழ்வானொலி 2021 ல் நடத்திய கருத்தரங்கில் மருத்துவர்களுடன் நானும் கலந்து கொண்டு, என் கருத்துகளை வெளிப்படுத்தியது மனத்திற்கு நிறைவை அளித்தது.

அமெரிக்காவிலும் இந்தியாவிலும் உள்ள பெற்றோர்களுடன் தொலைபேசி அல்லது இணையவழியில் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு ஆலோசனைகள் (counselling) வழங்கி வருகிறேன். இவற்றின் மூலம் ஒரு சில குழந்தைகளிடம் முன்னேற்றம் ஏற்பட்டுக் கல்லூரி வரை சென்றிருக்கிறார்கள். இச்செய்திகள் என்னை எல்லையில்லா மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

எங்கள் மன்சுடர் ஊருக்கு அடுத்த ஊரில் பல பெற்றோர்கள் சேர்ந்து ஒரு சிறப்புக் குழந்தைகள் இல்லத்தில், மன இறுக்கத் தாக்கம் உள்ள மற்றச் சிறப்புக் குழந்தைகளைத் தோட்ட வேலை செய்யவைக்கிறார்கள். பல தன்னார்வலர்களின் உதவியோடு, தோட்டத்துப்பூக்கள், காய்கறிகள் விற்கப்படுகின்றன. விற்று வரும் வருமானம் அந்தச்சிறப்புக் குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அவர்களுக்கும் ஆதரவு அளித்து வருகிறோம் .

10.உங்கள் மகன் எழில் செய்து வரும் சமூகப் பணி குறித்துக் கூறுங்கள்.

எழில் நூலகத்திற்கு வாரம் இருமுறை சென்று நூல்களைத் துப்புரவுசெய்து அடுக்கி வைப்பார். அவரால் சமுதாயத்துக்கு ஏதாவது நன்மை கிடைக்கிறது என்று மகிழ்வேன். முன்னாளில், இசைச் சத்தம்கேட்டாலே காதை மூடிக் கொண்ட எழில், பின்னாளில் பியானோ வாசிப்பதில் ஆர்வம் காட்டித் தேர்ச்சி பெற்றுள்ளார். அவர் முதியோர் இல்லத்திற்கு வாரம் இருமுறை சென்று அரைமணி நேரம் பியானோ வாசிப்பார். அவ்வில்லத்தில் உள்ளோர் மகிழ்ந்து என் மகனைப்பாராட்டும்போது என் கண்கள் குளமாகும்.

11.நீங்களும் உங்கள் கணவரும் செய்து வரும் வேறு நற்பணிகள் பற்றிச்சொல்லுங்கள்.

இங்கு அரசுப் பள்ளியில் ESL (English as a Second Language) வகுப்பில் துணை ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணி புரிந்தேன். நான் கற்றுக்கொண்டவைகளை எங்கள் சிற்றூரிலுள்ள சில ஆசிரியர்களுக்கு இணைய வழியாகக் கற்றுக் கொடுத்தேன்.

என் கணவரும் தமிழ்ப்பற்று மிக்கவர். தாம் ஆங்கிலத்தில் எழுதிய பொறியியல் புத்தகங்களில் கூடத் திருக்குறளைக் கூறித் தொடங்கி இருக்கிறார். நாங்கள் ஜெர்மனி, கனடா, அமெரிக்கா போன்றநாடுகளில் தமிழ்க்கல்வி மற்றும் வளர்ச்சிக்கானத் திட்டப்பணிகளுக்கு நன்கொடை வழங்குவோம். தமிழகத்தில் சில மாணவர்களின் கல்லூரிச் செலவுகளை ஏற்றுக் கொள்கிறோம். பெரியார் கல்லூரிக்குப் புத்தகங்கள் வழங்கியுள்ளோம். சிறந்த ஆசிரியருக்கான பரிசைத்தொடங்கி வைத்தோம். எங்கள் வீட்டில் நடக்கும் விழாக்களுக்கு நண்பர்கள் கொடுக்கும் பரிசுப் பொருள்களை மன இறுக்க ஆராய்ச்சி மையத்துக்குத் (Autism Research Center) தந்துவிடுவோம்.

12. பல பணிகளில் ஈடுபட்டு வருகிறீர்கள். இப்பணிகளுக்கிடையே உங்களுக்கு மிகவும் பிடித்த பொழுதுபோக்குகள் பற்றிச் சொல்லுங்கள்.

நான் இயற்கை எழிலைக் காண்பதில் பெரிதும் ஆர்வம் உள்ளவள். செடி, கொடி, மரங்களிலுள்ள மலர்களைப் படமெடுத்து, சுற்றம், நட்பிற்கு அனுப்புவேன். எனது 'இயற்கை எழில்' என்ற கவிதை'கொக்கரக்கோ' இதழில் வெளியானது. 25ஆம் ஆண்டு மணநாள், வளைகாப்பு நிகழ்ச்சிகளில் ஒரு கற்பனைக் கதை கூறி, அதற்கேற்பப் திரைப்படப் பாடல்களைப் பாடி மகிழ்விப்பேன்.

13.சக்தி இதழ் வாசகர்களுக்காக உங்கள் அனுபவத்திலிருந்து நிறைவாகச் சில வார்த்தைகள் கூறவேண்டுகிறேன்.

நான் விரும்பும் குறள், "கொன்றன்ன இன்னா செய்யினும்". மன்னிப்பதே மனித நேயம். ஆசிரியர் பணி அறப்பணி! செம்மையான தமிழ்மொழியை அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு செல்வோம்!

மன இறுக்கம் என்பது ஒரு பெரிய கடல். அதில் நான் அறிந்தது ஒரு சிறு துளி. கடல் ஆழம் கண்டாலும் மன இறுக்கத் தாக்கம் உள்ளவர்களின் மன ஆழம் மற்றும் அறிவுத் திறமையைக் கண்டுபிடிக்க இயலாது. என் மகன் எழிலுக்குப் பத்து வயது இருக்கும். இரண்டு வாரத்திற்கு ஒரு முறை நடக்கும் எனது தமிழ் வகுப்பில் அமர்ந்திருப்பார்.ஒரு நாள்உயிர்மெய் எழுத்து பட்டியல் எழுத, மேற்புறம் உயிர் எழுத்துகளையும், பக்கவாட்டில் மெய் எழுத்துகளையும் எழுதி வைத்துவிட்டுச் சமையல் அறைப் பக்கம் சென்று இருந்தேன். திரும்பிவந்து பார்த்தால் 216 உயிர்மெய் எழுத்துகளையும் ஐந்தே நிமிடங்களில்எழுதி வைத்திருந்தார். ஒருநாளும் பென்சில் எடுத்து எழுதிப் பழகாமல்இருந்த அவர், அன்று அத்தனை எழுத்துகளையும் எப்படி எழுதினார் என்பது தெரியவில்லை. எனக்கு ஏற்பட்ட வியப்பைச் சொற்களில் கூற முடியாது. வாசகர்களின் குடும்பங்களில் மன இறுக்கத் தாக்கம் உள்ளகுழந்தைகள் இருப்பார்களேயானால், என்றாவது இம்மாதிரியானஅற்புதங்கள் நிகழும்; நம்பிக்கையோடு காத்திருங்கள்.

என் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த ''சக்தி'' இதழுக்கு என் அன்பின் நன்றி!

தெளிந்த அறிவு ,சமூக அக்கறை, பொறுமை, மனதிடம் , அன்பு போன்ற அத்தனை பண்புகளையும் கொண்ட திருமதி.கலைச்செல்வி அவர்களை நேர்காணல் செய்ததில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். அம்மையாரின் பணி மேலும் சிறக்க ''சக்தி'' இதழ் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-பேட்டியாளர்

மேனகா நரேஷ், நியூஜெர்சி

மலரே மௌனமா

ராஜஸ்ரீ முரளி

அன்று வெள்ளிக்கிழமை. பிரமாண்டமான அந்த நகை கடையில் நல்ல கூட்டம். வளையல் செக்ஷனில் நின்று கொண்டிருந்த ஸ்வேதாவிடம் மாங்கல்யம் செக்ஷனில் இருந்த தீபா ஹே ஸ்வேதா ஒரு பத்து நிமிஷம் என் செக்ஷனில் இருக்க முடியுமா? குழந்தைக்கு உடம்பு சரியில்லை. வீட்டுக்கு ஒரு போன் பண்ணிட்டு வந்துடறேன் என்று அவள் பதிலுக்கு காத்திராமல் நகர்ந்து விட்டாள். ஸ்வேதா மாங்கல்யம் செக்ஷனை எட்டி பார்த்தாள். நான்கு பெண்மணிகள் மட்டும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அருகே போனவள், உட்காருங்க என்ன வேணும் பாருங்க என்றவளிடம் ஏம்மா மத்த நகைகள்னா செலக்ட் பண்ணனும். தாலி வாங்கும் போது அந்த பிரச்சினையே கிடையாதே. எங்கள் வழக்கப்படி அணியும் மாங்கல்யத்தை செலக்ட் பண்ணியாச்சு. இதோ இதுதான் என்று அவர்கள் காட்டினார்கள். என்ன கிராம் எவ்வளவு விலை என்று சொன்னால் நல்ல நேரம் முடிய இன்னும் அரை மணி நேரம் தான் இருக்கு. அதுக்குள்ள வாங்கிடணும்னு வீட்ல பெரியவங்க சொல்லி அனுப்பினாங்க என்று அவர்கள் சொல்லவும் அவளுக்கு படபடப்பு அதிகமானது.

மனதிற்குள் இந்த நிலைமையில் இருக்கும் நான் எப்படி என் கையால் தருவேன் என்று நினைக்கும் போதே அவளுக்கு வியர்த்து கொட்டியது. என்னம்மா யோசனை டைம் ஆகின்றது பார் என்று அவர்கள் அவசரப்படுத்தவும் இதையெல்லாம் பார்த்தபடி செயின் செக்ஷனில் இருந்த வாசு வேகமாக நடந்து அருகே வந்து என்ன ஸ்வேதா ஏதாவது ஹெல்ப் என்றவுடன் அவளுக்கு அப்பாடி என்று ஆனது. அமாம் வாசு, இவங்க மாங்கல்யத்தை செலக்ட் பண்ணிட்டாங்க. கொஞ்சம் அவங்களுக்கு பில் போட ஹெல்ப் பண்றீங்களா. என் செக்ஷனில் இரண்டு பேர் ரொம்ப நேரமா வெயிட் பண்றாங்க என்று வேகமாக நகர்ந்து தன் இருப்பிடத்திற்கு வந்தவள் தண்ணீர் பாட்டிலை திறந்து மடமடவென குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள்.கொஞ்ச நேரம் கழித்து என்ன ஸ்வேதா இப்படி பண்றே என்று வாசு உரிமையோடு அவளை கேட்டான். இல்லை வாசு என் வாழ்க்கையை பத்தி உனக்கு நல்லா தெரியும். யாரோ முகம் தெரியாத அந்த பெண் கல்யாணம் ஆகி நல்லா இருக்கனும். அதனால் தான் என்று மெல்லிய குரலில் அவனிடம் சொல்லி முடிக்கும் முன் வாசு தொடர்ந்தான். லன்ச் ஹவர்ல உன்கிட்ட கொஞ்சம் பேசணும். ஒன் ஹவர் பெர்மிஷன் போடு. வெளியே போய் சாப்பிடலாம் என்று சொல்லிவிட்டு நகர்ந்தான்.

சொன்னது போலவே பெர்மிஷன் போட்டுவிட்டு சாப்பிட வந்தவர்கள் வாசு லன்ச் ஆர்டர் செய்துவிட்டு உன்கிட்ட நான் ரெண்டு வருஷமா கேட்டுகிட்டு இருக்கேன் நம்முடைய கல்யாணத்தை பத்தி. நீ பதிலே சொல்லலை. ஏன் ஸ்வேதா என் கிட்ட உனக்கென்ன தயக்கம். நாம ரெண்டு பேரும் ஆறாம் கிளாஸ்லேர்ந்து ஒன்னா படிச்சோம். காலேஜிலயும் அது தொடர்ந்தது. மனசுக்குள்ள உன்னை எப்பவோ விரும்ப ஆரம்பிச்சிட்டேன். ஆனால் விதி வேற விதமா யோசிச்சி உன் மாமாவை கல்யாணம் பண்ணிக்கிட்டே. கடவுளின் விருப்பம் அதுதான்னு உன்னை மனசார வாழ்த்திவிட்டு ஒதுங்கினேன். ஆனால் ஒரே வருஷத்தில் நீ உன் கணவனை விபத்தில் இழந்து கைக்குழந்தையோடு நின்றதை கேட்டு துடிச்சி போனேன். உன்னை மாதிரியே என் அம்மாவும் எனக்கு ரெண்டு வயசாயிருக்கும் போதே கணவனை இழந்து எந்த ஆதரவையும் இல்லாமல் போராடி என்னை வளர்த்தாள்.உன்னை இந்த நிலைமையில் பார்த்த அன்னிக்கே நான் முடிவு பண்ணிட்டேன். நானும் என் அம்மாவும் பட்ட கஷ்டத்தை நீயும் உன் குழந்தையும் படக்கூடாது. தயவு செய்து என்னை புரிஞ்சிக்கோ ஸ்வேதா. அவன் பேசி முடித்தவுடன் அவள் கண்களிலிருந்து பொல பொலவென கண்ணீர் வழிந்தது. வாசு நம்முடைய நட்புக்கு இது களங்கம் இல்லையா? இந்த சமூகம் என்னை என்ன சொல்லும் யோசித்து பார். உடனே வாசு, சமூகத்திற்கு நிறைய வேலை இருக்கு. நம்மை பற்றியெல்லாம் கவலைப்படாது. அப்படியே இருந்தாலும் நாம கஷ்டப்படும் போது இந்த சமூகம் உதவிக்கு வந்ததா? இல்லையே. ஏன் ஸ்வேதா நல்ல நட்பு காதலாக மாறும் போது கணவன் மனைவியா ஏன் மாறக்கூடாது? உன்னுடைய பதிலுக்கு நாளை நான் காத்திருப்பேன். உன்னுடைய சம்மதத்தை ஒரு சின்ன சாக்லேட் மூலமாக எனக்கு தெரியப்படுத்தினால் மகிழ்வேன் என்று சொல்லிவிட்டு போகலாமா என்றான். இரவெல்லாம் நன்றாக யோசித்து மறுநாள் காலை வேலைக்கு கிளம்பியவள் வாசுவிற்கு ரொம்ப பிடித்த கேட்பரீஸ் சாக்லெட்டை வாங்கி கொண்டு நேரே வாசுவின் செக்ஷனை புன்னகையுடன் நெருங்கினாள்.

அன்பு

விதைத்து காத்திருந்து
துளிர் வரப்பார்த்திருந்து
கொடியிடை பற்றிட
கொம்பொன்று ஊன்றிவிட்டு
வளைத்து வளைந்து மேலெழ
கைக்கொட்டி மகிழ்ந்திருந்து
பூவாய் நீ சிரிக்கையில்
மனதுக்குள் மழைசாரல்
துளித்தண்ணீர் ஊற்றியதற்கா
ஆனந்தம் அள்ளித்தருகிறாய்
வேர் உனது உழைப்பு உனது
மலர்ச்சியின் இன்பம் எனது

- இரம்யாநடராஜன்
செங்கல்பட்டு

அந்தக் கால மனிதர்கள்

மலர்மதி,
ஆவடி, சென்னை

ஒரு காலத்தில் கதைகளை விரும்பும் ஒரு பையன் இருந்தான். அவனது பெயர் டோங் சின் ஹாலில் போடப்பட்டிருந்த ஈஸி சேர்களில் அமர்ந்திருந்தனர் தாத்தாவும், பாட்டியும்.

பாட்டி மடியில் பவித்ரா. அவர்களின் செல்லப் பேத்தி.

பேத்திக்கு தினமும் கதைகளைச் சொல்வார் பாட்டி. பழைய காலத்தைப் பற்றி தோண்டித்துருவி பல கேள்விகளைக் கேட்பாள் பவித்ரா. பாட்டியும் சளைக்காமல் பதில் சொல்வார்.

வழக்கம்போல் இருவரும் பேசிக்கொண்டிருக்க, கிச்சனில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள் சீதா.

''அம்மா சீதா...'' என்று தாத்தா குரல் கொடுக்க, ''என்ன..?'' என்று வந்து நின்றாள் அவருடைய மருமகள்.

''காபி கொண்டு வாம்மா.''

இரண்டு டபராக்களில் காபியைக் கொண்டு வந்து, 'டொக்'கென்று டீபாயின் மேல் சத்தமாய் வைத்தாள் சீதா.

''ஈஸி சேரில் ஜாலியா உக்கார்ந்துக்கிட்டு ஆர்டர் கொடுக்கறதுல ஒண்ணும் கொறைச்சல் இல்ல...' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தபடி கிச்சனுக்குள் நுழைந்த சீதாவின் பின்னால் ஓடி வந்தாள் பவித்ரா.

''அம்மா.. அம்மா...''

''என்னடி..?''

“நீ மசாலா எதுல அரைக்கிறே?”

“மிக்ஸிலதான்.”

“துணி எப்படி துவைக்கிறே?”

“வாஷிங் மெஷின்ல.”

“குழம்பு எதுல செய்யறே?”

“குக்கர்ல. ஆமாம், பெரிய மனுஷியாட்டம் ஏன் இதையெல்லாம் கேக்கறே?” என்று கடுப்பானாள் சீதா.

“பாட்டி அந்த காலத்துல அம்மியில் மசாலா அரைச்சிருக்காங்க. கையாலேயே துணி துவைச்சிருக்காங்க. ஆட்டுக் கல்லுல மாவு ஆட்டியிருக்காங்க. உரல்ல அரிசி குத்தியிருக்காங்க. எல்லா வேலையும் கையால செஞ்சு, செஞ்சு ஓய்ஞ்சுபோன அவங்களுக்கு கடைசி காலத்துல கொஞ்சம் ரெஸ்ட் கிடைச்சிருக்கு.”

-2-

“அதுக்கு என்ன இப்ப?”

“அவங்களுக்குக் கிடைச்சிருக்கிற இந்த ஓய்வு நேரத்தையாவது அவங்க நிம்மதியா கழிக்கவேணாமா? கொஞ்சம் யோசிச்சுப் பாரும்மா... பாட்டி போல இப்ப உன்னால வேலை செய்ய முடியுமா?”

ஆறு வயது சிறுமி கேட்ட கேள்விக்கு ஆடிப்போனாள் சீதா.

‘சடா’ரென அந்த உண்மை உறைத்தது.

இனி பெரியவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என தீர்மானித்த சீதா, தன் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட பவித்ராவை வாரி அணைத்து முத்தமிட்டாள்.

ஆனந்திபாய் கோபாலராவ் ஜோஷி: வெளிநாட்டில் மருத்துவம் படித்த முதல் இந்தியப் பெண்

– மேனகா நரேஷ்

பெண்கல்வி எட்டாக்கனியாய் இருந்த காலகட்டத்தில் தன் விடாமுயற்சியால் பல்வேறு தடைகளையும், சமூக விரோதத்தையும் எதிர்கொண்டு, அமெரிக்காவில் மருத்துவம் பயின்ற முதல் இந்தியப்பெண் என்ற பெருமைக்குரியவர் ஆனந்திபாய் கோபாலராவ் ஜோஷி. அவரது வாழ்க்கையும், சாதனைகளும் முன்னேறத் துடிக்கும் பல பெண்களுக்கு உத்வேகம் அளிக்கும்.

ஆரம்பக் கால வாழ்க்கை

1865 ஆம் வருடம் மார்ச் மாதம் 31 ஆம் தேதி, பம்பாய் பிரசிடென்சியைச் சேர்ந்த கல்யாண் என்ற ஊரில் கங்காபாய் , கண்பத் ஜோஷி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார் ஆனந்திபாய். இவருடைய இயற்பெயர் யமுனா. ஜமீன் பரம்பரையைச் சேர்ந்த செல்வவளம் மிக்கக் குடும்பத்தில்,யமுனா 10 குழந்தைகளில் ஆறாவது குழந்தையாகப் பிறந்தார். யமுனாவின் அறிவாற்றலை அடையாளம் கண்டு கல்விகற்க ஊக்கப்படுத்தினார் அவரது தந்தை. வீட்டில் இருந்தபடியே மராத்தியில் கல்வி கற்றார் யமுனா.

திருமணம்

19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் குழந்தைப் பருவ திருமணம் ஒரு பொதுவான நடைமுறையாக இருந்ததால், ஒன்பது வயது சிறுமியான யமுனாவை கோபால்ராவ் ஜோஷி என்பவருக்குத் திருமணம் செய்து வைத்தனர் அவருடைய பெற்றோர். முதல் மனைவியை இழந்த கோபால் ஜோஷி இவரைவிட 20 வயது மூத்தவர். திருமணத்திற்குப் பிறகு "ஆனந்தி" என்று பெயர் மாற்றம் செய்தார் கோபால்ராவ். அஞ்சல் குமாஸ்தாவாக வேலை பார்த்த கோபால்ராவ் ஒரு முற்போக்குச் சிந்தனையாளராகவும் பெண்கல்வி ஆதரவாளராகவும் இருந்தார். தன் மனைவிக்குப் படிப்பிலிருந்த ஆர்வத்தைக் கண்டுகொண்ட அவர் ஆனந்திபாய் கல்வி பயிலவும் ஆங்கிலம் கற்றுக்கொள்ளவும் உதவினார்.

வெளிநாட்டில் மருத்துவம் பயிலக் காரணம்

ஆனந்திபாயின் 14 வது வயதில் அவருக்குப் பிறந்த ஆண் குழந்தை போதிய மருத்துவ வசதியில்லாததால் பத்தே நாட்களில் இறந்து போனது.குழந்தையின் மரணம் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. மருத்துவராக வேண்டுமென்ற எண்ணம் அவருக்குள் தீவிரமாக எழுந்தது. கோபால்ராவின் ஆதரவுடன் ஆனந்திபாய் மருத்துவம் பயில ஆயத்தமானார். பெண்களுக்கான மருத்துவக் கல்வியை அனுமதிக்கும் கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் இல்லாததால், வெளிநாட்டில் மருத்துவம் படிக்க முடிவு செய்தார் ஆனந்திபாய்.

சமூக எதிர்ப்பு

19ஆம் நூற்றாண்டில் ஒரு இந்தியப் பெண் கல்வி பயில அயலகம் செல்லப்போகிறாள் என்ற செய்தி சமூகத்தில் எதிர்ப்பையும் , கோபத்தையும் ஏற்படுத்தியது. அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராகப் போராடினார் ஆனந்திபாய் . கோபால்ராவ் மனைவிக்கு ஆதரவாக நின்று, ஆனந்திபாய் வெளிநாடு சென்று மருத்துவம் படிக்கத் தன்னால் இயன்றவரை முயற்சி செய்தார்.

கோபால்ராவ் வைல்டருக்கு எழுதிய கடிதம்:

ஆனந்திபாய் ஜோஷி அமெரிக்காவில் மருத்துவம் படிக்க உதவுமாறு அமெரிக்க மதப் போதகரான ராயல் வைல்டருக்குக் கடிதம் எழுதினார் கோபால்ராவ் . பிரின்ஸ்டனின் ‘‘மிஷனரி ரிவ்யூ’’ என்ற பத்திரிகையில் வைல்டர் இந்தக் கடிதத்தை வெளியிட்டார். இதை நியூ ஜெர்சியில் உள்ள ரோசெல்லே எப்னும் நகரில் வசிக்கும் தியோடிசியா கார்பென்டர் என்ற பெண்மணிப் படித்தார். அமெரிக்காவில் மருத்துவம் பயிலவேண்டும் என்ற ஆனந்திபாயின் லட்சியமும் , அதை நிறைவேற்ற அவரது கணவர் தரும் ஆதரவாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டார்தியோடிசியா. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள்தியோடிசியாவும் ஆனந்திபாயும் இருநாடுகளுக்கும் இடையிலான மதம், சமூகம் மற்றும் கலாச்சார வேறுபாடுகள் குறித்துத் தங்கள் கருத்துக்களைக் கடிதங்கள் வாயிலாகப் பரிமாறிக் கொண்டனர். இந்தக் காலகட்டத்தில் ஆனந்திபாய்க்கு மூச்சுத்திணறல், தலைவலி, காய்ச்சல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன. தியோடிசியா அமெரிக்காவில் இருந்து மருந்துகள் அனுப்பியும் அவருக்குப் பூரணமாகக் குணமடையவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கோபால்ராவ் ஆனந்திபாயை மருத்துவம் படிக்க ஊக்குவித்தார்.

ஆனந்திபாய் அமெரிக்காவில் மருத்துவம் படிக்க உதவி செய்வதற்கு ராயல் வைல்டரை சம்மதிக்க வைப்பதில் தியோடிசியா முக்கியப் பங்கு வகித்தார். அவரது விடாமுயற்சியின் பலனாக ஆனந்திபாய்க்கு ஃபிலடெல்பியாவில் உள்ள பென்சில்வேனியாவின் மகளிர் மருத்துவக் கல்லூரியில் (WMCP) மருத்துவம் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது .

சேராம்பூர் கூட்டம்:

அமெரிக்கா செல்லும் முன் மேற்கு வங்கத்தில் உள்ள சேராம்பூர் கல்லூரிக் கூடத்தில் ஆனந்திபாய் மக்களைக் கூட்டி அவர்களிடம் தனது மருத்துவராகும் கனவையும் அதை நிறைவேற்றத் தானும் தனது கணவரும் சந்திக்கும் பிரச்சனகளையும் விளக்கிப் பேசினார். இந்தியாவில் பெண்மருத்துவர்களின் அத்தியாவசியத்தையும் இந்தியாவில் பெண்களுக்காக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்ற தனது குறிக்கோளையும் விளக்கிப் பேசினார். கிருத்துவ மதத்திற்கு மாறமாட்டேன் என்று உறுதியும் அளித்தார். அவரது பேச்சு நாடெங்கும் பரவி அவருக்குப் பண உதவியும் வர ஆரம்பித்தது.

அமெரிக்கப் பயணம்:

1883 இல், பத்தொன்பது வயதான ஆனந்திபாய் ஜோஷி தனது மருத்துவப் படிப்பைத் தொடர, கொல்கத்தாவிலிருந்து நியூயார்க் நகருக்குக் கப்பலில் பயணித்தார். தியோடிசியா நியூயார்க்கில்அவரைவரவேற்றார்.பெண்கள்மருத்துவக்கல்லூரியின்(பென்சில்வேனியா) தலைவரான ரேச்சல் போட்லி ஆனந்திபாயின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு மருத்துவம் படிக்கும் வாய்ப்பை வழங்கினார்.

மருத்துவப் படிப்பு:

அமெரிக்காவின் கடுங்குளிரும் பழக்கமில்லாத உணவும் அவரது உடல் நலத்தை மிகவும் மோசமாக்கின. காசநோயால் அவதியுற்றார். அத்தனை இடர்பாடுகளையும் தாண்டி ஆனந்திபாய் மார்ச் 11, 1886ல் மருத்துவப் பட்டம் (எம். டி) பெற்றார். அவரது ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு - "ஆரிய இந்துக்களின் தாய்மை மருத்துவம்."மருத்துவராகப் தேர்ச்சி பெற்ற அவருக்குப் பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர். விக்டோரியா மகாராணி வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியா வருகை:

1886ன் இறுதியில் ஆனந்திபாய் இந்தியாவிற்குத் திரும்பினார். இந்தியாவில் அவருக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது. கோலாப்பூர் சமஸ்தானத்திலிருந்த ஆல்பர்ட் எட்வர்ட் மருத்துவமனையில் பெண்கள் மருத்துவப்பிரிவின் பொறுப்பு மருத்துவராக நியமிக்கப்பட்டார்.

இறப்பு:

பெப்ரவரி 26, 1887ல் 22 வயதுகூட நிரம்பாத ஆனந்திபாய் காலமானார். இந்தத் துயரச் செய்தி கேட்டு பலரும் அதிர்ச்சி அடைந்தனர். அவரது அஸ்தி தியோடிசியா கார்பெண்டருக்கு அனுப்பப்பட்டது. தியோடிசியா அதனை நியூயார்க்கில் தங்களது குடும்பக் கல்லறைத் தோட்டத்தில் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கௌரவங்கள்:

ஆனந்திபாயின் பங்களிப்புகள் பல்வேறு வழிகளில் கௌரவிக்கப்பட்டுள்ளன. அவரது நினைவாக இந்திய அரசு ஒரு நினைவு தபால் தலையை வெளியிட்டுள்ளது. வருங்காலச் சந்ததியினரை ஊக்குவிக்கும் வகையில் பல விருதுகளும் இவரது பெயரில் வழங்கப்பட்டு வருகின்றன.

1888ல் கரோலின் வெல்ஸ் ஹீலி டால் எழுதிய ஆனந்திபாயின் வாழ்க்கை வரலாறு,

தூர்தர்ஷனில் வெளிவந்த இந்தித் தொடர் - ‘‘ஆனந்தி கோபால்’’,

ஸ்ரீகிருஷ்ண ஜனார்தனன் ஜோஷியின் மராத்தி புனைவுப் புதினம் ‘‘ஆனந்தி கோபால்’’ போன்ற படைப்புகள் ஆனந்திபாயின் வாழ்க்கையை மையமாகக் கொண்டவை.

முடிவுரை

ஆனந்திபாய் கோபாலராவ் ஜோஷியின் வெற்றி இந்தியப் பெண்களுக்குக் கல்வியின் அவசியத்தை இன்றளவும் உணர்த்துகிறது. பாகுபாடுகளை எதிர்கொள்ளும் எண்ணற்றப் பெண்களுக்கு அவர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார் . ஆனந்திபாய் பெண்களின் உரிமைகளுக்காகத் தீவிரமாக வாதிட்டவர். இந்தியாவில் பெண்களின் ஆரோக்கியம் மற்றும் கல்வியை மேம்படுத்த பெரிதும் பாடுபட்டவர். பெண்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டால் அவர்கள் தடைகள் யாவையும் எதிர்கொண்டு சாதிக்க முடியும் என்பதை அவர் செய்த சாதனைகள் நிரூபிக்கின்றன.

ஆனந்தி

சம்சுல் ஹுதா பானு

மண்ணெண்ணெய் ஸ்டவ் மினுக்...மினுக் என எரிந்து கொண்டிருந்தது, சீவன் செத்துப் போனது மாதிரி எரியிது, திரியைக்கசக்கி ஏத்தி விட்டு, சீமைத்தண்ணிய(மண்ணெண்ணெய்) ஊத்தனும், வெறகு அடுப்புல பாக்குற வேலையோட (இ)எடப்பட்ட வேலைகளை சீமைத் தண்ணி அடுப்புல முடிக்கலலாமுன்னா இதுக்கான வேலையையும் பாத்தாத்தேன் முடியும்.சரி,சரி கொடியடுப்புல கொஞ்சம் வேலையை முடிப்போம் என அடுப்பில் எரிந்த விறகை கொடியடுப்புப் பக்கம் திருப்பிவிட்ட ஆனந்தி, மண்ணெண்ணெய் அடுப்பில் உள்ள காபிப் பாத்திரத்தை கொடியடுப்புக்கு மாத்தி அடுப்பை ஊதியணைத்தாள். ஆனந்தி ஊதியதும் ''படக்'' என அணைந்தது அடுப்பு. திரிலாம் சாம்பலாப் போச்சு, அதுனால ஊதுனதும் அணைஞ்சுருச்சு இல்லைனா, திரியை இறக்கி, ஊது..ஊதுனு ஊதனும் என தனக்குத் தானே புலம்பியவாறு விறகு அடுப்பில் உள்ள இட்லிப் பானையில் கொதித்துக் கொண்டிருந்த வெந்நீரில் இட்லிமாவை ஊற்றி வைத்த இட்லித் தட்டுகளை இட்லிப் பானைக்குள் இறக்கினாள்.

கொடியடுப்பில் கொதித்த பாலில் டீத்தூளைப் போட்டு கொதிக்கவிட்டு இறக்கி, வடிகட்டி, அரை இனிப்பு சேர்த்து குவளையில் ஊற்றி, மாமனாருக்கும், மாமியாருக்கும் எடுத்துக் கொடுத்துவிட்டு வந்தவளுக்கு, சின்ன மாமியாரின் ஹீனமான தனது குரலால்''ஆனந்தி''-என அழைக்கும் ஒலி கேட்டது. இந்தா வாரேம்மா... என சின்னமாமியார் சோம சுந்தரியிடம் சென்றாள், ம்மா... எனக்கு ஒரு காக்குவளை டீத் தண்ணி தாரயா?... அப்பவே குடுத்தே டீத்தண்ணி மறுக்காவும் பசிக்கிது என்று தளர்ந்த உடலோடு, வறண்ட குரலைக் கேட்டவள்...இந்தா கொண்டாரேன்மா... என்று அடுப்பாங்கரை வந்தவள். வெந்த இட்லிகளை எடுத்து ஓலைப் பெட்டியில் அடுக்கி வைத்துவிட்டு, சின்னமாமியார் கேட்ட டீ மறுபடி போட்டுக் கொடுத்துவிட்டு, தேங்காயை உடைத்துத் திருகி, சட்னிக்கு அறைக்க சேருமானப் பொருட்களுடன் ஆட்டுக் கல்லைக் கழுவியவளுக்கு அடிவயிறும், குறுக்கும் ஒருசேர வலிக்க... மனம் ஏதோ உணர்த்த அலசிய உரலை அப்படியே வைத்துவிட்டு கொல்லைப் பக்கம் போய் வந்தாள்.

சட்னிக்கு அரைத்து எடுத்து, தாளிச்சு ஊற்றி முடிக்க...ஆனந்தி..ஆனந்தி.. சின்னவன் படுக்கையில மூத்திரம் போயி துப்பட்டியப்பூராம் ஈராமாக்கி வச்சுருக்கான், வந்து அதையெல்லாம் சுருட்டி, கொல்லையில போட்டுரு, இந்த எடத்தை தொடச்சுவிட்டுட்டு எனக்கு டீயைப் போடு..என்ற தொடர் வேலை வாய்ப்பைக் கொடுத்த கணவரிடம் சென்று ''நீங்க போயி கொல்லைக்கிப் போயி பல்லை வெளக்கிட்டு வாங்க டீப் போட்டு

வக்கிறேன், இதைலாம் சுத்தம் பண்ணுரேன் எனக் கூறியவாறு திரு..திருவென விழித்த சின்ன மகனை அணைத்து, உச்சாப் போயிட்டீயா?... சரி,சரி நாளையில இருந்து உச்சா வந்தா அம்மாவைக் கூப்புடனும்... என்றவளிடம் ..ம்மா நாந் தூங்கும்போது உச்சா வாரதே தெரியல...நான் எப்புடிமா உன்னக் கூப்புட?... என்றவனைச் சிரித்தவாறு சாமி கிட்ட நாந் தூங்கும்போது உச்சா வந்தா என்னைய எழுப்பு சாமினு சொன்னா எழுப்பிடும்,சாமி எழுப்புனதும் நீ என்னக் கூப்புடு அம்மா வாரேன் என்ற அம்மாவை..மேலும்,கீழும் பார்த்து... நாஞ் சாமியவே உச்சாப் போகக் கொல்லைக்கிக் கூட்டிப் போறேன் சாமிதானே என்னை எழுப்புது...என்றவனை சாமி எழுப்பிட்டுப் போயிடும்...உன்னை மாதிரி நிறையப் புள்ளைகளை எழுப்பனும்ல..அதனால சாமி எங்கிட்டச் சொல்லுச்சு நான் எழுப்புறேன். உம் மகனை நீ கொல்லைக்கிக் கூட்டிட்டு போனு சொல்லுச்சு..என்ற அம்மாவிடம் சரி சாமியும் பாவமுல... அது எழுப்புனதும் உன்னக் கூப்புடுறேன் என்றவனை..பல்லு விளக்கிக் குளிக்க வைக்கக் கூட்டிப் போகும்போது பெரிய மகனை, ஸ்ரீராம் எந்திரிப்பா... நேரமாச்சு பல்லு வெளக்கி, குளிச்சுச் சாப்புட்டு பள்ளிக்கூடம் போகனும் வா...வா... எனச் சின்ன மகன் சாய்ராமை கூட்டிப் போனாள்.

உருணித் தண்ணி கொல்லைக்கிப் போயிட்டு வந்து கழுவ,கெணத்துத் தண்ணிக் குளிக்க, புழங்க நல்ல தண்ணீர் குடிக்க, சமைக்க என ரெட்டைக் குடமாச் சொமந்து நேத்து ராத்திரி அள்ளியாந்து ஊத்தி வச்சது...அண்டா,செம்புச்சட்டி,சருகச்சட்டி,சிமெண்டுத் தொட்டிலாம் நெறஞ்சு இருந்ததைப் பார்த்தவள் நெஞ்சும் நிறைந்தவளாக சின்ன மகனுக்கான சேவையில் இறங்கி, அடுத்த டீப் போட அடுப்பைப் பற்ற வைத்தாள்.

மகன்களுக்கு அப்படியே பாலைக் காய்ச்சியவள், அதிகாலையில் பாலூத்த வரும் முத்தாத்தாவை நினைத்துக் கொண்டாள். வீட்டு வேலையே பொழுதுக்கும் சரியா இருக்கும் அவளுக்கு என்னைவிட, முத்தாத்தா பாவம். வீட்டு வேலை அம்பூட்டையும் பாத்து, மாட்டுச் சாணியள்ளி, தொழுவம் கூட்டி, மாட்டுக்கு இரை போட்டு, பாலைப் பீய்ச்சி வீட்டுக்கு வீடு அவர்கள் தேவைக்கேற்று அளந்து ஊற்றி மொதநாளே பால் வாங்குற வீடுகள்ள இருந்து வந்த தூக்குச் சட்டிகள்ள பாலை ஊத்தி அந்தந்த வீடுகளுக்குக் குடுத்து... "அம்மாடி" எனச் சொன்னவளின் காதுகளீல் "உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு"- என்று எங்கோ ரேடியாப் பொட்டியில் பாடும் பாடல் ஒலி காற்றில் அலைகளில் வந்து ஆனந்தி காதுகளைத் தழுவியபோது "தனது தீட்டுத் துணி நனைந்து அதன் ஈரம் உள்பாவாடை, தாண்டி சேலைக்கு வந்துவிடும் என்ற உணர்வைப் பெற கொல்லைக்கு ஓடியவளின் காதுகளுக்கு வெளியில் இருந்து மாமியார் "ஆனந்தி விருந்தாளி வந்துருக்காக, சூடா டீயைப் போடு" என்ற குரல் காதுகளில் கேட்டது.

இதுவரை போட்ட டீயில் ஒரு வாய் கூட நீ குடிக்கவில்லை என்று ஆனந்தியின் வயிற்றுப் பசி அவளிடம் சொன்னாலும், விருந்தாளிக்கு டீ போடனுமே, வீட்டுக்காரரைக் கடைக்கி அனுப்பனுமே, மகனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பனுமே, மத்தியானச் சோறு, குழம்பு ஆக்கனுமே என்ற பதைப்பதைப்பதுடன் தீட்டுத் துணி டப்பாவை கைகளில் எடுத்தாள்.

ARANYANI

VIJENI

CHAPTER - 2

It is your life; everyone else are just a part in it!

Water, Water, Water everywhere!

The water closed in, filling her with a deep dread. All she saw was black as she fell deeper and deeper into the ocean. Her heart pounded rapidly in panic. Her lungs felt as though they had been set on fire. Eyes went wide, hands and legs kicked frantically, and her body screamed for oxygen. She kept fighting, but felt like her head was about to explode, she had to breathe. NOW!

After several painful moments, one last bubble swam out from her mouth for freedom. The blackness began to cloud her vision, her thoughts, her soul…

CRASH! A shrill jangle of coins echoed in the entire house.

Aarushi woke up with a jolt and sat upright on her bed. The back of her neck was damp and instantly cooled, sending chills down her spine. She nosed around and felt a rush of relief - it was the same dream again.

A gleam of sunlight peeked through the gaps of the curtains and created scattered patches of light on the tiled floor. She drew in a deep breath and looked at the leaves that gently rustled outside the window. Troubled thoughts began to plague her mind, and she gently massaged her head.

When the dream would stop occurring, is a question she could never answer. Could anyone help her? She clucked her tongue disapprovingly; it would only make them anxious. Already her family was worried about her after the accident — no. She didn't want to think about it. Not now, not today. She sat on her cot for a minute or two and then got up and folded her blanket.

Lazily stretching her lean figure, she stepped outside her room. Crossing the staircase landing, she walked into Valliammai's room. Immediately, Betty's eyes darted towards her and looked remorseful for what he had done. The tiled floor was covered with coins, which her grandmother had been saving to deposit in the offering box of a temple she was going to visit in a month.

"Appatha is going to be mad!" Aarushi collected the scattered coins from the floor and cleared the remains of the broken mud pot. "Why did you climb on that table? You naughty boy!" She picked the dog up and cuddled for a few seconds.

"Betty, why am I getting that particular dream every single day?" she asked, and his innocent doggy eyes looked back at her.

"It has been six months, even the doctors say I am cured, but my broken head keeps reminding me of something." He licked her hand, showering ultimate love towards her. "And I can't even tell this to anyone!"

Betty climbed over her shoulder, brushing his adorable golden brown fur against her skin. "Yeah yeah, I can tell you and you will be there when I need you."

She'd had trouble sleeping since the moment she had settled in this house. Though nightmares were a part of the reason, she couldn't shake the uncanny feeling of being watched. But whenever she turned, there would not be anything that would explain her feeling. Sometimes she had wondered if she was losing her mind.

The alarm clock buzzed. She sprang up towards her room and started getting ready for work. After a quick bath, she stood in front of the wooden almirah looking through the neatly stacked dresses. Taking out a pink kurta from one of the hangers, she stared at it for a few seconds, remembering the first time she wore it.

"Pa! Where is my yellow kurta?"

"Are you asking about that checked kurta?" Blustered Krishnan's voice from the living room.

"Yes! That yellow checked one! Did you give it for ironing?"

"It has become old, dear! I have thrown it."

"What? Thrown?" Letting out a loud sigh, Aarushi stomped towards her father. "Now, what will I wear for the celebration?"

“Is it the only kurta that you have for the outing? There are lots in t—”

“That was my favourite!” Aarushi interrupted, impatiently. “Without asking me why you threw it, Pa?”

“Because hereafter this is going to be your favourite!” Her father took a cardboard box from underneath his armchair and held it out to her.

A sudden flash of happiness brightened Aarushi’s face. She excitedly opened the box and revealed a beautiful pink kurta, the dress she had yearned to buy for a long time. “Thanks a lot, Pa!” She put her arm around Krishnan and kissed him on his right cheek.

“Is this a bribe for me to get you another dress?” Krishnan laughed, pushing his black-rimmed glasses up his sharp nose.

Memories of the past rose inside her. The outing that she had enjoyed in her native was the only clear remembrance when she woke after her surgery. Her family informed that she had spent almost a year in Varaagur, in this same house, yet, nothing related to it was in her head. The thought made her uneasy, and she knew she had no choice but to live with it.

Adjusting the kohl in her eyes, she looked at herself in the mirror. An elegant angular visage resembling no one from her family stared back at her. Again, Aarushi saw a flash of movement, but when she turned, there was nothing at all. Letting out a sharp little breath, she walked to the living room, and Betty followed her down the stairs.

As she crossed the kitchen, she noticed the copper puja items that were neatly arranged on the bamboo table. It was the usual routine of her grandmother. Every Friday, she would wake up early, wash the items with tamarind, arrange them for drying, and then would leave to the temple. After coming home, she would do puja for the whole day.

It also meant Aarushi had to go to meet her grandmother, an attempt by Valliammai to make her visit the temple at least a day in the entire week. It was not that Aarushi was an atheist. However, she was the believer of one’s spiritual god, the soul, which is the ultimate power than religions, or different forms of god.

The conversations with her grandmother would always involve the debate of worshipping forms of god and Aarushi would control her words, to stop it from hurting her. A smile crept over her and she shifted her focus back to the half-eaten idli on her plate and wondered about the magic in her grandmother’s hands that produced soft fluffy idlis every single time!

***

Aarushi walked in the mud path towards the temple, dedicated to Goddess Shakthi, in her fire form. This was her grandmother's most visited temple. Valliammai would always say, "A god could be easily pleased if they were praised when they were angry," and Aarushi would reply, "Anyone would!"

The temple was barely painted. Still, it displayed an aura of peacefulness. Women of all ages were seen walking around, lighting the mud lamps, offering prayers, and silently chanting slokas. The aromatic smell of the incense stick filled her nose, and she inhaled it deeply to relish the flavour in her nose. However, the rose and chandan flavour that her grandmother used in her home was her favourite.

Aarushi turned towards the corner and peered at her grandmother. Valliammai was sitting cross-legged on a cement slab, counting the auspicious beads in a chain while chanting slokas. The five-stoned nose stud, the big red dot on her forehead, and the jasmine flower that she had encircled around her bun reminded Aarushi of a conversation she had with her mother when she was little.

"Ma, why does Appatha always go to the temple?"

Shritha was scooping the pink flesh of watermelon from its green rind. "Because that is the place she fancies. And it is always good to go to the temple, only then you will acquire positivity in life."

"Is Appatha a relative of god, Ma?" she asked, sucking the honey candy in her hand.

Her mother laughed at the innocent question. "That I do not know! But I am sure she is God to all of us!"

"GOD?" The little girl paused her licking and widened her innocent eyes.

She took the scooped pieces and started cutting them into small cubes. "Yes, Aarushi, that's how people saw her in our village. Even after thatha's demise, people did not allow her to remove her bangles, bindi, or her thaali. She was worshipped as a savoir of our village!"

Just before she could walk up to the cement slab, someone called her from behind. "Aarushi," She spun around fully and recognised Gandhimathi in a dark pink sari with matching jhumkas and chain.

"Aunty!" Her eyebrows shot high. "How are you?"

"I am good dear, how come it is not raining today?" the woman asked, looking up at the sky.

"Why, Aunty? The sun is so hot… how come it will rain?"

"I know dear, I am just joking." She chuckled at her wit. "Seeing you in the temple, I thought it would rain today."

"Aunty! I just came to meet Appatha."

The woman's gaze followed hers and she smiled. "Oh! Valliammai ma! I never noticed her."

As usual, Gandhimathi started nagging. "You have to tell me, how is it possible for your grandmother to look so young? Looks like soon she will look younger than me!"

"Ha-ha! I too don't know Aunty. Whenever I ask she always says that a peaceful mind and a god devoted soul could never grow old."

"In a way that is true too!"

"Finished with your prayers, Appatha?"

Valliammai opened her eyes. "No, Shana. I am waiting for the main Poosari."

With the mention of that name, Aarushi's lips curved. Ever since she had turned eighteen, her grandmother had started calling her by that name, but Aarushi never saw any reason behind it.

Gandhimathi tucked the end of her sari around her middle-aged-spread and sat beside Valliammai. "At last, looks like your granddaughter has started listening to your pieces of advice, Ma."

"As if she will. She came to get her Tiffin box."

"Nice plan to get her to your side, Valliammai ma." The hefty woman chuckled and started gathering the jasmine flowers into a garland.

The aarti bell tinkled inside the main altar; it meant that the decoration was complete, and the idol was ready for worship. Everyone who had been wandering in the small garden rushed inside. It also meant that Aarushi was getting late for work.

Placing the Tiffin box in her backpack, she prepared to leave. "Bless me, Appatha." She bowed down to touch her feet.

"God bless you, Shana! Before leaving, offer these flowers to god." Aarushi nodded and carefully took the brass puja basket trying not to drop the jasmine flowers from it.

Valliammai's ageing wrinkles near her eyes deepened when she saw her hands. "Shana! How many times should I tell you not to be without wearing any bangles?"

Aarushi winced at her sudden assertive voice. "So-sorry, Appatha, I forgot!"

"Nowadays, all girls are like this only, Ma." Gandhimathi shook her head, clicking her tongue in disapproval. "My daughter is not even wearing studs."

Valliammai sighed. She removed two of her glass bangles and gestured Aarushi to wear each in her hands. "See! How beautiful it looks now," she said, cracking her knuckles to the sides of her forehead.

Smiling to herself, Aarushi entered another small room that had the main deity. Goddess Shakthi was looking fierce with her red tongue out from her mouth. She had a demon's head in her left hand, a sword in the right, and a garland of skulls around her coal-black neck.

Many bowed in the form of a prayer, and a few sat with eyes closed in front of the idol. Aarushi took the flowers from the basket and placed them near the feet of the goddess. She folded her hands, closed her eyes, and whispered under her breath, "I know it is silly, but if possible keep all the good souls happy!"

***

Aarushi squeezed herself through the crowd in the subway, towards the railway station. Varaagur was a well-developed city. With its great infrastructure, it was always crowded with young boys and girls who were busy with jobs and colleges.

She turned her wrist to look at the time on her watch. Her usual train would have left. Cal was going to give her a second warning for being late fourth time in a row. Two times, she had given a convincing reason. Probably, today she can think of a better reason, unlike the one she had messed up previously.

The stationmaster retired to his room, and that meant a train had just left. She sighed and sat on the wooden bench, staring at people busily heading in and out of the station. Each of the head popping in the crowd had a story to tell, a story of love, hatred, separation, hardship, pain, suffering, poverty, loss and so much more. If anyone asked about her story, it was going to be a book that a kid had handled, torn at all places.

Suddenly, she frowned. Eyes fixed sharply on a man smiling at her from among the crowd. She turned to see if someone was behind her and gulped down silently. Before she could register things, a pair of buckled leather sandals stopped in front of her and she quickly got on her feet.

"Hey!"

"H-Hi," she replied, lifting her chin to meet the stranger. She was five feet and four inches tall, but standing next to him, she felt short. He had to be around six feet.

"Phew! At last!" He heaved a sigh of relief, straightening his crisply ironed shirt at his waist. "So, at last, here I am, just the way you told! At least now, do you believe me?"

"Sorry, I don't recognise you." Her voice sank, mentally analysing the situation. Should I tell this stranger guy about my condition, or did he mistake me for someone else?

"That's a nice one, but you need to improve your jokes," he mocked.

"No… really I—"

"Shuushhhh" he interrupted. "These many months you robbed my chance to speak with you. So, hereafter only I will talk." Leaning forward, he chuckled and a black metal chain fell out from his opened shirt button, revealing a letter V pendant.

"I have something for you." The bronze-skinned stranger took out a mud pot from the bag that he was holding and held it to her.

"You have surely mistaken, I am not who you assume."

"Enough now! See, this cute little guy is born on the same day as you," he said, pointing at the sapling grown out from the sand in the pot. His thick eyebrows arched high and the calm face suddenly brightened like a thousand watts bulb. "Happy Birthday!"

Aarushi stood dumbfounded. Tiny droplets of perspirations had formed on her forehead. He was right! It was April 20, indeed the day she was born, but no one knew except her family. Since her childhood, her mother had asked her not to celebrate the day she was born. Instead, they would celebrate her star birthday. She knew her mother had reasons behind it and never intended to ask her why.

When she hesitated to take the pot, he insisted, "Please, take it…" He shoved it into her hands. "Please, please Aarushi."

He knows my name! I should tell him everything before he jumps to conclusions.

Interrupting their conversation, there was a loud station announcement regarding a train leaving in two minutes from platform four. She tapped her foot against the cement platform for the announcement to finish. Without any delay, it started all over again in another language. Damn it!

“Aarushi,” he yelled, trying to be heard over the announcement. “I got to catch that train. I am so sorry I cannot stay any longer.”

“Bu-but I-I-don’t—”

Overriding her protest, he continued, “You know I have to dig a few more pits.” He shrugged his muscular shoulders, probably attained after vigorous exercises.

“Lis—”

He looked straight into her, and for unknown reasons, she stood entranced by his small sparkly eyes. “Take care of the little guy. I got it especially for you.”

He waved at her before pushing his way through the throng. She looked down at the pot in her hand. What the hell happened a minute ago?

She shook her head, unable to find an answer. Her eyes spotted a small note hanging around the leaf. With great restriction, she opened it.

“Marry me soon, waiting to live with a person beautiful from the face to the heart.”

Gosh! I am in trouble!

எத்தனை கசப்புகள்
எத்தனை வலிகள்
எத்தனை ஏமாற்றங்கள்
அனைத்தையும்
மௌனமாய்...
விழுங்கி விட்டு...

ஒரு மனிதன்
"அன்பை மட்டுமே"
தன் மூச்சுக் காற்றாய்
இன்னும்...
சுவாசிக்கிறான் என்றால்...

எதிர்க்கொள்ளும்
இந்த ...
அழகிய வாழ்வு தான்
எத்தகைய அடர்த்தியானது...?!

- க.சோமசுந்தரி.

உரம் அருளும் குப்பை நாச்சியார் – தவ்வை

முனைவர் திருமதி ராஜேஸ்வரி,

ஒரு காலத்தில் கதைகளை விரும்பும் ஒரு பையன் இருந்தான். அவனது பெயர் டோங் தவ்வை என்று இலக்கியத் தமிழிலும் ஜேஷ்டா தேவி என்று வடமொழியிலும் குப்பை நாச்சியார் என்று நாட்டார் வழக்கிலும் குறிப்பிடப்பட்ட தெய்வம் எட்டாம் நூற்றாண்டில் தனி சந்நிதி பெறும் அரசச் செல்வாக்குடன் விளங்கி பதிமூன்றாம் நூற்றாண்டில் மூதேவி என்று இகழப்பட்டது. இத்தெய்வத்தின் வரலாறு மனித குல வரலாறு தொட்டு தமிழக மண்ணின் வரலாற்றுடன் இணைந்ததாகும்.

நாச்சியார் என்ற சொல் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தோன்றியது. அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், உயர்ந்த குடிப் பெண்கள், படித்த பெண்கள் போன்றோர் நாச்சியார் என்ற அடைமொழியுடன் வழங்கப்பட்டனர். நாச்சியார் அம்மன், நாச்சியார் திருமொழி, போன்று தெய்வங்களைக் குறிக்கவும் நாச்சியார் என்ற சொல் வழங்கப்பட்டது. வயலுக்கு உரமாக விளங்கும் குப்பைக்குரிய தெய்வத்தை நாட்டுப்புற வழக்கில் குப்பை நாசியார் என்று அழைத்தனர். குப்பை குழியில் விளக்கேற்றி மக்கள் வழிபட்டனர். அடுப்பங்கரை நாச்சியார், துடுப்புக் குழி நாச்சியார் என்றும் வழக்குகள் உண்டு.

மண் வளம் செழிக்கவும் மக்கள் நலம் காக்கவும் உதவும் வேளாண்மைத் தொழிலில் உரமிடுதல் பயிர் வளர்ச்சிக்கு உற்றதுணையாக விளங்குகிறது. இன்று ரசாயன உரங்கள் பெருகி பயிர் வளத்தையும் சத்தையும் கெடுத்து வருவதால் பலரும் இயற்கை உரம் மற்றும் பஞ்சகவ்யத்துக்கு மாறி வருகின்றனர். மாட்டுச் சாணியின் மகத்துவம் பற்றிய விழிப்புணர்வு பரவி வருகிறது. நெகிழ்மம் எனப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பெருகியிருப்பதால் அவை மண்ணில் கொட்டப்படும் பொது மட்குவதில்லை எனவே மட்கும் குப்பை, மட்காத குப்பை எனப் பிரித்துத் தாருங்கள் என்று தூய்மைப் பணியாளர்கள் கேட்டு தனித்தனியாக வாங்கிக் கொண்டு போகின்றனர். இன்றிருக்கும் குப்பை பற்றிய அறிவு அந்தக் காலத்திலும் நமது மக்களுக்கு இருந்தது. அவர்கள் வீட்டின் ஓரத்தில் ஒரு குழியை வெட்டி அங்கு மாட்டுச் சாணியை கொட்டி வைத்தனர். மரத்தில் இருந்து உதிர்ந்த இலை, தழை, நறுக்கிய காய்கறியின் தோல், விதை, கோட்டை போன்ற மட்கும் குப்பைகளைப் போட்டு வைத்தனர். இவை நன்கு மட்கிய பிறகு வண்டிகளில் அள்ளிச் சென்று நிலங்களில் உரமாகப் போட்டனர். சில இடங்களில் தீ

வைத்து எரித்து சாம்பலை அள்ளிச் சென்று வயல்களில் தூவினர். கார்த்திகைத் திருநாள் அன்று அந்தக் குப்பை குழிக்குத் தீபம் ஏற்றி வழிபட்டனர். அங்கு எழுந்தருளித் தமக்கு அருள் பாலிப்பவளைக் குப்பை நாச்சியார் என்று அழைத்தனர்.

வேளாண்மைத் தொழிலில் விதைக்கு இந்திரன், மழைக்கு மாரி, ஏறி, குளம் கண்மாய்க்கு ஐயனார், கலப்பைக்குப் பலராமன், உழும் கலப்பை மற்றும் நெல் குத்தும் உலக்கைக்கு வராகி மற்றும் உரத்துக்கு தவ்வை எனப்படும் குப்பை நாச்சியாரை வணங்குவதைத் தமிழர்கள் தமது வேளாண் மரபாகக் கொண்டிருந்தனர்.

உரத்துக்குரிய குப்பை நாச்சியார் தவ்வை

மருத நிலத்தில் வாழ்ந்த வேளாண் பெரு மக்கள் மண்ணிற்கு மேலும் வளம் ஊட்ட மாட்டு சாணம், இலை, தழை, ஆட்டுப் புழுக்கை, போன்ற இயற்'கை கழிவுப் பொருட்களை நிலத்திற்கு உரமாகப் போட்டனர். அன்றாடம் கூட்டிப்பெருக்கும் குப்பை கூளங்களை குழியிலிட்டு கழிவுநீரைப் பாய்ச்சி தொழு உரமாக்கினர். இதுவே மக்களுக்கு அன்று கிடைத்த இயற்கை உரமாகும். இதனால் மணிச்சத்து உரம் கிடைக்கும். எனவே மக்கள் குப்பைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினர். குப்பைக் குழியை உரக்குழி என்ற வகையில் தெய்வமாகப் போற்றினர்.

தவ்வை குப்பையைக் கூட்டி அள்ளப் பயன்படுத்தப்படும் விளக்குமாறை [துடைப்பத்தை] தன் கையில் வைத்திருப்பாள். கூட்டிய குப்பையை அள்ளிச் செல்ல பொதி சுமக்கும் கழுதையையும் கொண்டிருப்பாள். இறைவன் அளித்த இயற்கைத் தூய்மையாளராக விளங்கும் காகத்தை தமது கொடியில் வைத்திருப்பாள். அருகில் காளையனைப் போன்ற குமாரனையும் கலையழகு பொருந்திய ஒரு குமாரத்தியையும் வைத்துக்கொண்டு அமர்ந்த நிலையில் காட்சி தரும் தவ்வை மூத்தவள் ஆவாள். தவ்வை என்று சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் இவளைப் புராணிகர்கள் வடமொழியில் ஜேஷ்டா தேவி என்று அழைப்பர். பாற்கடலைக் கடையும் போது முதலில் தோன்றியவள் என்பதால் இவளை மூத்தவள் என்றும் மூ[த்த] தேவி என்று சுருக்கமாகவும் அழைத்தனர். இவள் மண்ணுக்கு உரமாகும் குப்பைக்கு உரியவள். அடுத்து வந்த இளையவள் ஸ்ரீ தேவி [தான்யலட்சுமி] மண்ணின் விளைச்சலால் கிடைக்கும் நெற்கதிருக்கு உரியவள். தவ்வை மண்ணுக்குத் திரும்பிப் போகும் குப்பைக்கு உரியவள் இலக்குமி மண்ணிலிருந்து வெளிவரும் கதிருக்கு உரியவள். இருவருமே வேளாண்மைக்கு முக்கியமானவர்கள்.

தவ்வை என்ற சொல் தமக்கை என்பதைக் குறிக்கும். இதன் எதிர்ச்சொல் தங்கை என்பதாகும். அவ்வை என்றால் வயதில் மூத்த பெண்மணி. இத்துடன்-ஆர் விகுதி சேர்க்கும் போது அவ்வையார் என்றாகிறது. தவ்வை என்பதும் தமக்கை என்பதும் ஒரு பொருள் தரும் இரு சொற்கள். தமக்கை என்பதில் இருந்து 'தம்'''' என்ற முன் ஒட்டு [prefixprefix] விலக்கப்பட்டு அக்கையார், அக்கச்சி [எதிர்ச்சொல் -தங்கச்சி], அக்கம்மா என்ற சொற்கள் வந்தன. ஆக தவ்வை எனபது நல்ல தமிழ்ச் சொல்.

தவ்வை ஆதி மனிதகுலத்தின் அக்கா - அம்மா அல்ல.

தவ்வையின் உருவம் அவள் வைத்திருக்கும் பொருட்கள் அவளது செயல்பாடு ஆகியவற்றை ஆராய்ந்தால் அவள் மனித குல வரலாற்றின் வேட்டைச் சமூகத்தின் பிரதிநிதியாகத் தோன்றுகிறாள். கொற்றவை கொலைத் தெய்வமாகக் காட்சி தருகிறாள். ஆனால் தவ்வை குழுவின் தலைவியான அக்காளாக விளங்குகிறாள். இன்றும் மலை வாழ் மக்களிடம் அச்சமுகத்தின் மூத்த பெண்ணை அக்கா என்று அழைக்கும் பழக்கம் தான் இருக்கிறதே தவிர அம்மா என்பதில்லை. தவ்வை தாய்த்தெய்வத்துக்கும் முற்பட்ட சமூகப் பிரதிநிதி ஆவாள். . அவளுடன் இருக்கும் காளையனான [மாந்தன்/குளிகன்] இளைஞனும், மாந்தி என்று புராணிகர்களால் அழைக்கப்படும் இளைஞியும் [மாந்தி] அவளது இனக்குழுவில் இருந்த ஆடவர் மற்றும் பெண்டிரைக் குறிக்கிறது. இவளுக்குப் பின் வந்த சமுகத்தில் தான் தாய் குழந்தைகள் என்ற உறவு முறை பேணப்படுகிறது. தாய்மையின் மகத்துவம் உணரப்படுகிறது.

தன் இனக்குழுவைப் பாதுகாக்கும் தலைவியே தமக்கை/தவ்வை

தவ்வையிடம் குழுவினரைப் பாதுகாப்பாக ஒவ்வோரிடத்திலும் தங்க வைத்து அழைத்துச் செல்லும் பொறுப்பு இருந்ததால் அதனை நிறைவேற்றும் பொருட்களே அவளிடம் காணப்படுகின்றன. காகமும் துடைப்பமும் தூய்மைக்குத் தேவைப்படுபவை. அவளது தூமாவதி என்ற பெயர் உலகம் அழிந்த பின்பு எஞ்சியிருக்கும் புகையை குறிக்கவில்லை. குழுவாகத் தங்கியிருக்கும் இடத்தில் குப்பைகளை கூட்டி எரிப்பதால் உண்டாகும் புகையைக் குறிக்கிறது. இக்கருத்தை நாம் இன்று வரை தமிழகத்தில் பின்பற்றும் குப்பை நாச்சியார் வழிபாட்டு நடைமுறைகளில் இருந்து மீட்டுருவாக்கம் செய்கிறோம். குப்பையில் இருந்து வரும் புகையானது, பூச்சிகளையும் அதன் முட்டைகளையும் அழித்துவிடும். கார்த்திகை திருநாள் அன்று இவளுக்கு ஏற்றப்படும் தீபமும் சொக்கப்பனை கொளுத்துதலும் அதனால் ஏற்படும் புகையும் சிறுவர்கள் சுளுந்து சுற்றுவதால் உண்டாகும் தீப்பொறியும் புகையும் பூச்சிகளை அழிக்கவே பயன்படுகிறது. ஐப்பசி கார்த்திகை மாதத்தில் பெய்யும் அடைமழையும் கனமழையும் பூச்சிகளின் பெருக்கத்துக்கு காரணமாக அமைகிறது. எனவே புகை உண்டாக்குதல அவசியமாகிறது. எனவே தவ்வை அல்லது அக்காள் என்பது ஆதி சமுதாயத்தின் தலைவியை குறிக்கும் சொல்லே தவிர தரித்திரம், பீடையைக் குறிக்கும் சொல் அல்ல. அக்காள், அதன் பின்பு வந்த அம்மா போன்ற சொற்களின் தலைமைத்துவக் குறியீட்டை வெறுத்த ஆணாதிக்க சமுதாயம் தமது வசைச் சொற்களில் இவ்விரு உறவுகளையும் இழிவுபடுத்தின. அதே வேளையில் தங்கை, மாமியார், கொழுந்தியாள் என்ற பெண்கள் சார்ந்த உறவுப் பெயர்களை வசைசொர்களில் பயன்படுத்தவில்லை. இக்கருத்தினாலும் அக்காள் [தவ்வை] என்ற மரபின் மேன்மையை அறியலாம்

உரத்துக்குரிய நாச்சியாராக உயர்ந்த தவ்வை

தவ்வையின் சிற்பங்கள் இன்றும் வயற்காடுகளுக்கு அருகில் காணக் கிடைக்கின்றன. இவளது சிலைகளை கோயிலில் இருந்து வெளியேற்றினாலும் கூட வேளாண் மக்கள் தமது வயல்களுக்கு அருகில் வைத்துக் கொண்டனர். அதிர்ஷ்டம் கேட்டவள் இவள் முகத்தில் விழிக்கக் கூடாது

என்று நம்பி தூக்கி எறியவில்லை. காரணம், இலை தழைளைக் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்த செயலே உரத்துக்கு வழிகோலியது. வேளாண் சமுகம் தோன்றியதும் இத் தவ்வை எனப்படும் அக்காளை மக்கள் மறந்து ஒதுக்கிவிடவில்லை காரணம் அவள் கற்றுத்தந்த சமூகப் பாடம். குப்பைகளைக் கூட்டி எடுத்து குவித்து எரியூட்டினால் அதன் சாம்பல் மண்ணுக்கு உரமாகும்; மண்ணை வளமாக்கும்; புகை பூச்சி பொட்டுக்களை விரட்டும். இதனால் மண்ணும் வளம் பெறும்; மக்களும் நோயற்ற வாழ்க்கை வாழ்ந்து நலம் பெறுவர் என்ற அரிய கருத்தைத் தவ்வையிடம் இருந்து பெற்றதால் அவளைக் குப்பை நாச்சியாராக்கி வழிபடுகின்றனர். உரத்துக்குரியவளாக குப்பை நாச்சியார் தமிழர் மரபில் வேளாண் தெய்வங்களுள் ஒருத்தியாக உயர்ந்துவிட்டாள். ஆனால் பௌராணிகம் அவளைத் தரித்திரத்துக்கு உரியவளாக்கி அவள் முகத்தில் விழிக்கக் கூடாது என்று கோயில் சந்நிதிகளில் அவல் சிற்பத்தை மண்ணை நோக்கி கவிழ்த்துப் போட்டுவிட்டனர்.

தவ்வைக்குரிய பிற பெயர்கள்

தவ்வையை நீளா தேவி, ஜேஷ்டா தேவி என்று பலவாறு அழைத்தனர். வடமொழியில் புராணிகர்கள் ஜேஷ்டா தேவி என்று அழைத்து அவளுக்கு புராணங்களில் இடமளித்தனர். ஜேஷ்டா தேவி புகை போன்றவள் உலகம் அழிந்த பிறகும் புகையாக நில்வுவாள். எனவே இவளைத் தூமாவதி என்றும் [தூமா என்றால் புகை.] தூம்ர வராகி என்றும் அழைத்தனர். சிலர் ஏழு கன்னியரில் ஒருத்தியாகவும் கொண்டு வழிபட்டு வ்ந்தனர். தலையைச் சீவி முடிக்காமல் அப்படியே ஒற்றையாக விட்டிருப்பவள் எனபதால் இவளை ஏகவேணி [ஒற்றைச்சடையாள்] என்றும் அழைத்தனர்.

சக்தி பீடத்தின் வடிவான மேரு மலையில் ஒன்பது படிக்கட்டுகள் உள்ளன. அவற்றில் தவ்வை இரண்டாம் படிக்கட்டில் இருக்கிறாள். அதாவது நவாபரனத்தில் இரண்டாவது ஆபரணம் ஆவாள்.

தவ்வையின் உருவ அமைப்பு

தமழ் நிகண்டுகள் தவ்வைக்கு மா முகடி, கரிய சேட்டை, காக்கை கொடியோள், பழையோள், யமி எனப் பதினாறு பெயர்களைக் குறிப்பிடுகின்றன. பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சிற்பக் கலை உருவாகிறது. அப்போது செதுக்கப்பட்ட தவ்வையின் சிலையில் அவள் பெரிய மார்பகங்களும் மோட்டு வயிறும் கொண்டு சற்று கால்களை அகட்டி உட்கார்ந்த நிலையில் இருப்பாள். அவளது காககொடியும் கழுதை வாகனமும் உடம் இருக்கும். ஒரு பக்கம் மாட்டுத் தலையுடன் மகன் மாந்தனும் [குளிகன்] மறு பக்கம் மகள் மாந்தியும் இருப்பர். ஒரு கையை அபய ஹஸ்தமாகவும் மறு கையில் விளக்குமாறும் வைத்திருப்பாள். அபய கரத்துடன் தோன்றுவதால் இவள் அழிவுத் தெய்வம் அல்ல; அருள் பாலிக்கும் கருணைத் தெய்வம். கொலைக்கருவி எதுவும் ஏந்தியிராத சாந்தரூபினி.

தமிழிலக்கியத்தில் தவ்வை

தமிழ்க் காப்பியங்களில் தவ்வை என்ற சொல் தமக்கை மற்றும் தாய் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது. 'கலம்புரி அகவல் தவ்வையர் [சிந்தாமணி 184], 'தாமரை தவ்வை தன்னோடும் கூடிய''' [சிலம்பு 15-8o0o] என்றும் 'பட்டோள் தவ்வை படு துயர் கண்டு'' [7-1o04], தவ்வையும் தாயும் தழியினர் [பெருங்கதை 1-33]. திருக்குறளிலும் இச்சொல் [167] இடம்பெற்றுள்ளது. தவ்வை மழைக்குரிய தெய்வமான வருணனின் மனைவியாக கருதப்பட்டாள். கொற்றவைக்கு அடுத்த நிலையில் எண்ணிக்கையில் தவ்வை என்ற சொல் மூத்தவள், பழையோள் என்ற பொருளில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் தவ்வை

.தமிழ்நாட்டில் எட்டாம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை அவள் வழிபடு தெய்வமாக விளங்கினாள். அவளுக்குக் கோயிலில் இடம் கொடுக்கப்பட்டிருந்தது. பின்னர் தெலுங்கு கன்னடம் உருது மலையாளம் பேசும் மன்னர்களின் ஆட்சி தமிழ்நாட்டில் நடந்ததனால் தமிழ் தெய்வமான தவ்வை மூதேவியாக இகழ்ந்துரைக்கப்பட்டாள். பல்லவர் காலந்தொட்டு தவ்வையை வட மொழியில் ஜேஷ்டா தேவி என்று அழைத்தனர்

பல்லவர் காலத்தில் ஜேஷ்டா தேவி வழிபாடு தமிழ்நாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்தது. காஞ்சி கைலாசநாதர் கோயிலில் தவ்வைக்கென தனிச் சந்நிதி இருந்தது. கோயில்களில் வட மேற்கு மூலையில் தவ்வை இடம்பெற்றாள். சைவ சமய எழுச்சிக்குப் பிறகு அம்மூலையில் உள்ள சந்நிதியில் கஜலட்சுமியை வைத்தனர். கோயிலின் வெளிச்சுற்றுக்குத் தவ்வையை இடம் மாற்றினர். நந்திவர்ம பல்லவனுக்கு தவ்வையே குல தெய்வமாக விளங்கினாள். பிற்காலச் சோழர்களும் தவ்வை வழிபட்டனர். இவர்களின் காலத்தில் கட்டப்பட்ட மேலப்பழுவூர் கோயிலில் தவ்வைக்குத் தனிச் சந்நிதி உண்டு. பிற்காலப்பாண்டியர் காலத்திலும் தவ்வை வழிபடு தெய்வமாக விளங்கினாள். மதுரைக்கு அருகில் திருப்பரங்குன்றத்தில் இவளுக்குக் ஒரு பெண் எழுப்பிய குடவரை கோயில் உண்டு. பாண்டிய மன்னன் மாறன் சடையனின் சேனாதிபதியான சாத்தான் கணபதியும் அவனது மனைவி நக்கன் கொற்றியும் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஜேஷ்டா தேவி எனப்படும் தவ்வைக்குக் கோயில் எழுப்பியதாக இக்கோயில் கல்வெட்டு தெரிவிக்கின்றது. எட்டாம் நூற்றாண்டில் தவ்வை வழிபாடு தமிழகத்தில் செல்வாக்குடன் திகழ்ந்துள்ளது. பவுத்தர்கள் தவ்வையைத் தமது தெய்வங்களில் ஒன்றாகக் கருதினர்.

பத்தாம் நூற்றாண்டு வரை தவ்வையை வளமைத் தெய்வமாக வணங்கி வந்தனர். ஆறடி உயரமும் மூன்றடி அகலமும் கொண்ட தவ்வையின் சிலையொன்று மண்ணுக்குள் புதைந்த நடுகல் வடிவில் திருப்பத்தூர் அருகே மடவார் வளாகம் பகுதியில் கிடைத்தது. இன்று சந்நிதியில் தரையில் கவிழ்க்கப்பட்டிருக்கும் சிலையைக் கொண்ட உத்தரமேரூர் கோயில் கல்வெட்டொன்று தொண்டை மன்னன் பார்த்திபேந்திர வர்மன் 1148 குழி நிலம் மானியமாக தவ்வைக்கு வழங்கியதாகத் தெரிவிக்கிறது. பழனி பகுதியில் 13ஆம் நூற்றாண்டு வரை தவ்வைக்கு வழிபாடுகள் நடத்தப் பெற்றுள்ளன.

பழையோள் தவ்வை

தவ்வையின் மிகப் பழைய கோயில் கி.பி. ஒன்பதாம் நூ'ற்றாண்டைச் சேர்ந்ததாகும். அக்கோயில் சோமாண்டார் குடி என்ற ஊரில் உள்ளது. இவ்வூர் விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி அருகே உள்ளது. இங்குள்ள சோமீஸ்வரமுடையார் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூலவரான சிவபெருமானைக் காட்டிலும் பழைய தெய்வம் இங்கு இருக்கும் தவ்வை ஆவாள்.. அதாவது தவ்வையின் கோயிலில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துள்ளனர் என்பதே வரலாற்று உண்மை..

கோயில்களில் ஜேஷ்டா தேவி

சிவன் கோயிலில் காணப்படும் மொத்தம் எட்டுப் பரிவார தெய்வங்களுள் ஒருத்தியாக ஜேஷ்டா தேவி என்ற தவ்வையும் இடம்பெற்றாள். சிவன் சந்நிதியின் உள் பிரகாரத்தில் பிள்ளையார், முருகன், சண்டிகேசுவரர், சூரியன், சந்திரன், பைரவர், சப்தமாதர் மற்றும் ஜேஷ்டா தேவியும் [இப்போது கஜலட்சுமி] இடம்பெற்றனர். பவுத்தர்கள் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்த திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம் பகுதிகளில் தவ்வைக்கு கௌயில்கள் இருந்தன என்பதை இன்றும் அதன் எச்சங்கள் வழி அறியலாம். ஜேஷ்டா தேவியை அவளது பழம்பெருமையைக் கருத்தில் கொண்டு அவளுக்கிருந்த மக்கள் செல்வாக்கினை அறிந்து பவுத்தர்கள் மற்றும் சமணர்கள் என இரு தரப்பினரும் தம்முடைய தெய்வமாகவும் வந்தனர். பக்தி இயக்கமும் சைவ சமய எழுச்சியும் இவளை மொத்தமாகப் புறக்கணித்துவிட்டன. தவ்வை ஜேஷ்டாதேவி என்ற பெயரில் துர்க்கம் சோம்பல் போன்றவற்றின் தேவதையாகக் கருதப்பட்டாள். [இனி ஜேஷ்டா தேவி குறித்து வழங்கப்படும் தகவலகளைக் காண்போம்]

புராணங்களில் ஜேஷ்டாதேவியாக தக்கவைக்கப்பட்ட தவ்வை

மூத்தவள் என்ற பொருளில் வழங்கப்படும் ஜேஷ்டா தேவியைப் பற்றி, பூர்வ காரணாகமம் மற்றும் லிங்க புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. தட்சனின் யாகத்தில் விழுந்த பார்வதி கரிந்து போய் தூமாவதியாக எழுந்தாள் என்பதும் அவள் யாகத்தில் இருந்து எழுந்த போது ஏழு உருவங்கள் எடுத்தாள்; அவற்றில் ஏழாவது தூமாவதி என்னும் கரிந்த புகை உருவம் என்றும் மூத்தவளைப் பார்வதியின் திருவுருவமாக காட்ட புராணங்கள் முயன்றுள்ளன. இதுவே அவளை வரலாற்றில் தக்க வைக்கும் முயற்சி ஆகும்.

ஜேஷ்டா தேவியின் காயத்ரி

ஜேஷ்டா தேவியை கரிந்த உருவத்தினள்; புகை வடிவானவள், சம்ஹார தேவதை, என்ற பொருளில் காயத்ரி ஜபம் இயற்றப்பட்டது.

ஓம் தூமாவத்யை வித்மஹி
ஸ்மஹாரீன்யை
தீ மஹி தன்னோ; தூமோ ப்ரசோதயாத்

ஜேஷ்டாதேவியின் வேறு பெயர்களும் இயல்புகளும்

மூதேவி எனப்படும் ஜேஷ்டா தேவி அழுக்கு ஆடை உடுத்துவாள்; சீரற்ற பற்களை உடையவள்; முறம் போன்ற வயிறும் கருத்த நிறமும் விரித்த தலைமுடியும் கொண்டவள்; காகக் கொடியும் கழுதை வாகனமும் உடையவள். இவள் கலகத்தைத் தூண்டுவாள். ஜாதகத்தில் 12இல் ராகு அல்லது சுக்கிரனும் புதனும் சேர்ந்து இருந்தால் இந்த ஜாதகரிடம் மூதேவி குடிகொண்டிருப்பாள். இவளைத் தூமாவதி, தூம்ர வராகி, யமி, ஏக வேணி என்று பல பெயர்களால் அழைப்பர்.

ஜேஷ்டா தேவி தூமாவதியான பின்னர் இவளுக்கு வேறு சில இயல்புகளும் கதைகளும் சேர்க்கப்படுகின்றன.. பிரளயத்துக்கும் பாழ் என்ற நிலைக்கும் இடையிலான வெற்றிடத்துக்கு உரியவள் தூமாவதி. தச மகா வித்யை என்ற பத்துப் பேரில் ஏழாவதாக இவள் இருக்கிறாள். விஷ்ணுவின் யோக மாயையாகவும் தூமாவதி கருதப்படுகிறாள்.

தூம்ர வராகி என்ற பெயரில் இவளைக் குறிப்பிடும் போது இவளது பிறப்பிடம் பூபுரம் எனப்படும் பதினாறாவது ஆவரணம் ஆகிறது. இவள் சிந்தாமணி கிருகத்தின் நுழைவு வாயிலில் காவல் தெய்வமாக இருப்பாள். பௌர்ணமியில் இரவு எட்டும் முதல் பத்து மணிக்குள் இவளுக்கு பூஜைகள் செய்ய வேண்டும். தேய்பிறை பஞ்சமி இவளுக்குரிய திதி ஆகும். உகந்த உணவு சர்க்கரைவள்ளிக் கிழங்கு. தூம்ர வராகியை ஜேஷ்டா தேவியுடன் இணைக்காமல் வராகியின் பண்பு நலங்களுக்குள் கொண்டு வருகின்றனர்.

ஜேஷ்டா தேவியை வழிபட ஏற்ற நாட்கள்

ஜேஷ்டா தேவிக்குரிய மாதம் ஆனி மாதம் ஆகும்; நட்சத்திரம் கேட்டை; கேட்டை நட்சத்திரத்தில் ராகு காலத்தில் வணங்கலாம். ஆனி மாதத்தின் தே பிறை சதுர்த்தசி, அமாவாசை, பிரதமை ஆகிய நாட்களில் சிறப்புப் பூசைகள் நடத்தலாம். ஒரே நாளில் மூன்று நட்சத்திரங்கள் வரும் திரிதின நட்சத்திர நாளில் அல்லது மூன்று நாட்களுக்கு ஒரே நட்சத்திரம் வரும் நாளில் ஜேஷ்டா தேவியை வழிபாடு செய்வது சிறப்பான பலன்களைத் தரும்.

ஜேஷ்டா தேவி இருக்கும் கோயில்கள்

திருக்கொண்டிசுவரத்தில் உள்ள பசுபதிச்வரர் கோயிலில் ஜேஷ்டா தேவி அனுக்கிரக தேவதையாக இருக்கிறாள். பக்தர்கள் வழிபட்டு அவள் அருளைப் பெறுகின்றனர். காஞ்சி கைலாசநாதர் கோயிலில் தனி சந்நிதி கொண்டுள்ளாள். செங்கல்பட்டுக்கு அருகில் வல்லம் வசந்திசுவரம் என்ற ஊரில் உள்ள கோயிலில் ஜேஷ்டா தேவிக்கு சிலை உள்ளது. உள்ளாவூரில் உள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலில் ஆராதனையின்றி ஜேஷ்டா தேவி சிற்பம் காணப்படுகிறது. வாரணாசியிலும் அஸ்ஸாம், கௌஹாத்தியிலும் ஜேஷ்டா தேவிக்கு கோயில்கள் உள்ளன. காஷ்மீரில் தூம்ரா காளி என்ற பெயரில் கோயில் கொண்டுள்ளாள். திருப்பதியில் நீளாதேவி என்ற பெயரில் இத்தெய்வத்துக்கு நீளாத்ரி மலையில் கோயில் உண்டு.

திருவாரூர் தியாகராஜர் கோயிலில் கமலமுனிச் சித்தர் பீடத்தின் வாயிலில் ஜேஷ்டா தேவி சிலை உள்ளது. பெரணமல்லூர் திருக்கரேசுவரர் கோயிலில் , திரு ராமசமுத்திரம் வாலீசுவரர் கோயிலில் திருமுக்கூடல் அக்த்திசுவரர் கோயிலில், மோகனூர் அசலதிச்வரர் கோயிலின் திருச்சுற்றுப் பகுதியில் இச்சிலை வைக்கப்பட்டுள்ளது. திருவானைக்காவில் உள்ள ஜம்புகேஸ்வரர் கோயிலில் சனிஸ்வரன் வைக்கப்பட்டு ஜேஷ்டா தேவிக்குச் செய்யப்படும் பூஜை சனிச்வரனுக்குச்செய்யபடுகிறது. கும்பகோணம் கும்பேசுவரர் கோயிலில் மங்களாம்பிகை சந்நிதிக்கு வடமேற்கே சிலை வைக்கப்பட்டுள்ளது. திருச்சி உய்யக் கொண்டான் மலையில் உஜ்ஜிவன நாதர் கோயிலில் வித்தியாசமான உருவ அமைப்பில் ஜேஷ்டா தேவி சிலை காணப்படுகிறது. சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் தென்மேற்கு மூலையில் ஜேஷ்டா தேவி தனிக்கல்லாகக் காட்சி தருகிறாள். கடலூருக்கு அருகே உள்ள ஓரையூர் சிவன் கோயிலில் ஜேஷ்டா தேவி சிலை இடம் பெற்றுள்ளது. . தஞ்சைக்கு அருகில் உள்ள குளித்தலையில் சிவன் கோயிலில் ஜேஷ்டா தேவி சிற்பம் காணப்படுகிறது. நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுகாவில் வழுவூர் வீரட்டானேஸ்வரர் கோயிலில் மேற்கு சுற்றில் தென் மேற்கு மூலையில் பீடத்தில் ஜேஷ்டா தேவி எழுந்தருளி உள்ளாள். இச்சிற்பம் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

செல்வநாயகி தவ்வை

எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தவ்வையின் சிற்பங்கள் பெரும்பாக்கம், தென் சிறுவலூர், பேரங்கியூர் ஆகிய ஊர்களில் காணக் கிடைக்கின்றன. இச்சிற்பங்களில் அவள் தரித்திரம் பிடித்தவள் கிடையாது. பணப்பேழையுடன் காணப்படும் செல்வநாயகி.

தவ்வையின் குழந்தைகள்

தவ்வை அல்லது ஜேஷ்டா தேவியின் அருகில் காணப்படும் இருவரை அவளது பிள்ளைகள் என்பதும்; மகன் மாந்தன் என்பதும் மகளை மாந்தி என்பதும் அவர்களும் தாயைப் போலச் சோம்பேறி எனக் கொள்வதாகும். சிலர் தவ்வையின் மகனை குளிகன் என்று நல்ல செயல்களுக்குரியவனாகக் கருதுகின்றனர். இவன் மாட்டுத்தலை உடையவனாக சிலை வடிக்கப்பட்டுள்ளான். இவனை காளையன் எனக் கொண்டு வேளாண் தொழிலில் உழவுமாடு வண்டி மாடு போன்ற காளையாகக் கொள்ள வேண்டும். தவ்வை வேட்டை சமுகத்தின் ஆதி தலைவி அதாவது அக்காள். அவள் தாய்த் தெய்வம் கிடையாது; அதற்கும் முந்திய தலைமை தெய்வம். வேளாண் மரபினர் அவளது தொன்மையைப் போற்றி உரத்தின் மேன்மை கருதி அவளைக் குப்பை நாச்சியாராகக் கொண்டு வயல் வெளிகளில் அவளது சிலையை வைத்து வணங்கினர். தொல்லியல் ஆய்வுத் துறையினர் தவ்வை அலல்து ஜேஷ்டா தேவியின் சிலைகளை வைகை, காவிரி மற்றும் பாலாற்று பகுதிகளில் மருத நிலத்தில் கண்டறிந்துள்ளனர். இவற்றை அருங்காட்சியகங்களில் கொண்டு சேர்த்தனர். தவ்வை இனக்குழச் சமுதாயத்தின் முதல் தலைவி ஆவாள். வேளாண் சமுதாயத்தினர் போற்றிய உரத்துக்குரிய தெய்வமும் ஆவாள். அவளுடன் இருக்கும் ஆணும் பெண்ணும் இனக்குழுவின் ஆண் பெண் பிரதிநிகள் ஆவர். அவளிடம் இருக்கும் பொருட்கள் அவளது குழுவினரைப் பாதுகாக்க உதவியவை ஆகும். அவள் கூட்டிச் சேர்த்து எரிக்கும் குப்பையும் புகையும் வேளாண்மைச் சமூகத்திற்கு விலை மதிப்பில்லா உரம் ஆகும். மக்களுக்கு மண்வளம் காக்கும் மணிச்'சத்து ஆகும்.

தன்னை அறிந்து தலைசிறந்து வாழ்க!

முனைவர் ஜெயந்தி

.

எல்லாவற்றையும் புறத்தே பார்த்து வியக்கும் மனிதனை தன்னையே திரும்பிப் பார்க்க வைக்கும் உயர்நிலை அறிவுதான் தன்னிலை விளக்கமாகும். மனம் எப்பொழுதும் புறஉலக ஆராய்ச்சியிலேயே இயங்கிக் கொண்டு இருப்பதால்தான் அமைதி இழக்கிறது.

ஒவ்வொருவரும் நான் யார்? என்று தன்னைத்தானே வினவி அறிந்துக் கொள்ளும்போது மனதிற்கு நுட்பமும் அமைதியும் கிடைக்கிறது.

'தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்.' *திருமந்திரம். 2355*

என்பார் திருமூலர்.

நான் யார்? நான் யார்? என்னும் வினா ஒருவரின் அறியாமையை நீக்கும் மிகச்சிறந்த வினாவாகும்.

"ஒருவன் தான் யார்? என்றும், தான் எங்கிருந்து வந்தோம்? அடுத்து எங்கே போகிறோம்? என்றும் தெரியாத நிலையில் அவன் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? இந்த அடிப்படையான அறியாமையால் அவனுக்கு ஆயிரக்கணக்கான துன்பங்கள் ஏற்படுகின்றன" என்கிறார் சிந்தனையாளர் ஓஷோ.

'நான் யார்? என்ற வினா மிகவும் ஆழ்ந்த கருத்துடையது. தன்னை அறியத் தகுதியுள்ள அளவுக்கு உயரும்போது இந்த வினா எழும்.'

'உடலாக, அறிவாக, உயிராகத் தன்னிலே தலைவனாக உள்ள மெய்ப்பொருளை உணர்வதே" தன்னிலை விளக்கமாகும்.

'தனி மனித அமைதிக்கு தன்னிலை விளக்கம்

சமுதாய அமைதிக்கு அறநெறி வாழ்வு

உலக அமைதிக்கு ஓருலக ஆட்சி முறை'

என்பதால் உலக அமைதிக்கு அடிப்படையாவது தன்னிலை விளக்கமாகும் என்பார் வேதாத்திரி மகரிசி.

தன்னை அறியும் அறிவு:

திருவண்ணாமலை இரமண முனிவர், தன் சீடர்களிடம் 'நான் யார்?' என்று தன்னையே வினவி, அறிந்துவரக் கூறினார்.

தன்னில் ஆழ்ந்து விளக்கம் பெற்றவர்கள் மற்றவர்க்கும் வழிகாட்டியாகத் திகழ்கின்றனர்.

'தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே' (திருமந்திரம் 2611)

என்பார் திருமூலர்.

துன்பத்துக்கு காரணம் ஏமாற்றம். ஏமாற்றத்திற்குக் காரணம் எதிர்பார்ப்பு. எதிர்பார்ப்பிற்கு காரணம் ஆசை. ஆசைக்கு காரணம் ஒப்பீடு. ஒப்பீட்டுக்கு காரணம் எண்ணம். எண்ணத்திற்கு காரணம் மனம் என்று பகுத்துப் பார்ப்பர்.

மனம் இயங்கும் படி நிலைகள் பத்து:

1. உணர்ச்சி, 2. தேவை, 3. முயற்சி, 4. செயல், 5. விளைவு 6. அனுபோகம், 7. அனுபவம் 8. ஆராய்ச்சி, 9. தெளிவு, 10. முடிவு

முதல் ஏழு நிலைகள் அனைத்து உயிரினங்களுக்கும் உரியது. ஆராய்ச்சியும், தெளிவும், ஆறாவது அறிவு பெற்ற மனிதனுக்கு உரியவை. தன்னை அறியும் ஆராய்ச்சி அறிவால், விளக்கம் பெற்றவர்கள் நிறைவோடு வாழ்வர்.

ஆன்மிக அறிவே அமைதி நல்கும்:

மனம் எல்லை கட்டிய நிலையில், தான், குடும்பம், சுற்றம் என்று எண்ணி, எண்ணி இன்பம், துன்பம், கீழ், மேல், சிறிது, பெரிது, லாபம், நட்டம்; என எல்லாவற்றிலும் சிக்கி திகைப்படையும். தனக்குள் விளங்கும் மெய்ப்பொருளை உணர்ந்தால் நிறைவும் அமைதியும் பெறும்.

'வரைகடந்த மெய்ப்பொருளாம் அகத்துணர்ந்தால்
அல்லலற்று அறிவு விழித்தும் விரிந்தும்
அறிவறிந்த மனநிலையில் அமைதி காணும்'

என்பார் வேதாத்திரி மகரிசி.

தானே தனக்குத் தலைவனுமாமே:

தன்னிலை விளக்கம் உயர்வை அறிக்கும். காரணமில்லாமல் எந்தக் காரியமும் இல்லை என்பதை உணர்த்தும்

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்,
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினை பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே' திருமந்திரம் 2028

என்பார் திருமூலர்.

'நன்னிலைக் கண்தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினும்
மேம்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.' நாலடியார் 248

என்கிறது நாலடியார்.

எனவேதான், 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்றார் கணியன் பூங்குன்றனார்.

உயர்ந்த உள்ளம் பெற வைக்கும் தன்னிலை அறிவு
'வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.' திரு. 595

என்பார் திருவள்ளுவர்.

அகத்தவத்தால் தன்னுள் அறிவாக விளங்கும் இறையை உணரலாம்.

'தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்ஐயும் சார்தற்கு அரியவே' திருமந்திரம் 2349

என்பார் திருமூலர்.

ஐ - தலைவன், அரசன், கடவுளைக் குறிக்கும்.

'தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே
தந்திரம் ஒன்று சொல்ல வேண்டும் வெண்ணிலாவே'

என்றார் இராமலிங்க வள்ளலார்.

'கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்;
தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள்;
உங்களுக்குத் திறக்கப்படும். (ம. 77)

என்று கூறினார் ஏசுநாதர்.

‘தன்னை அறிந்து அருளே தாரகமாய் நிற்பதுவே;
உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே.

என்றார் தாயுமானவர்.

அறிவே ‘நான்’ தெய்வம்:

‘நான் யார்?’ என்ற கேள்விக்கு விடை கண்ட முன்னோர்கள், அறிவுதான் அது. அதுவே தெய்வம் என்றார்கள். ஆராய்ந்து கண்ட உண்மையை உலகுக்கு அளித்தனர்.

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே’ (திருமந்திரம். 2596)

என்றுரைத்தார் திருமூலர்.

‘நான் எனது என்பது அஞ்ஞானம். ஆராய்ந்து அறிய முற்பட்டால், எதை ‘நான்’ ‘நான்’ என்று சொல்கிறாயோ அது. ஆன்மா தவிர வேறொன்றுமில்லை என்பதைக் காண்பாய்.’

“நான் என்பதைச் சற்று தேடிப்பார். நானை தேடிப் போனால் கடைசியில் இறைவனே வெளிவருகிறார். நான் கருவி, அவர் இயக்குபவர். இறைவன் தான் கர்த்தா, நீ செய்பவன் அல்ல என்பதை அறிந்து கொண்டு, செயலுக்குப் பொறுப்பானவன் போல் வேலைகளில் ஈடுபடு’ என்பார் இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

தூய அறிவு வடிவான இறைநிலையை வணங்குவதே கற்றலின் பயன் என்றார் திருவள்ளுவர்.

கற்ற தனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்? (திரு. 2)

‘தெய்வம் நீ என்றுணர்!’ என்றார் பாரதியார்

‘தேடித்தே டொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்’ என்றார் திருநாவுக்கரசர்

‘அறிவேதான் தெய்வம்’ என்றார் தாயுமானார்
‘அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே நான் தெய்வம்’

என்று அதற்கு விளக்கம் அளித்து, அறிவுத்திருக்கோயில் உருவாக்கி உலக அமைதிக்கு வழிகாட்டினார், வேதாத்திரி மகரிசி.

இறைநிலையே தன் மாற்றத்தில் அமைந்த பெரும் சிறப்பு 'தான்' என்பதாகும்.

மெய்ப் பொருளே ஐம்பூதங்களாகி, ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை அனைத்து உயிர்களாகவும் உள்ளதை உணர்வதே மெய்யறிவு.

''உபநிடதங்கள் 'தானேஅது' என்னும் ஒருமைக் கொள்கையை (அத்வைதம்) அறிவுறுத்துகின்றன.

அனைத்திலும் இறைவனைக் காண்பதே வேதாந்தத்தின் சாரம். நாமே கடவுள் என்ற உண்மையை உணரும் போது மகிழ்ச்சியும் நிறைவும் அடைகிறோம்.''

என்பார் சுவாமி விவேகானந்தர்.

ருக்வேதம் – 'ப்ரக் ஞாநமே பிரம்மம்''உணர்வே தெய்வம்''யஜுர் வேதம் - அஹம் ப்ரம்மாஸ்மியே பிரம்மம் 'அகமே தெய்வம்'

' ஸாம வேதம்' - 'தத்வமஸி' 'நீயே அது'

'அதர்வண வேதம்' – 'அயமாத்மாவே பிரம்மம் ' 'உயிரே தெய்வம்'

அறிவையே பிரம்மமாக குறிப்பிடுதல் காணலாம்.

சிறிதும் ஐயமின்றி தன்னுள், இறையை உணர்ந்தவரை தெய்வமாகவே கருத வேண்டும்.

'ஐயப்படாது அது அகத்து உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்ப கொளல் திரு. 702

என்பார் திருவள்ளுவர்.

அவனே தானே ஆகியது:

தேடியவனே தேடப்பட்டவன் ஆயினான். இறைநிலையே நானாக உள்ளது என்பதை உணர்ந்து வாழ்வோருக்குத் துன்பமில்லை.

'அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னெறி வல்வினை இன்றே'

என்கிறது சிவஞான போதம்

தானே அதுவான தத்துவத்தை
அறிதலே மனிதனின் சிறப்பு.
"நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே - நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்" நல்வழி - 39

என்பார் ஔவையார்.

நீயே நான்! இருப்பது ஒன்றே!

தனக்குள் விளங்கும் இறையை உணர்ந்தவருக்கு தெவிட்டாத இன்பம்.

'நானேநீ! நீயே நானாம்! இரண்டும் ஒன்றானால்
தேனின் ருசியதுபோல் தெவிட்டாய் நீ பூரணமே'
என்கிறார் பட்டினத்தார்
'சீரண்டம் அகிலாண்ட பிரமாண்டங்கள்
செனித்தவகை உயிர்தோறும் நீயாய் நிற்பாய்!'

என்பார் சித்தர் காகபுசுண்டர்

'நான் என்பதை துருவித் தேடினால் நீ வந்து விடுகிறது. அதாவது நமக்குள் இறைவனின் சக்தியைத் தவிர வேறு எதுவும் இல்லை. நான் இல்லை அவர் மட்டுமே'

'இருப்பது ஒன்றுதான். பெயரில்தான் வேறுபாடு. யார் பிரம்மமோ அவரேஆன்மா. அவரே பகவான். ஞானியின் பிரம்மம், யோகியின் பரமாத்மா, பக்தனின் பகவான் எல்லாம் ஒருவரே.'

'நான் முக்தன் என்று நினைப்பவன் முக்தனாகிறான். நான் கட்டுண்டவன் என்று நினைப்பவன் கட்டுண்டவனாகிறான்.''

என எடுத்துரைக்கிறார் இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

அறிவை அறிந்த தெளிவு:

உள்ளதை உள்ளபடி உணர்த்தும் அறிவின் தெளிவே உண்மை விளக்கம்.

'வேதாந்தத்தின் குறிக்கோளை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், மனிதனை உள்ளது உள்ளபடி அறிவது என்பதே.'

'சுதந்திரர்களாக இருங்கள். யாரிடமிருந்தும் எதையும் எதிர் பார்க்காதீர்கள். உங்கள் கடந்தகால வாழ்க்கையைச் சற்று திரும்பிப் பார்ப்பீர்களானால், கிடைக்காத உதவியைப் பிறரிடம் எதிர்பார்த்து, ஏமாந்தது உங்கள் நினைவிற்கு வரும். வந்த உதவிகள் எல்லாம் உங்களுக்குள் இருந்து வந்ததே. செய்தசெயலின் பலனையே நீங்கள் பெறுகிறீர்கள். ஆனாலும் மற்றவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறீர்கள். என்ன விநோதம்! நமது வாழ்க்கையும் வாழ்நாளெல்லாம் எதிர்பார்த்து எதிர்பார்த்து முடிவில்லாத எதிர்பார்த்தலிலேயே கழிந்து விடுகிறது.''

''எதிர்பார்ப்பதை விட்டுவிடு என்கிறது வேதாந்தம். நீ ஏன் எதிர்பார்க்கிறாய்? உனக்கு எல்லாம் இருக்கிறது. இல்லையில்லை, நீயே எல்லாமாய் இருக்கிறாய்.''

‘வெளிப்பட்டு நிற்கும் கடவுளாகிய உங்கள் சகோதர மனிதனை வழிபடவில்லை என்றால் வெளிப்பட்டுத் தோன்றாத கடவுளை எப்படி வழிபட முடியும்?’

என்பார் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர்.

இறை உணர்வு:

இயற்கையோடு விரிந்து, ஆழ்ந்து ஒன்றும் போது பெறுவது, இறை உணர்வு, அதன் மூலம் அடைவது,

1. விளக்கம்
அறிவைப் பற்றிய விளக்கம். இறைநிலையே அறிவாக உள்ளதை உணர்தல்.

2. விழிப்புநிலை
வினைப்பதிவுகள் உண்டாகாமல் எண்ணம், சொல், செயலில் விழிப்புடன் இருத்தல்

3. அன்பு
அறிந்தது சிவம், மலர்ந்தது அன்பு. எல்லா உயிர்களிடத்தும் இறையே அறிவாக இயங்கும் உண்மை அறிவதால் மனம் விரிந்த நிலை.

4. கருணை
அனைத்து உயிர்களிடத்தும் இரக்க சிந்தனையுடன் இருத்தல் இயல்பாகிறது.

5. மகிழ்ச்சி
உண்மையை உணர்வதால் கிடைக்கும் இன்பநிலை.

6. அமைதி
புலன்வழி செயல்பாட்டால், உணர்ச்சிவசப்பட்ட நிலை மாறி மனம் அமைதி பெறும்.

7. நிறைவு
முழுமையை நோக்கிய பயணத்தில் மெய்ப்பொருளை உணர்வதால் பெறுவது.

‘தன்னிலை விளக்கம் பெற்று, இறை உணர்ந்து வாழ்பவருக்கே, அனைத்துயிரும் இறையே என்ற அடிப்படையில் கடமையாற்றும் அன்பும் கருணையும் உண்டாகும். ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்ற இயற்கை நீதி விளங்கும் அறநெறியில் வாழும் பண்பு ஓங்கும். வாழ்வின் நோக்கம், வாழும்முறை விளங்கும். பிறர்துன்பம் போக்கும் தூய மனம் வளரும்’ என்பார் வேதாத்திரி மகிரிசி.

முன்னோர் ஆராய்ந்து கண்டநெறியின் சிறப்புணர்ந்து, தன்னை அறிந்து தலைசிறந்து வாழ்க!

சீன சிந்தாமணி பெருந்தெரு

மு முனைவர். எஸ். சாந்தினி பீ,
மேனாள் வரலாற்று பேராசிரியர், சென்னை தலைவர்,
.

"பண்டைய காலம் முதலே தமிழர் வாழ்வியல் வாணிப மையம் கொண்டது. தமிழர் அலைக் கடல் ஓடி த்தானே திரவியம் தேடினார்கள். இந்த கலாச்சாரம் சங்கக் காலத்துடன் நில்லாது ஒரு நீள் தொடர்ச்சியாகவே காலனி ஆதிக்க காலமான 18 ஆம் நூற்றாண்டுவரையிலும் நன்கு வளர்ந்தது. ஆங்கிலேயன் அடிமைப் படுத்தினாலும் வ.வு. சிதம்பரனார் கப்பலோட்டினாரே ... மறக்கவா முடியும். இத்தகைய வாணிப கலாச்சாரப் பின்னணியில் நாம் வந்துள்ளோம். நமது தமிழகத்தில் சீனிசிந்தாமணிப் பெருந்தெரு ஒன்று இருந்தது என்றால் விரைவில் வியப்பு வராது. அது கல்வெட்டில் உள்ளது எனும் போதுதான் வியப்பாக இருக்கும்.

சோழர் காலத்திய வாணிபம் செழித்திருந்ததை நாம் அறிவோம். தென் கிழக்கு ஆசியா வில் இருக்கும் மலேசியா, ஜாவா, சுமத்ரா, போன்றா தீவுகளுடன் வலுவான வாணிபத் தொடர்பு கொண்டிருந்தோம். மேற்கே அரபு நாடுகள், எகிப்த்து, ஈரான் என நமது வானிபச்சங்கிலி நீண்டதுடன் மேற்கே ஐரோப்பிய நாடுகளிலும் வாணிபத்தொடர்பு இருந்தது. முதலாம் ராஜராஜன் காலத்தில்(கி.பி.985-1012)மன்னர் அனுப்பிய தூதுக்குழு சீனாவிற்கு சென்றது. இத்தகவலை நீலகண்ட சாஸ்திரி தன் மாபெரும் ஆய்வு படைப்பான சோழர் புத்தகத்திலே சொல்லியுள்ளார். ராஜராஜனைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த முதலாம் ராஜேந்திரன் கடற்படை செலுத்தி கடாரம் கொண்டான் என்ற பட்டத்திற்குரியவனானான்.

'கொள்ளை கொள்ளவே சென்றான். கொள்ளையடித்த செல்வத்தில் மட்டுமே தஞ்சை, கங்கைக் கொண்ட சோழபரம் கோயில்கள் கட்டப் பட்டன. சோழர்களுக்கு நிலைப் படையும் நிதிக் கொள்கையும் கிடையாது...' என்றெல்லாம் புரிதலில்லா அயலக வரலாற்றாளர்கள் சொன்னக் கருத்துக்களெல்லாம் காற்றில் கலைந்த மேகங்களாயின.. மிகத்தெளிவாகக் கடாரத்தை கொண்டது வணிகர்கள் பட்ட தொல்லைகளை களைந்து உதவவே என்பதை நிலைநாட்டியுள்ளோம் நாம். சீனத்துடன் வாணிபம் செழிக்க வழிசெய்தார் கங்கையும் கடாரமும் கொண்ட ராஜேந்தின் எனும் கருத்து இன்றைய வரலாற்றில் பதிக்கப் பட்டுள்ளது.

இதை மேலும் ஆணித்தரமாகச் சொல்லும் ஆதாரம் தான் சீன சிந்தாமணித் தெருவைக் குறிக்கும் கல்வெட்டு. இத்தெரு அமைந்திருந்தது அன்றைய சோழப் பேரரசின் தலைநகரான கங்கை கொண்ட சோழ புரத்தின் உட்பிரிவு விக்கிரம சோழ வளநாடு. இவ்வளநாட்டில் இருந்த பல ஊர்களில் ஒன்று ஸ்ரீ காமதவல்லி சதுர்வேதி மங்கலம் எனும் அந்தனர் வாழும் ஊர். இதுவே இன்றைய உடையார் பாளையம் தாலுக்காவில் உள்ள காமரசவல்லி ஆகும். இங்குள்ள கற்கோடகேசுவரர் கோயிலில் இக்கல்வெட்டு (தென்னிந்திய கல்வெட்டு தொகுதி-34, எண் 91 {இனி தெ.இ.தொ}) காணப்படுகிறது. கங்கைக் கொண்ட சோழபுரம், காமரசவல்லி இவ்விரு இடத்திற்கும் இடைப்பட்ட தொலைவு இன்றைய நவீன பாதை வசதி வழியே கிட்டத்தட்ட 53 கி.மீ ஆகும். கல்வெட்டின் நோக்கம் சீன சிந்தாமணி பெருந்தெருவில் செக்குஆட்டி வந்த ஒரு வாணியத் தலைவர் வழங்கிய தானத்தைக் குறிக்கிறது. ஆனால் அவர் கங்கைக் கொண்ட சோழ புரத்தைச் சேர்ந்தவர். கல்வெட்டு மூன்றாம் ராஜராஜனின் காலத்தில் வெட்டப் பட்டது.

மூன்றாம் ராஜராஜனின் ஆட்சிக் காலமது.(1216-1257). முதலாம் ராஜேந்திரனின் ஆட்சி முடிந்து 200 ஆண்டுகள் பிற்பட்டது.(1214-44) 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழப்பேரரசு முடிவுக்கு வந்தது.(1279). இக்கல்வெட்டு 1234-ல் வெட்டப்பட்டது. இப்பெருந்தெருவில் வாணியத் தொடர்பிலிருந்த செக்கு வாணியத் தலைவன் மருதூர் உடையான் உய்யவந்தான் எனும் இங்கராயன் என பெயர் கொண்டவர்.ஒரு நந்தாவிளைக்கெரிக்க தினமும் ஒரு நாழி எள் எண்ணை கோயிலுக்கு வழங்கியுள்ளார். மின்சாரமின்றி வாழ்ந்த காலத்தில் விளக்கு ஒளியே பார்வை தந்தது. கோயில் விளக்குகளில் பலவகை இருந்தன. நந்தா விளைக்கானது அணையாது இரவும் பகலும் எரியக் கூடியது.

தன்னை அடுத்து வரும் வாணியத்தலைவர்கள் அனைவரும் எள் எண்ணை தொடர்ந்து தரவேண்டுமெனவும் கல்வெட்டில் சொல்லப் பட்டுள்ளது.(இத்துடன் ஒரு கூடுதல் தகவலைச் சொல்லிச் செல்கிறது இக்கல்வெட்டு. மகாபோதிபுத்தர் இவ்வணிகர்களின் குலத்தில் பிறந்தவர் என்று சொல்கிறது. அதன் உண்மைதன்மையை நாம் விவாதிக்கப் போவதில்லை).

நம் கவனத்தைக் கவருவதெல்லாம் சீன சிந்தாமணிப் பெருந்தெருக் குறித்தே. சோழர் காலத்தில் பெரும்பாலும் பெருந்தெருக்கள் ஒரு நகரத்தின் வெளிபுறத்தே மற்ற ஊர்களை இணைக்கும் தன்மைக் கொண்டது. சோழப் பேரரசின் இறுதிக் காலக் கட்டத்திலும் சீன நாட்டுடன் எண்ணை வாணியம் செய்தோமா என்று தெரியவில்லை. கோவிலுக்கு தானமாக கொடுக்கப் பட்ட ஆட்டுத் தோல் பைகளே எண்ணைக்கும் தண்ணீருக்கும் பயன்பத்தினர் என்பது மட்டும் தெளிவு. இத்துடன் கங்கைக் கொண்ட சோழபுர அகழ்வாய்வில் மாளிகை மேடு எனும் இடத்தில் சீன ஓடுகள் கிடைததை இவ்விடம் கருத்தில் கொள்வது அவசியம். சோழர்காலத்தில் நாம் சீன நாட்டுடன் வாணியத் தொடர்பு வைத்திருந்தோம் எனும் கருத்திற்கு சீன பானை ஓடுகளுடன் இக்கல்வெட்டும் இணைந்து ஆதாரமாகிறது.

சீனப் பெருந்தெருவு காணப் படுவது ஒரேஒரு கல்வெட்டில் மட்டும் அல்ல. அதற்கு துணையாக இன்னொன்றும் உள்ளது. நான்காண்டிற்கு பின் இதே மூன்றாம் ராஜராஜனின்

22 ஆம் ஆட்சியாண்டில் கி.பி 1238 -ல் இதே கோயிலில் காணப்படுகிறது (தெ.இ.தொ-34 எண்-89). இரண்டு வாணிய நகரத்தார்கள் இணைந்து இக்கோயிலுக்கு தானம் அளிக்க முன்வந்ததைக் கூறுகிறது இந்த இரண்டாம் கல்வெட்டு. சீனசிந்தாமணிப் பெருந்தெருவில் (உள்ள) வாணிய நகரத்தோரும் இக்கோயிலுக்குறிய திருமடை விளாகத்தின் திருச்சிற்றம்பலப் பெருந்தெருவில் (இருக்கும்) வாணிய நகரத்தோரும் இக்கோயிலில் சனி எண்ணைக்காப்பு சாத்தி அருள ஒவ்வொரு சனிக்கிழமையுமொரு நாளி எள் எண்ணை கொடுக்க இசைந்திருக்கிறார்கள். இரு பெரும் தெருக்களிலும் எண்ணைவாணியர் செக்கிட்டு எண்ணை தயாரித்திருக்கிறார்கள். காமரசவல்லி வாணிப நகரமல்ல; பிரம்மதேயம்.பல பிரம்ம தேயங்கள் பன்முகத் தன்மைக் கொண்ட பல சிறு பெரு ஊர்களை இணைக்கும் மையப் புள்ளிகளாக சோழர் காலத்தில் செயல்பட்டன. அவற்றில் மேற்சொன்ன ஊர் காமரசவில்லியும் அடங்கும்.இவ்வூரில் வாணிபம் நடைப் பெற்றதை உறுதியாக்கும் இன்னொறு கல்வெட்டும் உண்டு.

ஜடவர்மன் வீரபாண்டியனின் 10 ஆம் ஆட்சியாண்டில் ஒரு கல்வெட்டு (கிபி 1263) இங்கே கிடைத்துள்ளது. வாணியப் பொருட்கள்மீது வரி பெற்று அதனை இக்கோயிலின் பராமரிப்பு பணிக்காக தானமாக வழங்க. ''எழுபத்தொன்பது வளநாடு பதிணென்பூமி பதிணென் விஷையத்தோம்'' எனும் வாணிய கூட்டுறவு குழு சம்மதித்துள்ளது. பட்டியல் ஒன்று வாணிய பொருட்கள் மற்றும் அதன் மீதான வரியின் தகவலைத் தருகிறது.

அவை (தெ.இ.தொ-34, எண் 88)

புடவை கட்டு 1	¼ பணம்
மிளகு பொதி 1	¼ ,,
நிறைக்கு (?)	1 காசு
பாக்கு பொதி 1	¼ பணம்
உரசிப்பார்க்கும் பொன் 1	¼ ,,
நெல் பொதி 1	1 காசு
அரிசி பொதி 1	2 காசு
தலைசுமை 1	1 காசு

சீனசிந்தாமணிப் பெருந்தெருவைச் சொல்லும் கல்வெட்டு இரண்டுக்கும் மேலே சொல்லப்பட்ட கல்வெடுக்கும் இடைப் பட்ட காலம் கிட்டத்தட்ட 25 ஆண்டு இடைவெளியாகும் . இக்காலத்திலும் அது வாணியத் தலமாகவே செயல்பட்டுள்ளது. இக்கடைசிக் கல்வெட்டில் சாட்ச்சியாக வரும் நபர்களும் 'அஞ்ஞூற்றுவ வேளான்', 'மலைமண்டல மாதாக்க(ள்)' இருவரும் வாணியத் தொடர்புடையவர்களாக தெரிகிறது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் 10 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை 400 ஆண்டுக்கால மன்னர்கள் காலத்தில் எழுதப் பட்டதாகும்,எனவே சீன சிந்தாமாணி பெருந்தெரு இருப்பது இயற்கையே. பொ.ஆ 1063-1070 வரையிலும் ஆண்ட வீர ராஜேந்திர சோழனின் தாயார் பெயர் சிந்தாமணியாகும். இப் பெண்ணே இரண்டாம் ராஜெந்திர சோழனின்(1054-1063) மனைவியும் ஆவார்.

Hutha
Health Care Products

நலம்..தரம்..சுவை..! இதுவே எங்கள் தாரகமந்திரம்.

மசாலா வகைகள்

*மஞ்சள் தூள்
*தனி மிளகாய் தூள்
* பிரியாணி மசாலா
* 4 in 1 புளிக்குழம்பு மசாலா
* சாம்பார் மசாலா
*மட்டன் & சிக்கன் பெப்பர் தொக்கு மசாலா
* மருந்துக் குழம்பு மசாலா
* முடக்கற்றான் ரசப் பொடி
*மட்டன் & சிக்கன் குழம்பு மசாலா

ஹெல்த் மிக்ஸ்

* ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* கர்ப்பிணிகளுக்கான ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* டயாகேர் ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* பீட்ரூட் ஊட்டச்சத்து மால்ட்

பொடி வகைகள்

* பிரண்டை இட்லிப்பொடி
*பருப்பு சாதப்பொடி
*கொள்ளுப்பொடி

சைவ தொக்கு வகைகள்

* புளியோதரை தொக்கு
* கோங்குராத் தொக்கு
* தக்காளித் தொக்கு
* மல்லித் தொக்கு
* பூண்டு தொக்கு
* முருங்கைக் கீரை சூப்
* வத்தக்குழம்பு தொக்கு
*லெமன் சாதத்தொக்கு
*பிரண்டைத்தொக்கு

பிரசவ லேகியம் (On Order)

கோதுமை இடியாப்பம் மாவு

அசைவ தொக்கு வகைகள்

*வஞ்சிரக் கருவாட்டுத் தொக்கு
*மாசிக் கருவாட்டுத் தொக்கு
*இறால் தொக்கு

Mfg & Marketed by:
HUTHA HEALTH CARE PRODUCTS
Chromepet, Chennai - 600044
PH: 9025303765